விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ




# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் முஸ்லிம்களால் பெரும் பாதிப்பு

## பொது பல சேனா எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கை வாழ் சிறுபான்மை முஸ்லிம்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளனர் என பொது பல சேனா இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது. பொது பல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## மின்னல் தாக்கி தேரர் பலி

(வவுனியா)

வவுனியா -நாமல்கம ரஜ மஹா விஹாரையின் விஹாராதிபதி காலி ஸ்ரீ நந்தரத்தன தேரர் (வயது 65) மற்றும் அவருடைய உதவியாளர் (வயது 49) ஆகியோர் மின்னல் தாக்கியதில் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6.20 அளவில் இந்தச் சம்பவம் இடம்பெற

24ஆம் பக்கம் பார்க்க....

## மழை வேண்டி இன்று செந்தமிழ் யாகம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சியைப் போக்க மழை வேண்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள இராகவேந்திரா மடத்தில் இன்று காலை 7.30 மணிமுதல் யாகம் நடைபெறவுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

## புற்றுநோயின் தாக்கமே பெண்ணின் மரணத்துக்கு காரணம்

### வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புற்று நோயுள்ள பெண்ணொருவருக்கு இராணுவ பயிற்சி வழங்க முடியாது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இரா ணுவத்தின் ஏற்பாட்டில் நேற்று பி.ப 2.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு

23ஆம் பக்கம் பார்க்க....

## பளையில் நேற்று மோட்டார் செல் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பளை வண்ணாங்கேணி பகுதியிலுள்ள குளம்ஒன்றிலிருந்து 81மில்லி மீற்றர் மோட்டார் செல்லொன்றை நேற்று சனிக்கிழமை பிற்பகல் மீட்கப்பட்டதாக பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குளத்தில் புதையுண்ட நிலையில் மோட்டார் செல்லிருப்பதை பார்த்த பொதுமக்கள் பளை பொலிஸாருக்கும் அருகிலுள்ள இராணுவத்திற்கும் அறிவித்துள்ளார்.

அதனையடுத்து, பொலிஸார் இராணுவத்தினருடன் சென்று மேற்படி

23ஆம் பக்கம் பார்க்க....

## பௌத்தத்தை காக்க புதிய அமைப்பு வருகிறது

(கொழும்பு)

பௌத்த மதத்தை பாதுகாக்கும் நோக்கில் புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது.

அரசியல்வாதிகள், பௌத்த மத தலைவர்கள் உள்ளிட்டவர்கள் மற்றும் புத்திஜீவிகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்க உள்ளனர்.

பௌத்த மதத்தைச்சேர்ந்த ஆளும, எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்க உள்ளனர்.

அண்மையில் கண்டி மல்வத்து மாநாயக்கத் தேரரை ஆளும் கட்சி அரசியல்வாதிகள் சந்தித்தபோது இந்த புதிய அமைப்பு உருவாக்கம் தொடர்பிலான ஆலோசனைப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைப்பை உருவாக்குவது தொடர்பில் விரிவான முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள

23ஆம் பக்கம் பார்க்க....

## சீன ஜனாதிபதி இலங்கை வருகிறார்



(கொழும்பு)

இரண்டு நாள் விஜயத்தை

24ஆம் பக்கம் பார்க்க....

## சீனாவுக்கு 1200 ஏக்கர் நிலம்; தமிழ்க் கூட்டமைப்பு எதிர்ப்பு

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுகம் அமைந்துள்ள பகுதியிலுள்ள சுமார ஆயிரத்து 200 ஏக்கர் நிலத்தை நீண்ட கால குத்தகை அடிப்படையில் சீனாவுக்கு வழங்குவது தொடர்பான விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் கூடவிருக்கும் கிழக்கு மாகாண சபையின் இம் மாத அமர்வின் போது, இவ்விடயம் தொடர்பில் விவாதிப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் கே. துரைராஜசிங்கம் தனிநபர் பிரேரணையொன்றை சபையில் முன் வைத்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## பாக்.விமான தளங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இரண்டு விமானப் படைத் தளங்களை கைப்பற்ற இஸ்லாமியத் தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரான குவெட்டாவில் உள்ள சமுங்லி மற்றும் காலித் ஆகிய விமானப்படைத் தளங்கள் மீது 10 பேர் கொண்ட இஸ்லாமியத் தீவிரவாதிகளின் குழு நேற்றுமுன்தினம் தாக்குதல்களை மேற்கொண்டது.

இதன்போது பாகிஸ்தான் படைத்

24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழக மீனவர்களின் கைது இலங்கை அரசின் கண்துடைப்பே

### கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பினுள்ளே எல்லை தாண்டி வருகின்ற இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வவுனியாவில் நேற்று நடைபெற்ற வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொதுக்கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் அமைப்புக்களின் முக்கிய பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய வருகையைத் தடுப்பதற்

23ஆம் பக்கம் பார்க்க....

SISIL WORLD

உங்கள் கண்களுக்கு விருந்தளிக்க 40% வரை மின்சார சேமிப்புடன் கூடிய
LED,3D LED
தொலைக்காட்சி பெட்டிகள்
இப்பொழுது எம்மிடமிருந்து!



- வட்டி இன்றிய கொடுப்பனவு
- விசேட விலைக் கழிவுகள்
- 3வருட நீடித்த உத்திரவாதம்
- பண்டமாற்று கொடுப்பனவு
- விசேட பரிசுப்பொருட்கள்

இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291.
இல-125,கே.கே.எஸ் வீதி,சுன்னாகம் 021-2243335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

(C-8215)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-8209)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

## மருந்தாளர் தேவை

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு மருந்தாளர் (Pharmacist), உதவியாளர்கள் (Helpers) தேவை.

தொடர்புகளுக்கு :
0771728141
0754554778

(C-8220)

## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம்:14**
**ஆதன இலக்கம்: 38/7 (புதியபதிவு)**
**சண்டிலிப்பாய், கீரிமலை வீதி.**

வட்டாரம் 14 சண்டிலிப்பாய் கீரிமலை வீதி ஆதன இலக்கம் 38/7 (புதிய பதிவு) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை "நல்ல தண்ணீர் கிணற்றடியில் செம்பி வளவும்") என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 03 குளி 0.6 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாயைச் சேர்ந்த நாகமுத்து செல்வராசா ஆகிய இவர்களால் அறுதிஉறுதி மூலம் சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த பாலசுந்தரம் குணராசா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொ.சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1975 ஆம் இலக்க 2006.08.05 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "நல்ல தண்ணீர் கிணற்றடியும் செம்பி வளவும்" நிலப்பரப்பு 03 குளி 0.6 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் பாலசுந்தரம் குணராசா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

*(7429)*

## விபத்தில் சிக்கி வயோதிபர் காயம்

(பளை)

பளை, இத்தாவில் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற வயோதிபரை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் வயோதிபர படுகாயமடைந்து, சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பளைப பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இயக்கச்சி மாசாரைச் சேர்ந்த வைரமுத்து குமாரவேலு (வயது 63) என்பவரே இவ்வாறு விபத்தில் காயமடைந்துள்ளார்.

வயோதிபரை மோதிய டிப்பர் வாகனம் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளதாகவும் சம்பவம் தொடரபில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(எ-6)

## தேவை

**கட்டிட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா?**
மேசன்/தச்சு/பெயின்டர்/கம்பிபாஸ்/ செடலின் பாஸ் (1200/-1500)
கையுதவியாளர் (900/-1100/-)
கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் வேலைவாய்ப்பு

(C-8214)

தொடர்பு: **0775561883/0776838231**

## Pharmacy (External) Classes

Individual/Group Classes for students taking external pharmacy examination. Learn pharmacology the easy way. Pass the exam with confidence. (7403)

Classes held near
**Kuppilan Junction, Kuppilan.**
call: **Balasegaran 072 9949643**

## மரண அறிவித்தல்



## குமாரசாமி புண்ணியமூர்த்தி

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி புண்ணியமூர்த்தி அவர்கள் 16.08.2014 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (மரக்கறிக்கடை) – வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா–இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜ ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மயூரன் (லண்டன்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நடராசா தனலட்சுமி (கிளிநொச்சி), காலஞ்சென்ற விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும்ஆவார். இறுதிச் சடங்குகள் லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தகவல் :*
திருமதி நடராசா-தனலட்சுமி (சகோதரி)

**0750455171, 0774552854**
**இல.188, உதயநகர் கிழக்கு,**
**கிளிநொச்சி.**
(C-8221)

## நல்லூர்க் கந்தன் திருவிழாவை முன்னிட்டு
## மாபெரும் மலிவு விற்பனை

அனைத்து வகையான பூங்கன்றுகளும் அதிரடி விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்
யாழ்.அக்குவரியம் அன்ட் பிளான்ற் பரடைஸ்
917, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். **021 5611 242**
(7421)

# Lanka. Premium
## Pure drinking water with unique taste...

## Water is life... தண்ணீர்தான் வாழ்க்கை...



மனித வாழ்வின் அடிப்படைத் தேவகளைப் பூர்த்தி செய்யும் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகவும் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கும் தண்ணீர் அவசியமானது. தேவையான அளவு நீர் உள்வாங்கப்படாவிட்டால் உடல் நீர்த்தன்மையை இழந்து விடும். உடல் ஆரோக்கியத்திற்கு நீரிழப்பு சரிசெய்யப்பட்டு உடலின் சராசரி வெப்பநிலை பேணப்படுவதற்கு நாளென்றுக்கு 1.5 லீற்றர் தண்ணீரைப் பருக வேண்டும்.

தண்ணீர் மதிப்புமிக்க சொத்து. எமது **லங்கா பிரிமியம்** குடிநீர் 100% இயற்கையானதுடன் ஆரோக்கியத்திற்கும் சிறந்தது. எமது **லங்கா பிரிமியம்** சுத்திகரிக்கப்பட்ட குடிநீரானது இலங்கையின் ஈரவலயப் பிரதேசங்களிலிருந்தே பெறப்படுகிறது. கொழும்பிலிருந்து 50 கி.மீற்றர்களுக்கு அப்பாலுள்ள, அதிஉயர் மலைப்பிரதேசங்களான அமித்திரிகல, ருவன்வெல்ல பகுதிகளில் தோண்டப்பட்ட கிணறுகளிலிருந்தே இதற்கான தண்ணீர் பெறப்படுகிறது. இந்த பிரதேசங்கள் கடல் மட்டத்தில் இருந்து 100 மீட்டருக்கு மேற்பட்ட உயரத்திலேயே அமைந்திருக்கின்றன.

தண்ணீரின் தரத்துக்கு உத்தரவாதமளிப்பதற்காக அதனை பலவிதங்களில் நாம் பரிசீலிக்கிறோம். அதனால் நீங்கள் எதிர் பார்க்கும் தூய, சிறந்த, சுத்தமான குடிநீரை எங்களால் வழங்க முடிகிறது. **லங்கா பிரிமியம்** குடிநீர் சுகாதார விதிமுறைகளின் படி போத்தலில் அடைக்கப்பட்ட உயர்தரத்திலான சுத்தமான குடிநீர் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

**லங்கா பிரிமியம்** குடிநீர் இலங்கை சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டதோடு, (பதிவு இலக்கம் CFA/BW/28/2013-07) SLS 894 அங்கீகாரம் பெற்றது. (பதிவு இலக்கம். 674)

**எம்மிடம் 500மி.லீ, 1000மி.லீ,1500மி.லீ, 5லீ மற்றும் 19 லீற்றர் அளவுகளிலான தயாரிப்புகள் விநியோகத்திற்குத் தயாராகவுள்ளன. உங்கள் தேவைக்கேற்ற விதத்திலான நீர்த்தாங்கிகளும் எம்மிடம் உள்ளன. இவற்றில் சூடான, குளிர்ந்த மற்றும் சூழலின் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவாறு தண்ணீரைப் பேண முடியும்.**

(7430)




**Randiya Natural Water (Pvt) Ltd**
# 43, Castle Street, Colombo 08, Sri Lanka.
+94114401273 / +94773444488
Factory: Amithirigala, Ruwanwella, Sri Lanka

யாழ்ப்பாணப் பிராந்திய ஒரேயொரு ஏக விநியோகஸ்தர்
**R.J.வோட்டர் சப்ளையர்ஸ்,**
52, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
திரு.ரெங்கநாதன் 0773082957 / 0773818751
www.randiyawater.com - rengann1964@gmail.com

Crystal clear, pure drinking water with unique taste! பளிங்குபோல் தெளிவான சுத்தமான குடிநீர் இயற்கைச் சுவையுடன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் வைத்தியரின் கோரிக்கைக்கு அமையவே ஊசி ஏற்றப்பட்டது

(கொழும்பு)

பம்பலப்பிட்டி, அழகு ச_ திரசிகிச்சை நிலையத்தில் பெண் வைத்தியர் பிரியங்காவுக்கு ஏற்றப்பட்ட ஊசி அவரின் கோரிக்கைக்கு அமைவாகவே ஏற்றப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள வைத்தியரான நிமல் கமகே பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசாரணைகளில் அவர் இதனை தெரிவித்ததாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இந்த பொலிஸ் விசாரணைகளில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வகையான சத்திரசிகிச்சைகளில் எவ்விதமான தடுப்பு மருந்துகளையும் நாம் பயன்படுத்துவதில்லை. எனினும் வைத்தியர் பிரியங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க தடுப்பு மருந்து அவருக்கு வழங்கப்பட்டது.

குறித்த தடுப்பு மருந்தின் 10 மில்லிலீற்றர்களை ஊசி மூலம் நான் ஏற்றத் தயாரானேன். முதல் இரு மில்லி லீற்றர்களையும் நான் ஏற்றிய போது அவர் படுத்திருந்த கட்டிலிலிருந்து இருமிய வண்ணம் எழும்பினார். இதனை அடுத்து ஓரிரு தடவைகள் இருமிய பெண் வைத்தியர் ஒரே தடவையாக உயிரிழந்துவிட்டார் என சந்தேகநபரான வைத்தியர் நிமல் கமகே பொலிஸாரிடம் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே குறித்த தடுப்பு மருந்து உயிரிழந்த வைத்தியரின் கழுத்துப்பகுதியிலேயே ஏற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். இதற்கான காரணம் விசாரணைகளின் போது வைத்தியர் நிமல் கமகேவிடம் வினவப்பட்டுள்ளது. பெண் வைத்தியர் பிரியங்காவின் கையில் உள்ள நரம்பு சரியாக தென்படாததால் கழுத்தில் உள்ள நரம்பில் ஏற்றப்பட்டதாக சந்தேகநபரான வைத்தியர் பதிலளித்ததாக விசாரணைக் குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் அழகு சத்திரசிகிச்சை ஒன்றுக்காக தாம் இலங்கை மதிப்பில் 10 இலட்சம் ரூபா வரை அறவிடுவதாகவும் இந்த வைத்திய சத்திரசிகிச்சை முறைமையை அமெரிக்காவிலேயே தான் கற்றுக் கொண்டதாகவும் வைத்தியர் நிமல் கமகே பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (6)

## பாற்குடம் தூக்கிய முதலமைச்சர்

(கொழும்பு)

வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர, குருணாகல் நகரில் அமைந்துள்ள ஸ்ரீகதிரேசன் ஆலய பாற்குட பவனியில் இணைந்துகொண்டு பாற்குடம் தூக்கியுள்ளார்.

நாட்டுக்கு நலன் வேண்டி இந்த பாற்குட பவனி கடந்த 14 ஆம் திகதி வியாழக் கிழமை நடத்தப்பட்டது. இந்த பாற்குட பவனியில் 500 பெண்கள் கலந்து கொண்டனர்.

வேட்டிகட்டி தலைப்பாகை அணிந்திருந்த வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர, பாற்குடத்தை தலையில் சுமந்து ஆலயத்திற்கு சென்றுள்ளார். முதலமைச்சரின் இந்த நடவடிக்கை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை எதிர்க்கட்சியினரின் நகைப்புக்கும் முதலமைச்சர் தயாசிறி உள்ளாக்கப்பட்டுள்ளார். (6)

## 3 கோடி ரூபா பெறுமதியான கஞ்சாத்தோட்டம் அழிப்பு

உடவளவை, பெரமங்கட காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த 10 ஏக்கர் கஞ்சா தோட்டத்தை பொலிஸார் நேற்று முன்தினம் தீயிட்டு அழித்துள்ளனர். சுற்றி வளைக்க ப்பட்டுள்ள கஞ்சா தோட்டத்தின் பெறுமதி 10 மில்லியன் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

உடவளவை, பெரமங்கட காட்டுப் பகுதியில் வைத்து 200 கிலோகிராம் கஞ்சாவைப் பற்றப்பட்டது டன் சந்தேகநபர்கள் இருவரை கைது செய்துள்ளதாக அம்பேகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 3 கோடி ரூபாய்க்கும் அதிகம் எனவும் குறித்த பிரதேசத்தில், 10 ஏக்கர் அளவிலான நிலப் பகுதியில் பயிர் செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6)

## மரண் அறிவித்தல்

### திருமதி
### தையலம்மா நடராசா



திருநெல்வேலி கிழக்கு கெனடி லேனைச் சேர்ந்த திருமதி தையலம்மா நடராசா காலமானார். அன்னார் அமரர்களாகிய சண்முகம்பிள்ளை ஆச்சிமுத்துவின் ஏக புதல்வியும் அமரர் மயில்வாகனத்தின் சகோதரியும் அமரர் நடராசாவின் அன்பு மனைவியும் மல்லிகாபூசணிதேவி அரிச்சந்திரன், மாலா பூசணிதேவி ரூபச்சந்திரன் (பிரியராம் பேக்கறி உரிமையாளர்), இராமச்சந்தி (பாறின்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் சரவணமுத்து, கமலாதேவி, அமரர் சுவாதீஸ்வரன், வசந்தமலர் (ஆசிரியை மு/ வித்தியானந்தாக்கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் தர்மிளா மனோகரன் (ஜேர்மனி), குகநேசன் (முகாமைத்துவ உதவியாளர் RDA), பரமேசன் (ஆசிரியர் மு/ [illegible] வேலி கணேசாவித்தி), அகிலா (ஆசிரியை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி), ரஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), பிரியராம் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் , அமரர் கோசிகா மற்றும் சாளினி, மிதுஷா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று 17.08.2014 பிற்பகல் 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கெனடி லேன்,**
**திருநெல்வேலி கிழக்கு**

(7425)

**தகவல்**
**குடும்பத்தினர்**

## வலம்புரி- சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

**வடமாகாணத்தில்**

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- வவுனியா
- மன்னார்

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலை முடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டுவந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள- நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ. இல, தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக் கூடிய, உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை

**பிரதம ஆசிரியர்**
**வலம்புரி**
**இல.3,2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.08.2014**

குறிப்பு:-நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்

**பிரதம ஆசிரியர், வலம்புரி**

## இன்றைய இராசி பலன்

**17.08.2014**

(ஆவணி 01, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சப்தமி முற்பகல் 11.53 மணிவரை
பரணி பிற்பகல் 5.04 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
கார்த்திகை விரதம், ஜன்மாஸ்டமி

வளவன்

**மேடம்** – வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்** – விருப்பங்கள் நிறைவேற கந்தனை வழிபடவேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்வீர்கள், சஞ்சலங்கள் கூடும்.

**மிதுனம்** – எண்ணிய காரியங்கள் உடனுக்குடன் நிறைவேறும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்து காட்டுவீர்கள்.

**கடகம்** – வீட்டை அழகுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** – ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பயணங்கள் கைகூடும்.

**கன்னி** – கவலைகள் தீர கந்தனை வழிபடவேண்டிய நாள், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் உருவாகும்.

**துலாம்** – சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும் நாள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, போசன சுகமுண்டு, வழி[illegible]ால் முன்னேற்றமுண்டு, [illegible]ருமானம் திருப்திதரும்

**விருச்சிகம்** – விரதம், வழிபாடுகளில் நன்பிக்கை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நோய்கள் [illegible]

**தனுசு** – புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் சில இடையூறுகள் ஏற்படலாம்.

**மகரம்** – பெற்றோர் மீது பிரியம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், விருந்தினர்களின் வருகையுண்டு.

**கும்பம்** – அந்நியர்களின் சந்திப்புக்கள் நன்மைதரும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய அனுபவங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** – வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும், உறவினர்களின் வருகையுண்டு, மனோ சங்கடங்கள் கூடும், உடல் நலனில் கவனம் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜினாமா செய்யும் முடிவில் இயக்குநர் சபை திடீர் மாற்றம்

(கரணவாய்)


கட்டைவேலி – நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர்சபை உறுப்பினர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை தமது பதவியை இராஜினாமா செய்ய இருந்த நிலையில் மீண்டும் தமது பணிகளுக்கு திரும்புவதாக சங்கத்தின் செயலாளர் ந. சீன்னையா




விடம் தெரிவித்துள்ளார்.

குறித்த சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர்கள் சங்கத்தின் நிர்வாகத்தில் இருந்த சில குழப்பங்கள் காரணமாக பதவியை ராஜினாமா செய்வதாக அண்மையில் தெரிவித்தனர்.

ஆனால் உறுப்பினர்களினால் ஒப்பமிடப்பட்ட இராஜினாமா இயக்குநர் சபையினால் மீள்பரிசீலனை செய்யுமாறு கேட்டதிற்கிணங்க எதிர் வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விசேட பொதுச்சபைக்கூட்டம் கூட்டி ஆராய்வதெனத் தீர்மானித்துள்ளதுடன் அது வரை வழமை போல சங்க நடவடிக்கைகளை மேற்காள்வதென தீர்மானிக்கப்பட்டுள் ளது என செயலாளர் மேலும் தெரிவித்தார். (6-60)




# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை ஒப்பந்தத்தை நிறைவேற்ற தவறிவிட்டது

## இளங்கோ சனசமூக நிலையம் குற்றச்சாட்டு

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையுடன் செய்யப்பட்ட ஒப்பந்தம் 8 மாத காலமாகியும் நிறைவேற்றப்படவில்லை என கரணவாய் இளங்கோ பொது சன சமூக நிலையத்தால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அரசாங்கம் 10 இலட்சம் ரூபாவினை விதித்திருந்த வேலைகளுக்காக அண்மையில் வழங்கியது.

இதற்கமைய இவ் வீதித் திருத்த வேலைத்திருத்த திட்டத்தினை எதிர்க்கட்சி உறுப்பினர்களால் பிரதேச சபை வீதித்திருத்த ஒப்பந்தகாரர்களிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

ஆனால் அவ் ஒப்பந்தம் உடனடியாக கைவிடப்பட்டது என்றும் இதனால் குறித்த வேலைத்திட்டம் கைமாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமையவே கரணவாய் இளங்கோ பொது சனசமூக நிலைய ஒப்பந்தகாரரிடம் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் மற்றும் தவிசாளரால் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில் இவ் ஒப்பந்த அடிப்படையில் குறித்த வீதித் திருத்த வேலைகள் மிகத் துரிதகதியில் சனசமூக நிலையத்தினரின் சொந்த நிதியில் செய்யப்பட்டது.

இதற்கமையவே வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சோதி வீதி, பொன் கந்தையா வீதி என்பனவற்றுக்கே புனர் நிர்மாண வேலைகள் செய்யப்பட்டன.

இந்நிலையில் கடந்த 8 மாத காலமாகியும் தமது சொந்த நிதியான 10 இலட்சம் ரூபா இதுவரை தரப்படவில்லை என குறித்த சன சமூக நிலையத்தினால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பல தடவை வடமராட்சி தெற்கு பிரதேச சபையிடம் கடிதமூலமான கோரிக்கையினை சனசமூக நிலையத்தினர் விடுத்திருந்தனர்.

ஆனால் இதுவரை காலமும் அக்கோரிக்கைகள் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கவனம் செலுத்தப்படவில்லை என சனசமூக நிலையத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மாதாந்த கூட்டத்தில் சனசமூக நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டது.

அதில் தமக்கு தற்போது 5 இலட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அதனைக் கொடுக்கும்படியும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு பிரதேச சபை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் மறுப்பு தெரிவித்து வாக்கு எடுப்புகளும் இடம்பெற்றன. அவ்வாக்கெடுப்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் 3 பேரும் எதிர்க்கட்சி உறுப்பினர் 3 பேருமாக மொத்தம் 6 பேர் பணத்தை திருப்பி கொடுக்கும்படி வாக்களித்தனர்.

இதனால் குறித்த சனசமூக நிலையத்தினால் இனிமேலும் தம்மால் காத்திருக்க முடியாது. தாம் நீதிமன்றத்தில் பிரதேச சபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளன. (6-60)

## விஷேட நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஶ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை இரவு 10 மணி தொடக்கம் 12 மணி வரை விஷேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இதன்படி இடம்பெறவுள்ள புல்லாங்குழல் இசைமாணி பி.பத்மராஜ்யும் வயலின் கலாபூஷணம் கி.பத்மநாதனும் மிருதங்கம் வயஞான பூபதி சி.துரைராஜாவும் கடம் கலா வித்தகர் து.லதுஷனும் வழங்கவுள்ளனர்.

தெய்வீக பேருரையை யா.மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் மோ.ஹரிஹரன் பாற்கடல் அளந்தபிரான் எனும் தலைப்பில் வழங்கவுள்ளார்.


வயலின் சோலோவில் வயலின் இசைக் கலாவித்தகர் ப.சியாம் கிருஷ்ணா மற்றும் கலாவித்தகர் ப.காயத்திரி ஆகியோரும் மிருதங்கம் லய ஞான பூபதி சி.துரைராஜாவும் கடம் கலாவித்தகர் து.லதுஷனும் வழங்கவுள்ளனர். (6)


## மலர் வெளியீட்டு விழா

அருட்சித்தர் குடைச்சுவாமிகளும் யோகமும் மனிதமாண்பும் மலர்வெளியீடு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்றக் கட்டடத்தில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி விகடகவி திருநாவுக்கரசு, யாழ் மாநகரசபை ஆணையாளர் செ.பிரணவநாதன், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் பிரதேச சபை கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி குமாரசிங்கம், யாழ்ப்பாண பதில் நீதிபதி சட்டத்தரணி க.கேசவன், யூரோவில் தொழிலதிபர் பொறியியலாளர் இராமதாஸன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

# சுன்னாகம் நிலத்தடி நீர் தொடர்பில் கலந்துரையாடல்





உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சுன்னாகம் பகுதியில் மின்உற்பத்தி நிலையங்களால் அப்புறப்படுத்தப்படுகின்ற கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் நிலத்தடி நீரில் கலக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் நேற்றுக்காலை முதற்கட்ட விசேட கலந்துரையாடலொன்று உடுவில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன் குடிநீர் வாரியம், நீர் வழங்கல் சபை, மின்சார சபை, இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு திணைக்களம், விவசாயத் திணைக்களம், கிராம சேவையாளர்கள், மாவட்ட வைத்திய அதிகாரி மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கடந்த 12 ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற யாழ்.மாவட்டத்தில் நிலவும் வரட்சி தொடர்பிலான ஆய்வரங்கின் போது மேற்படி விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று இவ் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இவ்விடயம் தொடர்பில் விஞ்ஞான ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர் உரிய தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இதன்இரண்டாம் கட்ட நடவடிக்கையாக மின்உற்பத்தி நிலையங்களின் சுற்றாடலை ஆராயும் செயற்பாடுகள் எதிர்வரும் புதன் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# குடும்ப பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு செய்தவருக்கு பிணை

(கரணவாய்)

குடும்பப் பெண்ணொருவரை பாலியல் ரீதியான தொந்தரவு செய்த நபர் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக் மேலும் தெரியவருவதாவது,

ஆண்டால்வளவு கரவெட்டி வடக்கைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய குறித்த பெண்ணை அதேயிடத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் பாலியல் ரீதியாக தொந்தரவு செய்து வருகிறார் என பிரஸ்தாபப் பெண்ணினால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 13 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த பெண் திருமணம் முடித்து கணவரை விட்டு விலகிய நிலையில் தனது தாய் சகோதரியுடன் அண்மைக்காலமாக மேற்குறித்த பகுதியில் வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் அப் பெண்ணுக்கும் அந் நபருக்கும் இடையில் காணிப்பிரச்சினை ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

இக் காணிப் பிரச்சினைக்காக இருவரும் அடிக்கடி வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

இதேவேளை குறித்த நபர் திடீரென ஒருநாள் அப்பெண் வீட்டில் தனியாக இருந்த சமயத்தில் வீட்டிற்குள் அனுமதியின்றி உள்நுழைந்து அப்பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டார்.

இதனை சுதாகரித்த அப் பெண் அந்நபரை தாக்கிவிட்டு வீட்டுக்குள் சென்று கதவுகளை பூட்டிக் கொண்டதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே குறித்த சந்தேக நபரை நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதேவேளை குறித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர் வரும் 29 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும் படி பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்பானங்களுக்கான பாதுகாப்பு முத்திரைக்கு இடைக்கால தடை

(கொழும்பு)

மென்பானங்களுக்கான பாதுகாப்பு முத்திரை தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையினால் விடுக்கப்பட்ட கட்டளையை நடை முறைப்படுத்தும்வரை மென்பானங்களுககான பாதுகாப்பு முத்திரை இடப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான இடைக்கால உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிறப்பித்துள்ளது.

மென்பானங்கள், போத்தலில் அடைக்கப்பட்ட நீர், எண்ணெய் வகைகள் போன்ற பல பொருட்களுக்கு பாதுகாப்பு முத்திரை ஒட்டப்படுவதை கட்டாயப்படுத்தல் வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை விடுத்தது.

இந்த பாதுகாப்பு முத்திரைக்கு எதிராக அவசர மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு நீதியரசர் ஏ.டப்ள்யூ. ஏ.சலாம் முன்னிலையில் ஆராயப்பட்ட போதே நீதியரசர், இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளார்.

போத்தலில் அடைக்கப்பட்ட நீர் உற்பத்தியாளர் சங்கம் உட்பட மூன்று சங்கங்களே இந்த மனுவை தாக்கல் செய்திருந்தன.

இந்த முத்திரை கட்டாயமாக்கப்பட்ட பொருட்கள், ஏற்கனவே பல நியதிச் சட்டங்களுக்கும் ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கும் உட்படுகின்றன என மனுதாரர்கள் தெரிவித்தனர்.

நுகர்வோர் அதிகார சபையின் அறிவுறுத்தல் பல நுகர்வுக்குப் பொருட்களின் வர்த்தகத்தில் வெவ்வேறு கட்டங்களில் பாதுகாப்பு முத்திரை ஒட்டப்படுவதை கட்டாயப்படுத்துகின்றது.

நுகர்வேர் அதிகார சபையின் இந்த அறிவுறுத்தல் சட்ட விரோதமானது, நியாயாதிக்கம் அற்றது செல்லுபடியாகாதது எனவும், இந்த பாதுகாப்பு முத்திரையின் விலை அறிவிக்கப்படவில்லை எனவும், ஆனால் இந்த முத்திரை ஒன்றுக்கு 2 ரூபாய் அளவில் செலவாகும் எனவும் மனுதாரர்கள் தெரிவித்தனர்.

இந்த செலவின் காரணமாக நுகர்வோருக்கு வர்த்தகர்களும் பல பில்லியன் ரூபாவை செலவளிக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6)




மகாபாரதத்தில் கர்ணனின் வரலாறு
40 ஆண்டுகளுக்குப் பின்
மீண்டும்
ராஜா திரையரங்கில்
வெற்றி நடைபோடுகிறது
பாடசாலை மாணவ மாணவிகளுக்கு
விசேட சலுகையில் டிக்கெட்டுக்கள்
இன்னும் 5 தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்
(டிஜிற்றல் சவுண்ட்)
(C-8206)
உலக நடிகர் சிவாஜி ரசிகர்கள் (யாழ். மாவட்டம்)


# மரம் தறித்தவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், இளவாலை, மெய்கண்டான் பகுதியில் 8 பனை மரங்களைத் தறிப்பதற்கு அனுமதி பெற்று, 11 பனை மரங்களைத் தறித்த சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தறித்த பனை மரங்களையும் பறிமுதல் செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர், 8 பனைமரங்களைத் தறிப்பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அனுமதி பெற்றிருந்தார். ஆனால், மேற்படி நபர் அதனைவிட மேலதிக 3 பனை மரங்களையும் சேர்த்துத் தறித்துள்ளார் என பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக இளவாலைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-23)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 கிறிஸ்தவர் (7ஆம் நாள் சி.ச.)<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: BBA / Area Manager (NGO)<br>தொ.இ: B/1707 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BIT பட்டதாரி/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2549 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: 21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, NCAT / கணக்காளர்<br>தொ.இ: B/1708 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 3<br>கி.பா: 63 ¾ செவ் 7 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Dip. in English, Dip. in Project Management<br>தொ.இ: G/2550 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 37 ¼ செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / Asst. Manager (சுவிஸ் PR)<br>தொ.இ: B/1712 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 12<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc (ICT) / அரச உத்தியோகம்<br>தொ.இ: G/2551 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 27 ¾ செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L / தனியார் சாரதி<br>தொ.இ: B/1713 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 42 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L, CIMA<br>தொ.இ: G/2552 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை



வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532



சேவை முகவர்
காணிகள், வீடுகள் விற்பனைக்கு

மணற்தரை லேன், உரும்பிராய், பலாலி வீதி, பிறவுண்வீதி, ஸ்ரான்லிவீதி 3,2 1/2, 6, 1 1/2 பரப்பு அளவில். யாழ். நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். 100 ஸ்ரீசுப்பகப் ஜப்பான் மோட்டார் சைக்கிள விற்பனைக்கு உண்டு.

7423 சுந்தரம் 0774819801



உடனடியான வேலை வாய்ப்புக்கள்

தரம் 6 முதல் A/L கல்வியுள்ள/யற்ற 17-50 வயது ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்புக்கள். கொழும்பை அண்மித்த பிரதேசங்களிலுள்ள ஏற்றுமதி தொழிற்சாலைகளான ஜேம், கோடியல், பிஸ்கட், டொபி, கண்ணாடி, புத்தகம், அச்சகம், காமெண்ட், டிப்டிப், பொலித்தீன், கிளவுஸ், பால்மா, பிளாஸ்டிக் போன்றவற்றிற்கு உற்பத்தி, லேபல், பொதியிடல், தரம்பிரித்தல், களஞ்சியப்பிரிவிற்கு வெற்றிடம். உணவு+ பாதுகாப்பான தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்+ குழுக்கள்+ தம்பதியினர் ஒரே தொழிற்சாலைகளில்) சம்பளம் 18000, 25000, 38000. வருகை தரும் நாளில் வேலை வாய்ப்பு

(சி-7213) மேலதிக விபரங்களுக்கு 0775561883



ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

❖ நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வறட்சி, சரும வியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்பு வலி, சொறி, சிரங்கு, தொடை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

❖ இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள், மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

❖ எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வறட்சி, இருமல், மலச்சிக்கல், வெள்ளை படுதல், மாதவி டாய்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆசவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப்வகைகளைமிகக்குறைந்தவிலையில்பெற்றுக்கொள்ளலாம்.

❖ மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எதிர்காலத்தில் "பைபாஸ்" செய்வதை தற்போதே தவிருங்கள்!!!

❖ இருதய நோய்கள் (பைபாஸ் செய்யாது குணமாவதற்கும்), உயர் இரத்த அழுத்தத்தைத் தடுத்து இரத்தத்திலுள்ள கொழுப்பைக் கரைத்து இரத்த நாளங்களை சுத்தப்படுத்துவதற்கும், புற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கும், சிறுநீர்ப்பையில் கல் போன்ற பலவகை நோய்களைக் குண மாக்குவதற்கும் உரிய மருந்து எம்மிடம் உண்டு (இம் மருந்து அமெரிக்கா உணவு மற்றும் ஒளஷத அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டது)

நீங்கள் நாடவேண்டிய இடம்:
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி:- 021 222 2567
(சி-8144)



இடமாற்றத்தை முன்னிட்டு
யாழ் மாநகரம் காணாத மிகமிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு சில தினங்கள் மட்டுமே



பட்டு சாறிகள்
ஸ்ரோன் சாறிகள்
சீகுன்ஸ் சாறிகள்
இந்தியன் ரொப்
சல்வார்கள்
சேட்
ஜீன்ஸ்





மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருட்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9393
(7413)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
வட்டாரம்:- 11
ஆதன இலக்கம்:-140
நவாலி வீதி

வட்டாரம் 11 நவாலி வீதி ஆதன இலக்கம் 140 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று நவாலி இறை மண்புலிவத்தை என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஐந்து கொண்ட இவ்வாதனமானது தற்போது கனடாவில் வதியும் கமலநாதன் பெண் சியாமா அவர்களால் அறுதி உறுதி மூலம் செல்வி.ஜீவராணி கணேசன் என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 5345 ஆம் இலக்க 2002.11.19 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். மண்புலிவத்தை நிலப்பரப்பு ஐந்து உள்ள இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாத விடத்து இவ்வாதனம் செல்வி.ஜீவராணி கணேசன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். (7424)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஆளுநர் வாழ்த்து



நாடளாவிய ரீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த 12 வலயங்களிலிருந்தும் 18 ஆயிரத்து 967 மாணவர்கள் தோற்றுகின்றனர்.

இம் மாணவர்களுக்கென ஆளுநரின் வழிகாட்டலில் வடமாகாண கல்வி அமைச்சுடன் வட மாகாணக்கல்வித் திணைக்களம் மற்றும்வலயக் கல்வித்திணைக்களங்களும் இணைந்து பாடசாலை மட்டத்தில் விசேட செயலமர்வுகள், பயிற்சி வகுப்புக்கள் மற்றும் மாதிரிப் பரீட்சைகளை நடத்தி மாணவர்களை சிறந்த முறையில் தயார்ப்படுத்தியுள்ளனர்.

அரசாங்கத்தால் நடத்தப்படும் முதலாவது பொதுப்பரீட்சையில் எதிர்பார்க்கும் சித்திக்கான புள்ளிகளுக்கு மேல் மாணவர்கள் பெறுவதற்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களுக்கு ஆசியைத் தெரிவித்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும் நிதானத்துடனும் பரீட்சையினை அணுகி சிறந்த பெறுபேறுகளைப் பெற தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (6)

## 'விஸ்வரூபம்' சொற்பொழிவு

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சிறப்பு ஞாயிற்றுக்கிழமை தின பூஜையில் சைவப்புலவர் பொன்.சுகந்தனின் விஸ்வரூபம் எனும் தலைப்பிலான ஆன்மீக சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

எனவே ஆர்வமுள்ள அனைவரும் பங்கு கொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-19)

## சஞ்சிகை வெளியீடும் கருத்துப்பகிர்வும்

சைவ மகாசபையின் அன்பே சிவம் ஆன்மீக மனிதநேய சஞ்சிகை II வெளியீடும் ஜீவ காருண்ய கருத்துப்பகிர்வும் இன்று ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் 2 மணிக்குநல்லை கந்தசுவாமி கோவில் முன்றலில் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் இமாலய ரிஷிகேஷ கிரி பீட வண.சுவாமி குமாரானந்தகிரி ஆன்மீக உரை ஆற்றவுள்ளார். (6)

# ஜூஸ் பைக்கற்றுக்கள் நான்காயிரம் மீட்பு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட விளான்பகுதியிலுள்ள ஜூஸ் தொழிற்சாலை யொன்றில் சுகாதாரத்துக்கு ஒவ்வாத வகையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 4 ஆயிரம் ஜூஸ் பைக்கற்றுக்களை கடந்த வியாழக்கிழமை கைப்பற்றியதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய திகாரி எஸ்.றஜீவ் தெரிவித்தார்.

அத்துடன், மேற்படி ஜூஸ் உற்பத்தி நிறுவனத்தையும் தற்காலிகமாக மூடியுள்ளதாகவும், சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றவிதத்தில் தொழிற்சாலையை மறுசீரமைத்த பின்னரே திறப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என வைத்தியதிகாரி தெரிவித்தார்.

சுகாதார வைத்தியதிகாரி, மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பி.சிவரூபன், கே.ஜெகானந்தன் ஆகியோர் இணைந்து, சண்டிலிப்பாய் சுகாதார வைத்தியதிகாரி பணி மனைக்கு கீழுள்ள உணவு கையாளும் நிலையங்கள் கடந்த வியாழக்கிழமை சோதனையிடப்பட்டன.

இதன்போதே மேற்படி, தொழிற்சாலை சோதனையிடப்பட்டதாக சுகாதார வைத்தியதிகாரி மேலும் தெரிவித்தார். (6-23)

# புகையிரதக் கடவை மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

பளை காங்கேசன்துறை புகையிரதக்கடவை வேலைகளுக்காக நாவற்குழி கேரதீவு வீதியில் 1ம் கி.மீ இல் உள்ள புகையிரதக் கடவை பகுதியானது இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மூடப்பட்டிருக்கும் என மத்திய பொறியியல் உசாவுத்துறை பணியகம் அறிவித்துள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கனரக வாகனங்களும் பேருந்துகளும் சாவகச்சேரி சந்தியிலிருந்து தனங்கிளப்பு வீதி ஊடாக தனங்கிளப்பு சந்தியிலிருந்து மன்னாருக்கு செல்ல முடியுமெனவும் அது போலமன்னாரிலிருந்து தனங்கிளப்பு சந்தியை அடைந்து தனங்கிளப்பு வீதி ஊடாக சாவகச்சேரி செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 400 | 240 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 80 | 60 | 80 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 30 | 40 | 60 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 40-80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 100 |
| பயற்றங்காய் | 100 | 120 | 80 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 60 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 130 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 70 | 60 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 80 |




# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 108


சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம





கிருஷ்ணசாமி சங்கீர்த்தனன்

ஒருவனது தவறை சுட்டிக் காட்டு
ஆனால் குத்தி விடாதே.
தவறுகளை திருத்திவிடலாம்
உன் சொற்களால் பட்ட
காயத்திற்கு மருந்திட முடியாது.

விஸ்வா ஸ்ரீ



மதீஷன் கணேஷ்




டொறின் மன்மதநாயகம்




விஷாகா விஜயன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றம் செய்பவர் பற்றி?

அரசியல், சினிமா
பொழுதுபோக்கு கேள்விகளை
சுருக்கமாக பெயர், முகவரி
குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.

வியாசர் பதில்கள்

வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com

எஸ்.விஷ்ணு,
உடுப்பிட்டி
அன்பின் வியாசர்
**அதர்வாவின் சிக்ஸ்பாக் எப்படி?**

இயக்குநர் பாலாவின் மெருகூட்டலில் வந்த எவருமே சோடை போனதில்லை என்பதற்கு விக்ரம், சூர்யா, ஆர்யா, விசால் போன்ற வெற்றி நாயகர்களுடன் அதர்வாவும் இணைகிறார்.

என்.சுரேஸ்,யாழ்ப்பாணம்
அன்பின் வியாசரே!
**ஒருவர் எத்தனை கேள்வி வரை உங்களிடம் கேட்கலாம்?**

கேள்வியாக இருந்தால் எத்தனையும் கேட்கலாம்.

த.மோகனரூபன், சுழிபுரம்
Hi! வியா Bro,
**யாழ்ப்பாணம் வறட்சியால் பாதிக்கவில்லையென முழுப்பூசணிக்காயை சோற்றினுள் புதைத்ததைப்போல் கூறும் அறிக்கை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

முன்னம் நாடு செழிப்பாய் இருந்தது: அப்போது முழுப் பூசணிக்காயை சோற்றினுள் புதைத்தனர். இப்போது பாலை வனமாய்க் கிடக்கிறது. இப்போது முழுப்பூசணிக்காயை புழுதியில் புதைக்கின்றனர்.

கிரு.செந்தூரன், நிதர்சன் கிறீம் ஹவுஸ்
அன்பின் வியாசரே!
**பொதுவாக இதிகாசத்திலும் சரி இக்காலத்திலும் சரி காட்டிக்கொடுப்பவர்களுக்கு முக்கிய இடம் கிடைக்கிறதே. உமது கருத்தென்ன?**

சிங்கம் ஆட்சி செய்யும் காட்டில்தானே குள்ளநரியும் வாழ்கிறது. கட்டப்பொம்மன்கள் பிறக்கும் போது கூடவே எட்டப்பன்களும் பிறந்து விடுகிறார்களே. இது எம் இனத்தின் சாபம்.



அதர்வாவின் சிக்ஸ்பாக் எப்படி?

வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி
அன்பின் வியாசரே!
**பெண்களின் கூந்தலின் மகத்துவம் யாது?**

நாசமறுக்க. ஆளானப்பட்ட சிவனால் கூட முடியாததை அற்பம் என்னால்...? அதன் மகத்துவம் தேடச்சென்று திக்குத்திசை தெரியாது போய் நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டதே.

எஸ்.சுகிர்தமலர், உரும்பிராய்
அன்பின் வியாசரே!
**எபோலா வைரஸ் அழிக்கப்படுமா?**

கடவுளை அகத்தில் தேடாமல் அண்டவெளியில் தேடும் மனிதனுக்கு அவன் கொடுக்கும் அடி, பிட்டுக்கு மண்சுமந்த பெருமானுக்கு வீழ்ந்த அடி.

க.தங்கலீலா, கரவெட்டி
வணக்கம் ஐயா!
**கிராமிய பண்பாடு, கலாசாரம் யாவும் நகரமயமாகிறது. இதனால் கிராமியம் பாதுகாக்கப்படுமா?**

பண்பாடு, கலாசாரம் எதுவுமே மாறாது. ஆனால் அதன் வடிவங்கள்தான் மாறும். குங்குமம் ஸ்ரிக்கர் பொட்டாகும், மாக்கோலம் பேப்பரில் வெட்டி ஒட்டப்படும். தைப்பொங்கல் முற்றத்தில பொங்காமல் குக்கரில் பொங்கும் அவ்வளவுதான்.

அ.நளினாசினி, கோண்டாவில்.
Hi Bro!
**பாடசாலைகளில் பெரிய இடத்து பிள்ளைகளுக்காக தங்களையே அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள் பற்றி?**

தயவுடன் ஏழைப்பிள்ளைகள் பக்கமும் தங்கள் கடைக்கண்களால் பார்த்தருள்க.

பத்மினி, மட்டுவில்
அன்பின் வியாசரே!
மதமாற்றம் செய்பவர் பற்றி?

தாயைவிற்றுப் பிழைப்பவர்கள்

# பள்ளிவாசலில் பிரசங்கத்தை பௌத்த பிக்குகள் கேட்டனர்

(கொழும்பு)

சமூக நல்லிணக்கத்திற்கு வழிகோலும் வகையில் வெள்ளிக்கிழமை புனித ஜும்மா தொழுகையை அவதானிக்கும் நோக்கில் 25 பௌத்த குருமாரும் பௌத்த பிரமுகர்களும் அக்குறணைப் பள்ளிக்கு விஜயம் செய்தனர்.

சமய முரண்பாடுகளை நீக்கும் ஒரு முயற்சியாக அக்குறணை அஸ்னா மத்திய பள்ளிவாசலின் பரிபாலன சபையின் ஏற்பாட்டில் அக்குறணைப் பிரதேசத்தை சேர்ந்த 25 பௌத்த பிக்குமார்களையும் மற்றும் சில பௌத்த பிரமுகர்களையும் அழைத்து வெள்ளிக்கிழமை ஜும்மாவில் குத்பா பிரசங்கத்தை சிங்கள மொழியில் நிகழ்த்தி அவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டன.

அக்குறணை அஸ்னா மத்திய பள்ளிவாசல் பரிபாலன சபையின் தலைவர் சட்டத்தரணி அஸ்மி பாரூக் உட்பட பரிபாலன சபையினர் இந் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வு தொடர்பாக கலந்து கொண்ட அனைத்து பௌத்த தேரர்களும் மேற்படி முன் மாதிரியை பெரிதும் பாராட்டினர்.

முற்பகல் 11 மணி அளவில் பள்ளிவாசலுக்கு சமுகம் தந்த தேரர்களை வரவேற்று அவர்களுக்காக பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அன்னதானம் உரிய கால இடைவெளியில் பரிமாறப்பட்டது.

அதன் பின்னர் அவர்களுக்கு புரியும் மொழியிலும் இஸ்லாமிய சமய வரையறைகளுக்கு உட்பட்ட விதத்தில் விசேடமாக தயார் செய்யப்பட்ட சிங்கள மொழியிலான கொத்பா பிரசங்கத்தை மௌலவி கலீலுல் றஹ்மான் நிகழ்த்தினார். மேற்படி கொத்பாவை அவர்கள் செவிமடுப்பதற்கு மேல் மாடியில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மத்திய மாகாண சபை உறுப்பினர்களான குணதிலக்க ராஜபக்ஷ, எஸ்.எம்.பீ.த. அல்விஸ், அக்குறணை பிரதேச செயலாளர் மாதவ வர்ணகுலசூரிய மற்றும் அலவத்துகொடை பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர். அக்குறணை கொணகல்களை விகாரையைச் சேர்ந்த தலைமை விகாராதிபதி உட்பட 25 மதகுருமார் மற்றும் ஆறு பௌத்த பொலிஸ் அதிகாரிகளும் பிரதேச சபை மற்றும் மகாகண சபை பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

சமூக ஒற்றுமை, [illegible] (மோசஸ்) அவர்களின் வரலாறும் பிர்அவுன் தண்டிக்கப்பட்ட விதமும், முஹம்மது நபி அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு என்பன தொடர்பாக குத்பாவில் தொட்டுக்காட்டப்பட்டது.

தொழுகையை அடுத்து இடம் பெற்ற கலந்துரையாடலில் கொணகல்களை விகாராதிபதி உரையாற்றினார். நாட்டின் அண்மைகாலச் சம்பவங்களும் சமூகங்கள் இணக்கமாக வாழ்வது பற்றியும் விகாராதிபதி கருத்து வெளியிட்டார். (6)

ஊசி விவகாரம்

# வைத்தியரின் தகைமையை சோதனை செய்ய அனுமதி

கொழும்பு, லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் வைத்தியர் பிரியங்கிக்கு மரணத்தை ஏற்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பம்பலப்பிட்டி லங்கா கொஸ்மெட்டிக்ஸ் சத்திர சிகிச்சை நிறுவனத்தின் வைத்தியர் நிமல் கமகேயின் வைத்திய தகுதியை சோதிப்பதற்கு பம்பலப்பிட்டி பொலிஸார் இலங்கை வைத்தியசபையின் ஆதரவை கோரியுள்ளனர்.

வைத்தியரின் தகுதியை சோதிக்கவேண்டும் என்றும் அதற்கான தகவல்களை திரட்டிகொள்ள வேண்டும் என்றும் பொலிஸார், கொழும்பு மேலதிக நீதவான் கே.ஏ. ஜி. புஞ்சிஹேவாவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்தே நீதவான் மேற்கண்டவாறு பணித்துள்ளார்.

அதனடிப்படையில் நிமல் கமகே பூர்த்திசெய்த பட்டப்படிப்பு, பட்டப்படிப்பை நிறைவு செய்த பல்கலைக்கழகம், பட்டம் வழங்கப்பட்ட திகதி மற்றும் அவர் இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்து கொண்டுள்ளாரா? சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு அந்த நிறுவனம் தகுதியானதா உள்ளிட்ட விபரங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்று பொலிஸார், நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். (6)

# மடு வான் பரப்பில் மர்ம விமானம்

மன்னார், மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வெகு விமர்சையாக இடம்பெற்றுக் கொண்டிருந்த போது பக்தர்கள் கூடி நின்ற ஆலயத்தின் முன் பகுதி மேல் வானில் சிறிய ரக விமானம் ஒன்று பறந்தது.

குறித்த சிறிய ரக விமானத்தின் மேல் பகுதியில் நான்கு விசிறிகள் சுற்றிக்கொண்டிருந்த நிலையில் குறித்த விமானம் குறிப்பிட்ட ஒரு பகுதியை மையப்படுத்தியே சுற்றிக் கொண்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இரைச்சலுடன் சுற்றிக்கொண் டிருந்த குறித்த விமானம் மடுத்திரு விழா திருப்பலி நிறைவடைந்த பின்னர் அவ்விடத்தில் இருந்து அகன்று சென்றதை காணக்கூடியதாக இருந்தது.




குறித்த சிறிய ரக விமானம் எதற்காக? யாரால் பறக்கவிடப் பட்டது? என்ற விடயம் இதுவரை தெரியவில்லை. இவ்வகையான சிறிய விமானங்களை பயன்படுத்தி வீடியோக்களை எடுக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவற்றை பந்தொம் கமரா என்றழைப்பர். ஆகையினால் இந்த பந்தொம் கமராவினைப் பயன்படுத்தி எவராவது வீடியோ எடுத்திருக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எது எப்படியிருப்பினும் இவ்வகையான கருவிளைப் பயன்படுத்துவதற்கு முன்னனுமதி பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்

# அஞ்சான்





இயக்குநர் லிங்குசாமியின் எழுத்து, இயக்கத்தில் "சிங்கம்" சூர்யா நடித்து, எக்கச்சக்க எதிர்பார்ப்புகளுடன் திரைக்கு வந்திருக்கும் படம் தான் அஞ்சான். இது யாருக்கும் அஞ்சாத சிங்கமா.? சூர்யா -வின் வெற்றி பட வரிசையில் சொக்கத் தங்கமா.? என்பதை இனி இங்கு உரசிப்பார்ப்போம்.....! கதைப்படி, மும்பையில் தாதாவாக திகழ்ந்து, தகவலே இல்லாமல் போன தன் அண்ணன் சூர்யா -வை தேடி கன்னியாகுமரியில் இருந்து மும்பைக்கு ரயிலே -றுகிறார் மாற்று திறனாளி தம்பி சூர்யா. மும்பை ரயில்வே ஸ்டேஷன் போய் இறங்கியதும், அந்தேரி ஏரியாவுக்கு அண்ணன் சூர்யாவைத் தேடி டாக்ஸி பிடிக்கும் தம்பி சூர்யாவை, வாங்க அந்தேரி என வரவேற்கும் டாக்ஸி டிரைவர் காமெடி சூரியை கூடவே கூட்டிக் கொண்டு வழக்கமான தமிழ் சினிமா பாணியில் அண்ணனைத் தேடாமல், தனி ஆளாக அண்ணன் சூர்யாவை தேடுகி -றார் தம்பி சூர்யா. ஒரு கட்டத்தில் அண்ணன், தம்பி இருவர் அல்ல... இருவரும் ஒருவர்தான், ஒரே சூர்யா தான் எனும் உண்மை உலகுக்கும் (மும்பை நிழல் உலகுக்கும்...) உங்களுக்கும் (ரசிகர்களுக்கும்...) தெரிய வரும் போது "அஞ்சான்" பதினாறடி பாஞ்சானாக விறுவிறுப்பு பிடிக்கிறது. அப்புறம், தம்பி சூர்யா, அண்ணன் சூர்யாவை தேடி வரவில்லை. தம்பி சூர்யா என்று ஒருவரே இல்லை. தன் நண்பன் சந்துருவித்யூத் ஜம்வாலை நயவஞ்சகமாக சுட்டுக் கொன்றவர்களையும், தன்னை சுட்டு ஆற்றுக்குள் தள்ளிய விரோதிகளையும், அவர்களுக்கு உதவிய துரோகிகளையும் தேடித்தான் அண்ணன் ராஜு பாய் சூர்யாவே, தம்பி கிருஷ்ணன் சூர்யாவாக அவதாரமெடுத்திருக்கிறார்.. எனும் கதையையும், அது பயணிக்கும் தடத்தையும் முன்கூட்டியே யூகிக்க முடியாதவர்களுக்கு, படம் பயங்கர பரபரப்பாக, பரபரப்பு பயங்கரமாக, விறுவிறுப்பாக இருக்கிறது. அதை யூகிக்க முடிந்த இந்த காலத்து கில்லாடி ரசிகர்களுக்கு சற்றே சப்பென்று இருக்கிறது. அதிலும் "சுப்பர் ஸ்டார்" ரஜினியின் "பாட்ஷா", "தளபதி" படங்களை பலமுறை பார்த்தவர்களுக்கு இயக்குநர் லிங்குசாமி "அஞ்சான்" கதை பண்ணிய கதையும், "சிங்கம் ஸ்டார்" சூர்யாவை,, "சுப்பர் ஸ்டாராக காட்ட முயலும் கலையும் சற்று கூடுதலாகவும் யூகிக்க முடிகிறது, தெரிகிறது. ஆனால் அதை போரடிக்காமல் சின்ன, சின்ன நகாசு வேலைகளை செய்து நகர்த்தியிருப்பதால் "அஞ்சான்", நோஞ்சானாக தெரியாமல் பாஞ்சானாக பளிச்சிடுகிறான்.

சூர்யா வழக்கம் போலவே அண்ணன் ராஜுபாயாகவும், தம்பி கிருஷ்ணாவாகவும் இருவேறு "கெட் அப்புகளில் பிச்சி பெடலெடுத்திருக்கிறார். "நான் சாகணும்னாலும் நான் தான் முடிவு பண்ணனும்... நீ சாகணும் -னாலும் அதையும் நான்தாண்டா முடிவு பண்ணனும்" என சூர்யா துரோகி -களையும், விரோதிகளையும் சுட்டு தள்ளும் இடங்களாக -ட்டும், "சுடணும்னா சுடணும் அதை விட்டு விட்டு சும்மா பேசிட்டு இருக்கக்கூடாது." என எதிராளிகளை போட்டு தள்ளும் இடங்களிலா -கட்டும், இன்னும் க்ளைமாக்ஸில் மெயின் வில்லன் இம்ரானை தீர்த்துகட்ட தனக்கு உதவி -டும் வில்லனின் கூட்டாளிகள் மூவரை சுட்டுத் தள்ளிவிட்டு "எதிரியிடம் கூட துரோகிகள் இருக் -கக்கூடாது..." என "பன்ச்" டயலாக் அடிப்பதிலா கட்டும் சூர்யா, சூரியனாக ஜொலிக்கிறார்! ஆனால் அப்புறம் விஜய்யை "இமிடேட்" செய்ய வேண்டும் எனும் எண்ணமும், ""சின்னதா வேட்டு சத்தம் கேட்ட -தும் பயந்து பறக்குறதுக்கு நான் என்ன புறாவா.? நின்னு நிதானமா இரையை தூக்கிட்டு போற கழுகுடா" என பேசும் வசனத்தில் புறாவா? சுறாவா? என புரியாம சூர்யா ரசிகர்கள், தியேட்டரில் விஜய்க்கு பன்ச் வைத்த -தாக நினைத்து விசில் பறக்க விடுவதும், வில்லன் இம்ரானை மற்றொரு நடிகர் விக்ரம் சாயலில் பிடித்து போட்டு படங்கள் மூலம் ஏதேதோ மெஸேஜ் சொல்ல களம் இறங்கிவிட்டது புரிகிறது. போகட்டும்! படம் பேசட்டும் நாயகி சமந்தா பொலீஸ் கமிஷனர் மகளாக "கிக்" என்ட்ரி கொடுத்து ரசிகர்களின் இதயங்களை பக் பக் என அடிக்க விடுகிறார். அம்மணி சமந்தாவை காட்டிலும் சக்கை போடு போட்டிருக்கின்றனர் பார்ட்டிக -ளில் ஆடும் பஞ்சுமிட்டாய் பெண்கள். பலே, பலே! காமெடி சூரி, தெலுங்கு பிரம்மானந்தம், சூர்யாவுக்கு உதவும் டிராவல்ஸ் இஸ்லாமி -யர் ஜோமல்லூரி மற்றும் சூர்யாவின் நண்பர், தாதாவாக வந்திருக்கும் சந்துரு வித்யூத் ஜம்வால், வில்லன்கள். விரோதிகள். துரோகிகள் எல்லோரும் பாத்திரமறிந்து பளிச்சிட்டிருக்கின்றனர். மற்றும் யுவனின் இசையில் "ஏக்தோ தீன் சார் ஒத்துக்கடி"எனத் தொடங்கித் தொடரும் பாடல் மட்டும் மீண்டும் மீண்டும் கேட்கத்தூண்டும் ர(ரா)கம்! சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு அஞ்சானின் கூடுதல் பலம்! பிருந்தாசாரதியின் வசன வரிகள் பெரும்பலம்! அதேநேரம், சமந்தா, தாதா சூர்யாவை காதலிப்பதை கமிஷனர் அப்பா கண்டு கொள்ளாததும் சமந்தா காதலர் சூர்யாவின் பெயரை ராஜு என கையில் பச்சைக் குத்திக் கொள்ளாமல் எல்லோரும் சூர்யாவை பயபக்தியுடனும், பாசத்துடனும் அழைப்பது போல் ராஜு பாய் என்றே பச்சை குத்தியிருப்பதும் அபத்தம்! அதிலும் அந்த பச்சை ஸ்கெட்ச் பேனாவால் குத்தப்பட்ட பச்சை என்பது அப்பட்டமாக தெரிவது கூடுதல் அபத்தம்! இதுமாதிரி ஒரு சில அபத்தங்களை ஒதுக்கிவிட்டால் இரண்டு மணிநேரம் 51 நிமிட படமும் சற்றே சுருங்கும். ஒருசில இடங்களில் போரடித்து கொஞ்சமே கொஞ்சம் நோஞ்சானாக தெரியும் அஞ்சானும் முழுக்க முழுக்க 64 அடி பாஞ்சானாக பளிச்சிடுவான்.

மொத்தத்தில், "அஞ்சான்" சற்றே "சாஞ்சான்" ஆனாலும் "பாய்ந்தான்-பாய்ந்துள்ளான்!!"

# சினிமா



சிக்னலில் நின்று கொண்டிருந்தபோது, நடிகர் பிரகாஷ்ராஜ் கார் மீது பஸ் மோதியது. அதிர்ஷ்டவசமாக பிரகாஷ்ராஜ் காயமின்றி உயிர் தப்பினார்.

சிவகார்த்திகேயன் கதாநாயகனாக நடிக்க, தனுஷ் தயாரிக்கும் டாணா படத்தில், மனோபாலா ஒரு அரசியல் கட்சியின் இளைஞர் அணி தலைவராக நடிக்கிறார். சிவகார்த்திகேயனுடன் அவர் இணைந்து நடிக்கும் முதல் படம் இது.


ஒஸ்கார் விருது பெற்ற பிரபல ஹாலிவுட் நடிகர் ராபின் வில்லியம்ஸ் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று முதற்கட்ட ஆய்வின்படி தெரிய வந்துள்ளது.

நயன்தாரா கேரளாவில் உள்ள தனது வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி திரிஷாவுக்கு அழைப்பு விடுத்து இருக்கிறார். அதை திரிஷாவும் ஏற்றுக் கொண்டு கொச்சியில் உள்ள நயன்தாரா வீட்டுக்குப் போக சம்மதித்து இருக்கிறார்!


நுரையீரல் பாதிப்பில் டைரக்டர் கே.பாலசந்தரின் மகன் மரணம். சினிமா டைரக்டர் கே.பாலசந்தரின் மூத்த மகன், கைலாஷ். மின்பிம்பங்கள் என்ற நிறுவனம் சார்பில் டி.வி. தொடர்களை தயாரித்து வந்தார். இவருக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு நுரையீரல் பாதிப்பு ஏற்பட்டது. சிகிச்சைக்காக, சென்னையில் உள்ள தனியார் மருத்து -வமனையில் அனுமதிக்கப்பட்டார்.

8வருடங்களுக்கு பிறகு மீண்டும் நடிக்கிறார் ஜோதிகா. மலையாளத்தில் மஞ்சு வாரியார் நடித்த ஹவ் ஓல்ட் ஆர் யூ என்ற படம் அங்கு பெரும் வெற்றி பெற்றது. 40 வயதை கடந்த மஞ்சு வாரியாரின் அழகும், நடிப்பும் அனைவரையும் கிரங்க வைத்தது. அதற்கு சற்றும் குறைவில்லாத ஜோதிகா அந்த படத்தின் ரீமேக்கில் நடிக்கிறார்.





# அந்த நாள் ஞாபகம்...




நடிகர் சூர்யாவுடன் அவருடைய சகோதரன் கார்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலத்தை அமைத்து உதவுமாறு உருத்திரபுரம் மக்கள் கோரிக்கை



(சிவநகர்)

உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு முன்பாக பொதுமயானத்திற்கு செல்லும் பாதையில் குறுக்கறுத்து ஓடும் கழிவு வாய்க்கால் பகுதியில் பாலம் இன்மையால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இறுதிக் கிரியைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பலரிடமும் தொடர்பு கொண்டு முறையிட்ட போதும் இதுவரை காலமும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் நேரில் இவ்விடத்திற்கு வருகை தந்து நிலைமைகளை அவதானித்த பின்னர் குறித்த இடத்திற்கு அங்கு வைக்கப்பட்டுள்ள இரும்புக் கேடர்களைக் கொண்டு தற்காலிகமாக பாலம் அமைக்க முடியுமா என்பதையும் அதற்கான செலவு மதிப்பீடுகளையும் கரைச்சி பிரதேச சபை தொழில்நுட்ப அலுவலரூடாக தொடர்பு கொண்டு மதிப்பீட்டை செய்து தருமாறு கரைச்சி பிரதேச சபைத் தலைவரிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி கரைச்சி பிரதேச சபை தலைவரால் உடனடியாகவே இதற்கான மதிப்பீடு செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் இது தொடர்பாக வடமாகாண விவசாய அமைச்சர் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேற்குறித்த பிரதான கழிவு வாய்க்காலை செப்பனிட்டு தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென வாய்க்காலினால் பாதிக்கப்படுகின்ற உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு, சிவநகர், உருத்திரபுரம் வடக்கு, நீவில் ஆகிய பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (2-254)

# இந்தியன் வீட்டுத்திட்ட பயனாளிகளின் ஆரம்பகட்ட வேலைகள் இழுத்தடிப்பில்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் அம்பாள் குளம் கிராம அலுவலர் பிரிவில் 237 பேர் இந்தியன் வீட்டுத்திட்டப் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதற்கட்ட வீடு கட்டும் நடவடிக்கையாக அதற்கான சூழல் நிலையை யு.என்.ஹபிடட் (HABITAT) நிறுவனம் பார்வையிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது.

இதற்காக கடந்த ஐந்து நாட்களுக்கு முன்னரே குடியிருப்பாளர்களை தத்தமது வீடுகளில் இருக்குமாறு மேற்படி நிறுவனத்தினரால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அவர்களால் அது மட்டில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அன்றாட கூலி வேலைக்குச் செல்லும் மக்கள் மற்றும் வேறு அத்தியாவசிய தேவைக்காக வெளிச் செல்வோர் இவர்களின் அறிவுறுத்தலின் படி குறித்த தேவையை பூர்த்தி செய்வதற்காக வீட்டில் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இணைத்து புகைப்படம் எடுக்க வேண்டிய தேவையுள்ளதாகவும் அறிவிக்கப்பட்ட மையால் குடும்பத்திலுள்ள அனைத்து அங்கத்தவர்களும் நிறுவனத்தின் வருகைக்காக காத்திருக்க வேண்டியுள்ளது.

இதனால் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்வதாக அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதே போல் ஏனைய கிராமங்களுக்கும் குறித்த நிறுவனத்தினர் தம்மால் குறிப்பிட்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் எதேச்சையான நடவடிக்கைகளையே மேற்கொள்வதாகவும் சம்பந்தப்பட்டவர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் கொண்டு மக்களின் நலனுக்கு உதவ முன்வர வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது. (2-254)

வன்னி வலம்

# கஷ்ட பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு நிதியுதவி


(மல்லாவி)

மாந்தை கிழக்கு பிரதேச சபையினால் மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்தின் கீழுள்ள மிகவும் பின் தங்கிய 3 பிரதேச பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் சீருடை தைப்பதற்கான நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அம்பலவாணர் தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில்,

இந்திய வர்த்தகர் ஒருவர் வழங்கிய நிதியுதவி மூலம் மு/பணங்காமம் மூன்றுமுறிப்பு அ.த.க பாடசாலை, மு/பாலைப் பாணி அ.த.க. பாடசாலை ஆகியவற்றில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களுக்குமாக தலா 7 ஆயிரம் ரூபா வீதம் 14 ஆயிரம் ரூபாவிற்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பாலைப்பாணி கிராமத்திலிருந்து மு/வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலைக்கு செல்லும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குறித்த கிராம மாணவர்களுக்கு பாடசாலை சீருடை தைப்பதற்காக 5 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)





மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திருவிழாவில் பங்கேற்றனர். இதன்போது ஆயர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டுத்திருப்பலியையும் கலந்து கொண்ட பக்தர் கூட்டத்தினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# போரினால் பாதிக்கப்பட்ட மக்களை பாப்பாண்டவர் மடுவில் சந்திப்பார்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தகவல்

(மன்னார்)

இலங்கைக்கு அடுத்தாண்டு ஜனவரி மாதம் விஜயம் மேற்கொள்ளவுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் போரால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்த மக்களை சந்திக்கவுள்ளார் என கர்தினால் மல்கம்ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். மேலும் இச் சந்திப்பு மடுத்திருப்பதியில் இடம் பெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

மடுத்திருப்பதியின் வருடாந்த திருவிழா நேற்றுமுன்தினம் மடுத் திருப்பதியில் இடம்பெற்ற போது திருப்பலி நிறைவில் உரையாற்றிய போதே பேராயர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். திருத்தந்தையின் இலங்கை வருகை குறித்து பேராயர் மேலும் குறிப்பிடுகையில்,

திருத்தந்தையின் வருகை மூலம் இலங்கை நாடு விசேட ஆசீர்வாதத்தினால் பலப்படுத்தப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் திகதி முதல் இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொள்ளும் திருத்தந்தை 13 ஆம் திகதி அரசியல் சந்திப்புக்களை மேற்கொள்வார்.

அதனைத் தொடர்ந்து காலி முகத் திடலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார். இதன்போது முத்திப் பேறுபெற்ற ஜோசவ்வாஸ் அடிகளார் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவார் என எதிர்பார்ப்பதாக அவர் கூறியுள்ளார்.

மறுநாள் பிற்பகல் மூன்று மணியளவில் மடுத்திருப்பதிக்கு வருகை தரவுள்ள திருத்தந்தை அங்கு மக்கள் சந்திப்பை நிகழ்த்துவார்.

குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் உறவுகளை இழந்து வாழும் மக்களுடன் விசேட சந்திப்புகளை மேற்கொள்ளவுள்ளார். இதன் போது மடு அன்னையின் திருச்சொரூப ஆசியையும் வழங்கவுள்ளார்.

மடுத்திருப்பதிக்கு திருத்தந்தை ஒருவர் வருவது இதுவே முதற்தடவையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் திருத்தந்தையின் வருகையை முன்னிட்டு மருத்திருப்பதியில் மூன்று நாட்கள் தொடர்ந்து திருப் பலி ஒப்புக் கொடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை மற்றும் பிலிப்பைன்சிற்கான பயணம் அடுத்த ஆண்டு ஜனவரி 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையில் இடம் பெறும் என வத்திக்கான் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொடரும் கடுமையான வரட்சியால் பயன்தரும் மரங்கள் வாடுகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் கிராமங்களில் உள்ள கிணறுகள், குளங்கள் வற்றியதை அடுத்து தண்ணீருக்காக மக்கள் அலைந்து திரிகின்றனர்.

இந்நிலையில் ஒரு சில கிராமங்களுக்கு நிறுவனங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அது அவர்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு போதுமானதாக இல்லையென சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இரணைமடு குளத்து நீர் மட்டம் குறைந்து வருவதால் அண்மையில் காணப்படும் திருவையாறு கிராமத்தில் 30 வருடங்களுக்கு மேல் செழிப்பாக காணப்பட்டு வந்த பழமை வாய்ந்த தென்னை மரங்கள் காய்ந்து கருகிப்போயுள்ளதாக மக் களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல் செல்வாநகர், அம்பாள்குளம், கிருஸ்ணபுரம், விநாயகபுரம், பாரதிபுரம், உதயநகர், மலையாளபுரம், கனகபுரம் ஆகிய கிராமங்களில் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் வைக்கப்பட்ட பயன்தரும் மரங்கள் காய்கறிவகைகள் என்பன நீரின்றி காய்ந்து போயுள்ளன.

## கால்நடைகள் நீரின்றி உயிரிழப்பு



கால்நடைகள் தமது தாகத்தைத் தீர்ப்பதற்கு நீரின்றி அங்குமிங்குமாக திரிகின்றன. இதனால் சில கால்நடைகள் நீரின்றி உயிரிழக்கின்றன.

இதைவிட விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிவகைகள் நீரின்றி வரண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற முடியாது கஷ்டப்படுவதாகக் கூறுகின்றனர்.

எனவே அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவை விரைந்து குறித்த கிராமங்களுக்கு நேரில் சென்று நிலங்களை பார்வையிட்டு இழப்பீட்டை வழங்க வேண்டுமென பாதிக்கப் பட்ட மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

895

# ஆப்பைப் பிடுங்கிய குரங்கு!

...சமய சந்தர்ப்பம் அறியாமல் பிருகஸ்பதியானவனே பேசினாலும் அவன் வெகுமதி பெறாமல் போவது மட்டும் அல்லாமல் வெறுப்பையும் தேடிக் கொள்கிறான்.

இவ்வாறு பல மேற்கோள்களை எடுத்துக் கூறியது தமனகன்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்ட கரடகன், சரி நீ அங்கேபோய் முதலில் என்ன பேசுவாய்? என்று கேட்டது.

காலாகாலத்தில் பெய்த மழையால் ஒரு விதையிலிருந்து மற்றவிதைகள் முளைப்பதுபோல் ஒரு வார்த்தைக்குக் கிடைக்கும் பதிலிருந்துதான் அதைத் தொடர்ந்து மற்ற பேச்சுக்களும் உண்டாகின்றன.


அரசன் என்பவன் என்றுமே வீழ்ச்சியை விரும்பாதவன். அவன் உத்தரவை எதிர்பாராமலே அவன் எதிரில் பேசலாம்.

அதுவே நல்லவனுக்குச் சிறந்த வழி; மற்றவையெல்லாம் தீய வழிகளே என்று கூறியது தமனகன்.

தமனகனும் கரடகனும் இப்படி நீதிகள், உதாரணங்கள், மேற்கோள்கள் எனப் பலவற்றையும் கூறித் தங்களுக்குள் விவாதித்துக்கொண்ட பின் கடைசியாக தமனகன் பிங்களகனிடம் செல்வது என்பது முடிவாயிற்று.

நீ அரசனிடம் போகலாம். உன் முயற்சி வெற்றியடையட்டும். உன் விருப்பம் நிறைவேறட்டும்! அரசன் அருகில் இருக்கும்போது நீ கவனமாக இரு! உன்னையும் உன் அதிர்ஷ்டத்தையும் நம்பிப் பிழைப்பவன் நான் என்று கூறி அதை வழியனுப்பி வைத்தது கரடகன்.

பிறகு, கரடகனை வணங்கிவிட்டு பிங்களகனைப் பார்க்கச் சென்றது தமனகன்.



தமனகன் தன்னிடம் வருவதை அறிந்த பிங்களகன், வாயில் காப்போனிடம் அமைச்சர் குமாரன் தமனகன் நம்மைக்காண வருகிறான்; அவன் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவன். அவனை உள்ளே வரவிடு என்று கூறியது.

உள்ளே வந்த தமனகன் பிங்களகனை வணங்கியது.

பிறகு அது காட்டிய இருக்கையில் அமர்ந்தது. அதைப் பார்த்து பிங்களகன், தமனகனே! சுகமாக இருக்கிறாயா? உன்னைப் பார்த்து வெகு காலமாயிற்றே! என்று கேட்டது.

அரசே! என்னால் தங்களுக்கு ஒரு பயனும் இல்லாவிட்டாலும் தகுந்த சமயம் வரும்போது தங்களிடம் சொல்ல வேண்டியதை நான் சொல்லித் தானே ஆகவேண்டும். ஏனென்றால் அரசர்களுக்கு உதவாதது எதுவும் இல்லை என்று ஒரு பழமொழி கூறுகிறது.

அரசே! பல்லைக் குத்துவதற்கும் காதைக் குடைவதற்கும் ஒரு சிறு துரும்பு இருந்தாலே போதும். அதுபோல நானும் உங்களுக்கு ஏதாவதொரு வகையில் உதவியாக இருக்கலாமென்று நினைக்கிறேன்.

மேலும் நாங்கள் பரம்பரையாக தங்களுக்கு ஊழியம் புரிபவர்கள்; ஆபத்து வேளையிலும்கூட தங்களைத் தொடர்ந்து வருபவர்கள் நாங்கள். அதைத் தவிர எங்களுக்கு வேறு வேலை என்ன இருக்கிறது? ஒரு பழமொழி கூறுவது போல்,

நகைகளையும் வேலையாட்களையும் வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும்.

நினைத்தபடியெல்லாம் செய்ய முடியும் என்பதற்காக சூடாமணியை யாராவது காலில் அணிந்து கொள்வார்களா?

அரசே என்னைப் பார்த்து வெகு நாளாயிற்று என்று தாங்கள் சொன்னீர்கள். அது ஏன் என்பதற்கான காரணத்தையும் இப்போது நான் சொல்கிறேன்.

ஊழியர்கள் இல்லாமல் அரசன் என்பவன் இல்லை. அதுபோல் அரசன் இல்லாமல் ஊழியர்களும் இல்லை. அவர்களுக்கிடையே ஒரு பிணைப்பு இருக்க வேண்டும்.

ஆனாலும் ஊழியரின் தகுதியும் முதலாளியின் குணத்தைப் பொறுத்தே இருக்கும் ஒரு பழமொழி கூறுவது போல்,

குதிரை, ஆயுதம், வீணை, சொல், புத்தகம், ஆண், பெண் இவை அனைத்தும் ஒருவருக்குப் பயன்படுவதும் பயன்படாமல் போவதும், அதை உபயோகிப்பவரின் திறமையைப் பொறுத்து உள்ளது.

ஆயினும், மற்றொரு கருத்தையும் தங்கள்முன் வைக்க நான் விரும்புகிறேன். நரிதானே என்று தாங்கள் என்னை அலட்சியமாகக் கருதலாம். அது சரியல்ல. ஏனெனில், கல்லிலிருந்தும் தங்கமும், பூச்சியிலிருந்து பட்டும், பசுவின் ரோமத்தலிருந்து புனிதமான புல்லும், சேற்றிலிருந்து செந்தாமரையும், சமுத்திரத்திலிருந்து சந்திரனும், சாணத்திலிருந்து தாமரையும், நாகத்திலிருந்து இரத்தினமும், விறகிலிருந்து நெருப்பும், பசுவின் பித்தநீரிலிருந்து கோரோசனையும் உண்டாகின்றன. இவை அனைத்தும் தத்தம் சிறப்பினால் பிரகாசிக்கின்றனவேயன்றி அவற்றின் பிறப்பினால் அல்ல.

இதைக் கேட்ட பிங்களகன், அப்படியெல்லாம் சொல்லாதே. நீ நம்முடைய அமைச்சரின் மகன். வெகு காலமாக நம்மிடம் இருப்பவன் என்றது. தங்களிடம் ஒன்று கூற விரும்புகிறேன் என்றது தமனகன்....
..............

(தொடரும்)



## 08.2014 17 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1807 - ராபர்ட் ஃபுல்ட்டனின் முதலாவது அமெரிக்க நீராவிப்படகு நியூயோர்க்கிலிருந்து புறப்பட்டது. இதுவே உலகின் முதலாவது வர்த்தக நீராவிப்படகு ஆகும்.
- 1862 - லக்கோட்டா பழங்குடியினர் அமெரிக்காவின் மினசோட்டாவில் வெள்ளையினக் குடியேற்றவாதிகள் மீது தாக்குதலைத் தொடுத்தனர்.
- 1939 - த வைசார்ட் ஒஃப் ஓஸ், முதற்தடவையாக நியூயோரக் நகரில் காண்பிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வின்ஸ்டன் சேர்ச்சில், பிராங்கிளின் ரூஸ்வெல்ட், கனடா பிரதமர் வில்லியம் லயன் மக்கென்சி கிங் ஆகியோர் கலந்துகொண்ட கியூபெக் மாநாடு ஆரம்பமானது.
- 1945 - இந்தோனேசியா விடுதலையை அறிவித்தது.
- 1947 - இந்தியாவையும் பாகிஸ்தானையும் பிரிக்கும் ராட்கிலிஃப் கோடு வெளியிடப்பட்டது.
- 1958 - பயனியர் 0 சந்திரனைச் சுற்ற அனுப்பப்பட்டது. புறப்பட்ட 77 செக்கன்களில் இது அழிந்தது.
- 1959 - மொன்டானாவில் இடம்பெற்ற 7/5 அளவு நிலநடுக்கத்தினால் குவேக் ஏரி அமைக்கப்பட்டது.
- 1960 - காபொன் பிரான்சிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1970 - வெனேரா 7 விண்கலம் ஏவப்பட்டது. வேறொரு கோளிலிருந்து (வெள்ளி) வெற்றிகரமாகத் தகவல்களை அனுப்பிய முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 1982 - முதலாவது இறுவட்டு (CD) ஜேர்மனியில் வெளியிடப்பட்டது.

### பிறப்புகள்

- 1761 - வில்லியம் கேரி, ஆங்கில புரட்டஸ்தாந்து மதகுரு (இ. 1834)
- 1963 - ஷங்கர், திரைப்பட இயக்குநர்
- 1975 - பிள்ளையான், இலங்கை, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்
- 1986 - ரூடி கே, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர
- 1961 - திருமாவளவன், தமிழக அரசியல்வாதி

### இறப்புகள்

- 1786 - பிரஷ்யாவின் இரண்டாம் பிரெடெரிக், பிரஷ்ய மனனன் (பி. 1712)
- 1969 - லுட்விக் மீஸ் வான் டெர் ரோ, ஜேர்மனியக் கட்டிடக்கலைஞர் (பி. 1886)
- 1988 - ஸியா உல் ஹக், பாகிஸ்தான் அதிபர் (பி. 1924)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## “சாதனை நாயகனின் சரித்திரம்”


38

முஷ்டாக் 17 ஆண்டுகள் 82 நாட்களில் செய்த சாதனையை நியூசிலாந்தில் செஞ்சுரி அடித்திருந்தால் சச்சின் முறியடித்திருப்பான்.

உலகளவில் செஞ்சுரி அடித்த இரண்டாவது குறைந்த வயது வீரர் மற்றும் இங்கிலாந்து மண்ணில் செஞ்சுரி அடித்த மிகக் குறைந்த வயது வீரர் என்ற பெருமைகளையும் சச்சினை வந்தடைந்தன. சச்சின் 119 ரன்களுடனும் பிரபாகர் 67 ரன்களுடனும் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடி போட்டியை டிரா செய்தனர்.

ஓவரில் நடைபெற்ற மூன்றாவது இறுதி டெஸ்ட் போட்டில் இந்தியா மிக அதிகமாக 9 விக்கெட் இழப்பிற்கு 606 ரன்கள் எடுத்திருந்தது. ரவி சாஸ்திரி 187, கபில் 110 என விளாசித் தள்ளியிருந்தனர். சச்சின் எடுத்தது 21 ரன்கள் மட்டுமே. இங்கிலாந்து அணியில் கூச் மற்றும் டேவிட் கோவர் ஆகியோர் திறமையாக விளையாடி போட்டியை டிராவில் முடித்தனர். இருப்பினும் முதல் டெஸ்டில் ஜெயித்த காரணத்தினால் இங்கிலாந்து தொடரைக் கைப்பற்றியது. இங்கிலாந்து தொடரை வென்ற நிகழ்ச்சியை விட, சச்சின் இரண்டாவது டெஸ்டைக் காப்பாற்றியதுடன் செஞ்சுரி அடித்த செய்திகள் தான் அந்நாட்டுப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகளாக வந்தன. இங்கிலாந்து பயணத்திற்கு முன்பு சச்சினை ஓரளவு குறைத்து மதிப்பட்டவர்கள் இந்தத் தொடருக்குப் பிறகு அவனை நட்சத்திர அந்தஸ்திற்கு தூக்கிவிட்டிருந்தனர். கிரிக்கெட்டர் இன்டர்நேஷனல், விஸ்டன் கிரிக்கெட் உள்ளிட்ட கிரிக்கெட் விளையாட்டிற்கான பிரத்யேகப் பத்திரிகைகள் மற்றும் பொதுவான பத்திரிகைகள் எல்லாமே சச்சினின் பொறுப்பான ஆட்டத்தை அணு அணுவாக ரசித்து எழுதியிருந்தன. சச்சின் பார்ப்பதற்குத்தான் சிறுவன். ஆனால், மட்டையைக் கையில் எடுத்து பேட்டிங் செய்யத் துவங்கினால் அது சர்வதேசத் தரத்திற்கு இணையாக இருக்கும். அவனைக் குறைத்து மதிப்





### உருவம் கண்டு எள்ளாமை வேண்டும்!

பிடுவோர்கள் முகத்தில் கரியைப் பூசிக்கொள்வது நிச்சயம் என்று இங்கிலாந்து வீரர் ஃபிரேசரே பாராட்டினார். உருவு கண்டு எள்ளாமை வேண்டும். உருள் பெருந்தேர்க்கு அச்சாணி ஆன்னார உடைத்து என்று வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறியது இங்கே எப்படிப் பொருந்துகிறது பாருங்கள்.

ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல்நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17தான். ஓட்டுப் போடவோ, ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடவோ ஏன் இப்போது மதுபானம் அருந்துவதற்குக் கூட அவனுக்கு 18 வயது முடியவில்லை. சச்சினுக்கும் சம்பிரதாயப்படி ஷாம்பைன் வழங்கப்பட்டபோது சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம். முதல் டெஸ்ட் போட்டிகள் தொடங்கி 12 மாத காலத்தில் சச்சின் பாகிஸ்தான். ஷார்ஜா, நியூசிலாந்து, இங்கிலாந்து என நான்கு நாடுகளுக்குப் பயணித்து தன் ரன் குவிப்பு மூலம் தனது தேர்வை நியாயப்படுத்தினான்.

**ஆட்ட நாயகன் விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது. பின்னர் நடைபெற்ற கொண்டாட்டங்களில் மேல்நாட்டு வழக்கப்படி அனைவரும் குடிப்பதற்கு ஷாம்பைன் வழங்கப்பட்டது. சச்சினின் வயதோ 17 தான். சச்சின் நெளிந்து கொண்டே சார் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் சட்டப்படி குடிக்க உரிமை. எனக்கு 17 வயதுதான் ஆகிறது என்றானாம்!**

கே. ரமேஷ்

(தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 09 இல் கூட்டெண் 03 இன் பலன்கள்



### தோற்றம்

68

செவ்வாயில் குரு சேர்ந்த யோகம், ஆதிக்கமாகும். இவர்கள் உயரமாக சிவப்பாக, அழகாக இருப்பர். சிறு கண்களும் நீண்ட மூக்கு எடுப்பாகவும் பெரிய வாயும் வரிசையான பற்களும், உறுதியான தாடையும் சாதரண நெற்றியும் மெல்லிய உதடுகளும், சற்று நீண்ட சதுர முகமும் மேல் நெற்றி மேடாகக் கூம்பு வடிவிலும் இருக்கும். கம்பீரமான வாட்டசாட்டமான கவர்ச்சி உருவம் உண்டு.

### குணம்

தெய்வ பக்தி, பூசை, ஆகாரம், சாத்திரம், சம்பிரதாயங்களில் நம்பிக்கையிருக்கும். ஒழுக்கம் கட்டுப்பாடு இருக்கும். வாழ்க்கையில் ஏதாவதொரு நோக்கம் கொண்டு உழைப்பர். துணிவும் வேகமும் இருக்கும். எதையும் ஆழ்ந்து யோசித்து திட்டமிட்டே செய்யத் தொடங்குவர்.

குடும்பப் பற்று பாசம் இருக்கும். பெற்றோர், பிள்ளை, மனைவி, நண்பர், உற்றார் மேல் அன்புடனிருப்பர். ஆனால், யார் குற்றம் செய்தாலும் கண்டிப்பார். விரட்டுவர். நேரடிச் சண்டை என்றாலும் தயாராக நிற்கும் இவர்கள் பெரும்பாலும் தந்திரமாக நடந்து வெற்றி பெறுவர். முரடர்களைப் பேச்சால் வசியம் செய்து வைத்திருப்பர். சமயத்தில் எல்லோரையும் எல்லா வழிகளிலும் முயன்று பகைவரை வெல்லுவர். இவர்கள் வழியில் குறுக்கிடா விட்டால் இவர்கள் வம்புக்கு வர மாட்டார்.

எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விடுவர். அறப்பணி, கோயில் பணி என்று பொதுப் பணிகளில் ஈடுபடுவர். பகைவரினும், இழப்பு ஏற்படினும் தம் காரியத்தில் பின்வாங்க மாட்டார். கொடுத்த வாக்கை மாற்ற மாட்டார்.

நன்கு பேசத் தெரிந்தவர். தமக்குச் சரியெனப்பட்டதைப் பிரசாரம் செய்வர். கோபம் சட்டெனக் கொள்வர். நிர்வாகம் சரிவர நடக்கவும் பிறர் நன்கு கற்க வேண்டும் என்றும் பிறர் நலம் பொதுநலம் கெடாதிருக்கவும் கோபம் கொள்ளுவர்.

மற்றப்படி பொறுமை, நிதானம் தவற மாட்டார். தீர்மானித்து விட்டால் உடனே செய்து முடிக்க முற்படுவர். இது இவரை அவசரக் காரர்போல காட்டும்.

வெகுளியாகப் படுவார். பார்வையால் இவரை அளவிட முடியாது. இடத்திற்கேற்ப கள்ளங் கபடாக நடந்து கொண்டே எதையும் சமாளிப்பர். பகைவர் அதிகப்படுவர்.

மரியாதையை, புகழைப் பெரிதும் விரும்புவார். நிறைய சிரமங்களைச் சமாளித்திருப்பர். தீவிரமாக முரட்டுத்தனமாக இல்லாதவர்களுக்குத் தலைமை ஏற்பர். உல்லாசமாக உலக புலனின்ப சுகத்தேட்டமுள்ளவராக வாழ்க்கையை அனுபவிப்பர்.

காதல், திருமணம் பிரச்சினையைத் தரும். இலக்கிய, தொழில், கலையறிவை விரும்பி அடைவார். தம் இனம், மதம், மொழி, நாடு, தத்துவ மேன்மையை நாடிப் போராடத் தயாராக இருப்பர்.

### குடும்பம்

திருமண பாக்கியம் உண்டு. நல்ல குணவதி மனைவியாக வருவாள். வாரிசுகள் ஏற்படும். இவர்களின் சாடிச குணத்தால் மனைவி அடிக்கடி வெளியேறுவாள். திரும்பி வருவாள். பிற தொடர்புகளும் இவர்களுக்கு இருக்கும். வாரிசுகளால் பிரச்சினை ஏற்படும். சொத்து விவகாரத்தில் தகராறு மூளும், பெண்களால் இவர்களுக்கு லாபமும் உண்டு. குடும்ப வாழ்க்கை கெடவும் செய்யும். பெயரளவில் நீட்டிக்கவும் செய்யும்.

### தொழில்

ஆராயும் புத்தியும் சுயநல நோக்கமும் உடைய இவர்கள் நன்கு படிப்பர். படிப்பு அமையாவிடினும் அனுபவத்தில் தொழிலறிவை மிகப்பெறுவர். அரசியலுக்கு ஏற்றவர். அறிவியலில் சிறப்பர். கணிப் பொறியியல், கணக்கியல் பட்டம் பெற ஏற்றவர். பெரிய தொழிலதிபராக அல்லது அவை பற்றிய தொழிலகங்களில் முக்கிய அலுவலர்களாக இருப்பர்.

வீடு முதல் நாடு வரை நன்றாக நிர்வகிக்க அறிந்தவர். சிக்கனமாக இருப்பார். சிக்கனத்தை அறிவுறுத்துவார். தொடக்கத்தில் தொடங்கிய தொழிலைக் கூட விடாமல் கடைசி வரை நடத்தி ஆதாயம் பண்ணிடுவார்.

பள்ளி முதல் கல்லூரி வரை நல்ல கல்வியாளராக வருவார். மக்களவைகளில் இடம் பெறக் கூடியவர். நன்கு பேசக்கூடிய வக்கீல் தொழில், அறுவை சிகிச்சை புரியும் சர்ஜன்களாக, நர்சுளாக, நீதிபதிகளாக அமைச்சர்களாக முன்னேறுவார்.

அணு விஞ்ஞானம் முதல் ஆத்திச்சூடி வரை அறியாற சங்கதிகளே இல்லை என இருப்பர்.



பொலிஸ், இராணுவம், தீயணைப்புத் துறைகளில் பணிபுரிவர். புரட்சி பேச்சாளராக, எழுத்தாளராக, ஓவிய மேதைகளாக, எரிபொருள் தயாரிப்பாளராக அல்லது விற்பனையாளராக இருப்பார். கட்டட வேலை செய்வார். நிலவியல் நிபுணராக சிவில் இன்ஜனியராக இருப்பார். விளையாட்டு வீரராகவும் வாழ்வார். சினிமா பத்திரிகை போன்ற மீடியாக்களிலும் சோதிடராகவும் இருப்பார். புதையல் கூட எடுப்பார். எப்படியும் வீடு வாசலுடன் பெரிய நிலையை அடைந்திடுவர்.

### நோய்

தோல் நோய் எக்சீமா, கரப்பான், புற்று, வயிறு தொடர்பான கோளாறு அசிடிடி வரும். விபத்தும் அடி, காயம்படுதலும் உண்டு. தொண்டை பாதிப்புறும் கபம், வாதம் தொல்லை தரும். அக்கி, அம்மை, மஞ்சக்காமாலை வர வாய்ப்புண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரணவாய் மூத்த விநாயகர் கோவில் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றபோது... (படங்கள் :- கரணவாய் செய்தியாளர்)



நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் காரைநகர் தியாகராஜா கல்லூரி மாணவிகளின் பக்திப்பாடல் அண்மையில் நல்லை ஆதீன தெய்வீக அரங்கில் இடம்பெற்றபோது...
(படம் :- என்.குமார்)



நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் காரைநகர் தியாகராஜா கல்லூரி மாணவிகள் பக்திப்பாடல் இடம்பெறுவதையும் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவி பவனுஜா தெய்வேந்திரன் பண்ணிசை இசைப்பதையும் படத்தில் காண லாம்.
(படம் :- என்.குமார்)





பருத்தித்துறை கலைமகள் சர்வதேச கல்லூரியின் ஆங்கில தின விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி உட்பட்ட விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் வட இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் எஸ்.இரவீந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள் :- தும்பளை செய்தியாளர்)



யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட நாவலர் சோலை முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விநோத உடைப் போட்டியில் பங்குபற்றிய சிறார்கள் சபையின் தலைவர் இ.வசந்தசேனன், செயலாளர் இரா.செல்வவடிவேல், பரீட்சை செயலாளர் பொ.கமலநாதன் மற்றும் நிகழ்வின் பிரதம விருந்தினர் யா/வண் நாவலர் மகா வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு ஆகியோருடன் நிற்பதை படத்தில் காணலாம்.



நல்லூர் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்று வரும் தெய்வீக இசையரங்கில் பண்ணிசை கச்சேரி அண்மையில் இடம்பெற்றது. இதன் போது தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன், க.சித்திரா ஆகியோர் இசைப்பதை படத்தில் காணலாம்.

நிகழ்வின் நிழல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளை திருப்பியனுப்ப நீதிமன்று தடை உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் புகலிடம் கோரி தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்பும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து இலங்கையில் புகலிடம் கோரி வந்திருந்த பெண்ணொருவர் தன் சார்பிலும் பூசா தடுப்பு முகாமில் உள்ள அவரது குடும்பத்தவர்கள் மூவர் சார்பிலும் தாக்கல் செய்திருந்த மனு தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தாம் பாகிஸ்தானுக்குத் திருப்பியனுப்பப்பட்டால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அடிப்படையில் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்ததாக அவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் லக்ஷான் டயஸ் தெரிவித்தார்.

அதன்படி, இந்த விவகாரத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் வரை ஒகஸ்ட் 29 ஆம் திகதி பாகிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கையை இடை நிறுத்தி வைப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

"இடைப்பட்ட காலத்தில் அரசாங்கமும் ஐ.நாவின் அகதிகளுக்கான நிறுவனமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அகதிகள் தொடர்பில் நல்ல முடிவொன்றை எடுக்க அவகாசம் கிடைக்கும்" என்றார் லக்ஷான் டயஸ்.

"பாகிஸ்தானில் குறிப்பாக அகமதியா, ஷியா மற்றும் கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட இன, மதக் குழுக்களுக்கு பெரும்பான்மை சன்னி சமூகத்தவர்களிடமிருந்தும் இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளிடமிருந்தும் கடுமையான அச்சுறுத்தல்கள் உள்ளன'' என்றும் அவர் தெரிவித்தார். (6)

# புகலிடக் கோரிக்கையாளர்களை திருப்பியனுப்புவது நியாயமானது

## அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து பாகிஸ்தானிய அகதிகளை திருப்பியனுப்பிய செயற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கம் மீண்டும் நியாயம் கற்பித்துள்ளது.

இலங்கை இந்த விடயத்தில் சர்வதேச சட்டங்களை மீறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனம் சுமத்திய குற்றச்சாட்டை அரசாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நிராகரித்துள்ளார்.



இலங்கையில் தங்கியிருந்த பாகிஸ்தானிய அகதிகளை கைது செய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் கடந்த ஜுன் 9 ஆம் திகதி ஆரம்பித்தது.

இதன்படி 214 பாகிஸ்தானியர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இதில் 28பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் அவுஸ்திரேலியா வுக்கு செல்லும் சட்டவிரோத இலங்கை அகதிகளை நாட்டுக்கு திருப்பி யனுப்ப வேண்டும் என்று இலங்கை கோருகின்றபோது பாகிஸ்தான் அகதிகளை அனுப்புவதில் தவறில்லை என்றும் அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (6)

# இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் பாதுகாப்பு திடீரென அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் இந்திய பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கை பேணி வரும் நெருங்கிய உறவுகள் காரணமாக இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளது பிரசன்னத்தை இந்தியா அதிகரித்துள்ளது.

உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகராக கப்டன் பிரகாஸ் கோபாலன் கடமையாற்றி வருகின்றார்.

முதல் தடவையாக அவருக்கு உதவி வழங்கும் நோக்கில் பிரதி பாதுகாப்பு ஆலோசகராக கேணல் குரிந்தர் கலோரய் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் கடற்படை அதிகாரிகளே பாதுகாப்பு ஆலோசகர்களாக கடமையாற்றி வந்தனர்.

முதல் தடவையாக இராணுவ அதிகாரிகள் பாதுகாப்பு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவும் பாகிஸ்தானுடன் மிக நெருங்கிய பாதுகாப்பு உறவுகளைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் காரணிகளை கருத்திற்கொண்டு இந்தியாவும் இலங்கை பாதுகாப்பு சார் தந்திரோபாயங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நவம்பரில் நடைபெறவுள்ள சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் கலந்து கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது. (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### தெய்வீக இசையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு தினமும் மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது.

இன்றையதினம் எஸ்.கோபிதாசின் மாணவர்கள் வழங்கவுள்ள வயலின் இசையில் மிருதங்கம் வி.ரமணாவும் கஞ்சிரா பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தரசர்மாவும் முகர்சிங் எஸ். செந்தூரனும் வழங்கவுள்ளனர்.

வயலின் சொலோவில் வயலின் எஸ்.கோபிதாஸும் மிருதங்கம் ஜி. கண்ணதாசனும் கெஞ்சிரா பிரம்மஸ்ரீ எஸ்.சிவசுந்தரசர்மாவும் முகர்சிங் எஸ்.செந்தூரனும் வழங்கவுள்ளனர்.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சொற்பொழிவும் கலை நிகழ்வும் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்றைய தினம் இரா.செல்வவடிவேல் ஆற்றவுள்ள கந்தரலங்காரம் எனும் தலைப்பிலான சொற்பொழிவும் இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்மன் அறநெறிப்பாடசாலை, சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி அறநெறிப் பாட சாலை, கட்டுவான் ஸ்ரீசிவலோகபதி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, தொண்டைமானாறு பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய் சாந்தி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### ஆன்மீக அருளுரை

நல்லூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மீக அருளுரை தினமும் இரவு 7.15 மணிக்கு நல்லூர் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் சின்மயா மிஷன் யாழ்.வதி விட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் சந்நியாசம் எனும் தலைப்பிலான அருளுரை இடம்பெறவுள்ளது.

### தெய்வீக கலையரங்கு

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் தெய்வீக கலையரங்கு தினமும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றுவருகின்றது.

இதன் இன்றைய நிகழ்வுகளாக தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களும் மாணவர்களும் வழங்கும் நடனம், பல்லியம், இசை என்பன இடம்பெறவுள்ளது.


### இசைப்பேருரை

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபையின் ஏற்பாட்டில் இடம் பெற்று வருகின்ற கம்பராமாயண இசைப்பேருரை தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் பிரம்மஸ்ரீ. சிவ.வை.நித்தியானந்தசர்மாவால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் பாதுகாபட்டாபிஷேகம் எனும் தலைப்பிலான இசைப்பேருரை இடம் பெறவுள்ளது.


### இசைநிகழ்ச்சி

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றிய ஆதரவில் பிரமகான சபையினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்று வருகின்றது. இன்றைய நிகழ்வில் பிரம்மஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள் சிவகுமார் வழங்கும் மெண்டலின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு இன்று கார்த்திகை திருவிழா



## அன்பு அதுபோதும்



மங்காத ஒளியாக மாநகர வீதியிலே
சிந்தாத தேனாக நல்லைக்கந்தன்
சிறப்பாட்சி புரிகின்றான் பாருங்களேன்
மறவாது பாடுங்கள் அவன் புகழே
குடைபிடித்தானவன் குடிகாக்க
படை யெடுத்தானவன் பகை மாற்ற
தடையில்லையவனருள் பெற்றிடவே
மடை திறந்த அன்பு அதுபோதும்

திருமதி. ஜெ.கந்தவேள் , கொக்குவில்.

## சரணம்



தேரோடு வீதி தன்னில்
தேகவலம் வருபவர்க்குத்
தேய்ந்து விடும் பாவமெல்லாம்
தெய்வக் கந்தனின் அருளால்...
சுந்தரவேல் முருகன் பதி
தூய்மையொடு வலம்வரவே
வந்தனையும் பலநலமே
வணங்கி வளம் பெறுக என்றும்...

கலாஞானி, கதிரேசு சிவலிங்கம்.

## வேலன் துணை

வேலன் எனும் சொல்லுக்கு வெற்றியுண்டு
அதனை நாடிவரும் பக்தருக்கு ஆசியுண்டு
எழில் மிகு யாழ்.நகரில் உண்டு அவன் துணை
உதிக்கும் செங்கதிர் இரண்டும் அவன் இருவிழிகள்
அவன் திருவடிகள் எத்தனை– அதனை
நாடி வரும் பக்தர் கூட்டம் எத்தனை
அகந்தையை ஒழித்து நீதியை நிலைநாட்டும்– அவன்
திருவருளை நாமும் பெறவேண்டும்.

ரி.துவாரகன், யா/ உரு.சை.த.வி.)

## குறை தீர்க்கும் குமரன்



நீர் வளி தீ ஆகாயம் நிலம்
ஆய (அற்) பூதங்களைப் படைத்த
அரவனின் மைந்தனே குகனே
அடியாரின் குறை தீர்க்க வந்தருள்க.

சுந்தரம்பிள்ளை, அனலையூர்

## நாளும் ஒருவடிவாய் நற்பதி நல்லையில் வீதி வருகின்றான்



முத்தமிழால் வைதாரையும் வாழ்விக்கும்
முருகன் பக்தர் சூழ பவனி வருகிறான்
தானும் சிலம்பும் தண்டையும் சண்முகமும்
தோன்றிடவே நாளும் ஒருவடிவாய்
நற்பதி நல்லூரில் வீதி வருகின்றான்.
சூழும் அடியார் மனதினில் சுகமளிக்கும்
சுப்பிரமணியனாய் வேளை தவறாத மணி
ஒலிக்கும் வீதியில் பவனி வருகின்றான்.

வேலணைபாலா, சமாதான நீதிவான்
ப.பாலசுப்பிரமணியம்.

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

ஓமெனும் பிரணவத்தினுட்பொருள்சொ லாப்பிரமன்
தாம்திருந்த வேண்டித்தண்டித்த– தூமறையோன்
தந்தைக் குபதேசம்சாற்றியநல் லூர்க்குமரன்
வந்தீவா னென்றும் வரம்

கலாபூஷணம், சந்தக் கவிஞர்,
நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஜென்மம் போதாது என்ற நட்வர் சிங்கின் சுயசரிதை புத்தகத்தைப் படித்துவிட்டு, என்ன ஜென்மம்டா இவர்? என்று கொந்தளிக்கிறார்கள் காங்கிரஸ்காரரர்கள்.

நேரு குடும்பத்தால் வளர்ந்து நேரு குடும்பத்துக்கு எதிராகப் புழுதி வாரித் தூற்று தன்னைப் பாதிக்க அனுமதிக்கவே இல்லை. 1930களில் நேருவின் வாழ்க்கையில் ஏகப்பட்ட இன்னல்கள்.

இந்தியச் சுதந்திரம், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெரியவே இல்லை. காங்கிரசுடன்.... ஏன் காந்திஜியுடனும் கூட அவருக்குக் கடும் கருத்து காரபூர்வ வேட்பாளரான சஞ்சீவி ரெட்டியை எதிர்த்து, இந்திரா காந்தியின் வேட்பாளரான வி.வி.கிரி ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு ஜெயித்தது முதல், அவசர நிலைப் பிரகடனம் வரையிலான காலங்களில் சரித்திர முக்கியத்துவம் வாய் பிரபாகரன் பெங்களூர் வந்திருப்பதை நாங்கள் இரகசியமாக வைத்திருந்தோம் என்றாலும் எப்படியோ அந்தத் தகவல் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்குத் தெரிந்துவிட்டது.

மிஸ்டர் ராஜீவ்... பிரபாகரனை எங்களிடம் ஒப்படை தோம்.

பிரபாகரனை, முதல்வர் எம்.ஜி.ஆர் அலுவலகத்திலேயே வைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிக்கும்போதே. எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு நான்கு கோடி ரூபா

# ராஜீவ் வியூகத்தை முறித்த எம்.ஜி.ஆர்



அளித்தார். அது எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. எம்.ஜி. ஆர். யாழ்ப்பாணத்தை தமிழ்நாட்டின் நீட்சியாகவே பார்த்தார். ஆனால், தமிழீழம் தொடர்பான யதார்த்தங்களையும் நிதர்சனங்களையும் புரிந்துகொள்ளாத ராஜீவ் காந்தியால் எதையும் தடுக்க முடியவில்லை... தன்னை நோக்கி வந்த மரணம் உட்பட!

### இரண்டாவது இத்தாலியர்!

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க தோல்வியடைந்த சமயம், பல கட்சிகளின் சங்கமத்துடன் சோனியா காந்தி தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைந்தது. அனைவரும் 7 ரேஸ் கோர்ஸ் இல்லத்தில் சோனியா காந்தி பிரதமராகக் குடியேறுவார் என்று எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், ராகுல் காந்தி, சோனியாவுக்கும் பிரதமர் பதவிக்கும் இடையே பெருந்தடையாக இருந்தார். பாட்டியைப்போல, அப்பாவைப் போல அம்மாவையும் இழக்க நான் தாயார இல்லை. அதனால், அம்மா பிரதமர் ஆகாமல் இருக்க நான் எந்த எல்லைக்கும் செல்வேன் என்று வீம்பாக இருந்தார்.

ராகுல், சோனியா போல அல்ல. தன் வார்த்தையில் வாதத்தில் உறுதியாக இருப்பார். 24 மணி நேரம்தான் கெடு. அதற்குள் பிரதமர் பதவியை நான் ஏற்றுக் கொள்ளப்போவது இல்லை என்று அறிவியுங்கள் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் ராகுல்.

மகனின் வார்த்தைகளை உதாசீனப்படுத்த முடியவில்லை சோனியாவால். கையறுநிலையில் கண்களில் நீருடன் இருந்தார். அந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தை நானும் மன்மோகன் சிங் மட்டுமே அறிவோம். வேறு வழியே இல்லாமல் மன்மோகன் சிங்கை பிரதமராக அறிவித்தார் சோனியா.

பின்னாட்களில் சோனியா காந்தி பிரதமர் பதவியை விட்டுக்கொடுத்தது பற்றி அவருடன் கலகலப்பாக உரையாடிக்கொண்டிருப்பேன். ஒரு முறை, உலக வரலாற்றில் இரண்டே நபர்கள்தான் தங்களைத் தேடி வந்த பதவியை ஏற்க மறுத்தார்கள். இருவருமே பிறப்பால் இத்தாலியர்கள் என்றேன். அந்த இன்னொருவர் யார்? என்று சிரித்துக் கொண்டே கேட்டார் சோனியா.

ஜூலியஸ் சீஸர் என்றேன் நான்!

-ஜூனியர் விகடன்-

வது எந்த வகையில் நியாயம்? என்பது அவர்களின் கேள்வி. சுயசரிதைகள் என்பது பயம் இன்றியும் ஒளிவு மறைவு இன்றியும் நேர்மையோடும் மனச்சாட்சியுடனும் எழுதப்படும் போதுதான் அவை காலத்தின் கண்ணாடியாக உருவெடுக்கும் என்பது நடுநிலையாளர்களின் கருத்து. புத்தகத்தில் என்ன இருக்கிறது?

நேருவின் சோர்வான தருணங்கள், இந்திரா காந்தியிடம் லிஃப்ட் கேட்டு அமெரிக்காவிலிருந்து விமானம் மூலம் டெல்லி வந்தது, இலங்கை விடயத்தில் ராஜீவ் காந்தி பக்குவம் இல்லாமல் நடந்து கொண்ட விதம், கிட்டத் தட்ட பண்ணையார் மனோபாவத்துடனே செயற்படும் சோனியாவின் இயல்புகள்... என உண்மைச் சம்பவங்களுடன் தனது சொந்த அபிப்பிராயங்களையும் இணைத்து பக்கத்துக்குப் பக்கம் பரபரப்பு சேர்த்திருக்கிறார் நட்வர் சிங். புத்தகத்தின் பக்கங்களிலிருந்து இங்கே கொஞ்சம்...

### நேருவின் மன உளைச்சல்!

1922 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 10 ஆண்டுகள் நேரு சிறையில் இருந்திருக்கிறார். சிறைவாசம், ஒருவரை உருக்குலைத்துவிடும். ஆனால், நேரு அப்படி ஒரு சிதைவு வேறுபாடுகள். அவருடைய மனைவி நோயின் பிடியில் தவித்துக்கொண்டிருந்தார்.

மகள் இந்திராவும் நல்ல உடல்நிலையில் இல்லை. நிலையாக ஒரே பள்ளியில் படிக்க முடியாத சூழ்நிலையும் கூட. இவர்கள் எல்லோரையும் கவனிக்க வேண்டிய நேரு, சிறையில் இருந்தார். அப்போது அவருடைய தாய்க்கு மாரடைப்பு என்ற பாரமும் சேர்ந்தது. அப்போதுதான் தன்னையும் அறியாமல் உடைந்து அழுதார் நேரு.

இதுபோன்ற கடுமையான காலகட்டங்களில் எழுத்தும் வாசிப்பும்தான் அவரை உயிர்ப்போடு வைத்திருந்தன. நேரு பிரதமரான பிறகு அவருடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்தப் பொன்னான கால கட்டத்தில் உலகின் தலை சிறந்த புத்தகங்கள் பற்றி அவருடன் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பேன்.

அவருடைய சிந்தனைகள் தான் என்னை வளர்த்தன. என்னை ஒரு நேருவியன் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

### இரும்பு இந்திரா!

அப்போதெல்லாம் பிரதமர் அலுவலகத்தில் இப்போது போல கசகசவென ஏராளமானோர் இருக்க மாட்டார்கள். மொத்தமே ஐந்து பேர்தான்.

அந்த ஐவரில் நானும் ஒருவன். காங்கிரஸின் அதி ந்த பல தருணங்களில் இந்திரா காந்தியுடன் நான் இருந்திருக்கிறேன்.

தன் முடிபுகளின் பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் துணிந்து செயற்படுவார் இந்திரா.

என் காதல் திருமணத்துக்கான சாட்சிக் கையெழுத்து போடும் அளவுக்கு என் மீது பிரத்தியேகப் பிரியத்துடன் இருந்தார் இந்திரா.

ஐ.எப்.எஸ் அதிகாரியாகப் பணியாற்றிய நான் அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற என் விருப்பத்தை இந்திராவிடம் தெரிவித்தேன். ஆனால், அடுத்த சில தினங்களிலேயே அவர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### எம்.ஜி.ஆர்.கொடுத்த அதிர்ச்சி!

அம்மாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் என்ற என் பிம்பம், ராஜீவ் காந்தியிடம் எனக்கான மரியாதையை ஈட்டியது. அவரது அமைச்சரவையில் என்னைச் சேர்த்துக் கொண்டனர்.

ஆனால், ஆரம்ப கால கட்டங்களில் அவரை ஆட்டுவித்தது, முதலாளித்துவச் சிந்தனை கொண்ட அருண் நேரு மற்றும் அருண் சிங் ஆகிய இருவர்தான். 1986 ஆம் ஆண்டு சார்க் உச்சி மாநாடு பெங்களூரில் நடந்தபோது எம்.ஜி.ஆர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழைத்து வந்திருந்தார். யுங்கள் நாங்கள் அவரை யாழ். நகரில் வைத்துத் தூக்கிலிடுகிறோம் என்று மிரட்டும் தொனியில் பேச ஆரம்பித்தார்.

பிரபாகரனிடம் பேச்சுவார்த்தை நடத்தும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. அவரிடம் என்ன பேசினாலும், ஈழம் ஒன்றே எங்கள் லட்சியம் என்பதை மட்டுமே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் பொறுமை இழந்த நான், நீங்கள் இதே நிலையில் நின்று கொண்டிந்தால்... இலங்கை- இந்தியா என இரண்டு நாடுகளின் இராணுவத்தையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்று மறைமுக எச்சரிக்கை விடுத்தேன்.

ஆனால், அப்போதும் மரணமே வந்தாலும் ஈழத்தைக் கைவிட மாட்டேன் என்றார் பிரபாகரன். அந்தச் சமயம் பஞ்சாப் மற்றும் அசாம் பிரச்சினைகளுக்கு ராஜீவ் தீர்வு கண்டிருந்தார். அதே வேகத்தில் இலங்கைப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டு நல்ல பெயரைத் தக்கவைக்க வேண்டும் என்ற பதற்றத்தில் இருந்தார் அவர்.

ஆனால், இலங்கைப் பிரச்சினையின் ஆணிவேர் பற்றி அவர் தெளிவாக அறிந்திருக்கவில்லை. இலங்கைப் பிரச்சினையை முடிபுக்குக் கொண்டு வர பல முயற்சிகள் எடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவிடம் சாட்சியமளிப்பதை யாரும் குற்றமாக கருத முடியாது

## த.தே.கூ.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

போர்க் காலத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் தொடர்பிலான உண்மையான சாட்சியங்களை ஐ.நா. விசாரணைக் குழுவினரிடம் அறியப்படுத்துவதில் எவ்வித குற்றமும் இல்லை. இவை அரசியலமைப்பை மீறும் செயற்பாடுகளுமில்லை என தெரிவிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான செயற்பாடுகளுக்கு சட்டத்தில் இடமிருக்கின்றது என்பது அரசாங்கத்திற்கு தெரியாவிடின் இப்போதாவது தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. விசாரணைக் குழுவிடம் இலங்கையில் உள்ளவர்கள் வழங்கவுள்ள சாட்சியங்களை கொண்டே அவை அரசியலமைப்பிற்கு முரணானதா? இல்லையா என தீர்மானிப்போம் என அரசாங்கம் தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் வினவிய போதே அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் யுத்த காலப் பகுதியில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பான விசாரணைகளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு மேற் கொண்டுள்ள நிலையில் அவர்களிடம் தமது சாட்சியங்களை வழங்க முன் வருவோர் எம்மிடம் வருமாறு ஆரம்பத்தில் தெரிவித்திருந்தோம். இவ்வாறு எமது சாட்சியங்களை உரிய இடத்திற்கு வழங்குவதில் குற்றம் ஏதும் இல்லை.

யுத்த கால கட்டத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் நடந்த நிகழ்வுகளை அறிக்கையிட உரிமை உள்ளது. இவற்றை குற்றமாக கருதி தடுக்க முயற்சிப்பது தெ்ளிவாகத் தெரிகின்றது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு சட்டத்தில் இடமும் உள்ளது என்பதை அரசாங்கமும் ஊடகப் பேச்சாளரும் இதுவரையில் தெரிந்து கொள்வில்லை எனின் இனிமேலாவது தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேபோல் இவ்வாறான சாட்சியமளிக்கும் செயற்பாடுகள் சர்வதேச சட்டத்தின் கீழ் இடமளிக்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாகவே நாமும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# போலியான விளம்பரம்; உயிர் பிரியக் காரணமாம்

## சத்திரசிகிச்சை சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

உடலின் எடையை குறைப்பதற்கு மருந்து மாத்திரைகள் கிடையாது என பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் துலிப் பெரேரா தெரிவித்துள்ளார்.

உடலின் எடையைக் குறைத்துக் கொள்வதற்காக இதுவரையில் எவ்விதமான மருந்துகளோ மாத்திரைகளோ கண்டு பிடிக்கப்படவில்லை.

உடல் எடையை குறைப்பது தொடர்பில் விளம்பரம் செய்யப்படும் போலி வழிகளைக் கண்டு ஏமாற்றமடைய வேண்டாம்.

உணவுக் கட்டுப்பாடு மற்றும் உடற் பயிற்சி, மருத்துவ ஆலோசனை என்பனவற்றின் மூலமே உடல் எடையைக் குறைத்துக் கொள்ள முடியும்.

உடல் எடையை குறைப்பதாகவும், உடல் அழகை மெருகூட்டுவதாகவும் கூறி செய்யப்படும் போலி விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு போலி விளம்பரங்களைச் செய்து மக்களை ஏமாற்றி வரும் மருத்துவர்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு எதிராக சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமென டாக்டர் பெரேரா கோரியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (6)

# போரின் பின்னரான சவால்களை நாம் சிறப்பாக வெற்றி கொண்டுள்ளோம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்தை முற்றாக இல்லாமல் செய்த ஒரே நாடு இலங்கையாகும் என இராணுவத் தளபதி தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள சர்வதேச மாநாடு தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக் கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

போரின் பின்னரான சவால்கள் மிகவும் சிறந்த முறையில் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பீட்டளவில் உலகின் ஏனைய நாடுகளை விடவும் பயங்கரவாதப் பிரச்சினைகளுக்கு இலங்கை காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்துள்ளது.

இதனை ஓர் உலக சாதனையாகவேகருத வேண்டும். போரின பின்னர் நாட்டின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல், பாதுகாப்பு ரீதியாக எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பில் சிறந்த அனுபவம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் இந்த அனுபவம் பிராந்திய வலயத்தின் ஏனைய நாடுகளுக்கும் நன்மையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. பயங்கரவாத பிரச்சினை களை எதிர்நோக்கி வரும் நாடுகளின் படையதிகாரிகள் மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் சிறந்த பலன்களை அடைய முடியும் என தயாரட்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (6)

# வாரம் ஒரு தகவல்

## மூளை உபயோகம்

"நான் ஒரு விடயம் சொல்லுவேன் அது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் தான் சொல்ல முடியும்"

"சொல்லுங்கள்"

"நமது மூளையை நாம் முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை என்கிறேன்"

"உண்மை தான்.... ஒரு சராசரி மனிதன் தனது மூளையில் ஒரு சிறிய பகுதியைத்தான் உபயோகப்படுத்துகிறான். இன்னும் உபயோகிக்க வேண்டிய பகுதி நிறைய இருக்கிறது"

"பார்த்தீர்களா... அப்படி இருக்கும்போது அது ஞாபகமில்லை இது ஞாபகமில்லை என்று வேறு சொல்லிக்கொண்டு இருக்கிறோம்"

"ஒரு மனிதன் தனது மூளையில் 90 ஆயிரம் கோடி வார்த்தைகளை பதிந்து வைத்துக்கொள்ள முடியும்"

"அப்படியா...."

"நாம் படிப்பது மனதில் பதிய வேண்டுமானால் நாம் அதை படித்த பின்னரும் மனதில் நிறுத்தி 10 நிமிடமாவது அசை போட வேண்டும்"

"காலை நேரத்தில் படிப்பது நல்லது அல்லவா?"

"மூளையின் செயலாற்றும் திறன் ஒவ்வொரு மணிக்கும் மாறுபடுகிறது. காலையில் சுறுசுறுப்பு, மதியத்தில் மந்தம், உடம்பு சோர்ந்து போகும்போது மூளையும் சோர்ந்து விடுகிறது. அவ்வப்போது ஓய்வு கொடுத்து அதை உபயோகப்படுத்த வேண்டும்"

"இது ஒரு மனநோய் மருத்துவமனை தானே?"

"ஆமாம்"

"உங்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி டாக்டர். உங்களிடம் இவ்வளவு தூரத்திற்கு கேள்வி கேட்டதனால் என்னை மனநோயாளி என்று நீங்கள் தப்பாக புரிந்து கொள்ளக்கூடாது"

"இவ்வளவு தூரத்திற்கு பதில் சொன்னதால் நீங்களும் என்னை தப்பாகப் புரிந்து கொள்ளக் கூடாது.. நான் டாக்டர் இல்லை!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ'புரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்

## பெற்றோரும் போராட்டத்திற்கு முஸ்தீபு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று முன்தினம் முதல் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சிங்களக் கைதிகளுடன் இணைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்தே மேற்படி உண்ணா விரதப் போராட்டத்தை அச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு தமிழ் கைதிகள் ஆரம்பித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இலங்கையின் வடபகுதியில் கடந்த 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் தற்போதும் சிறைகளில் எந்தவித விசாரணைகளும் அற்ற நிலையில் தமிழ் அரசியல் கைதிகள் ஆயிரக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறையில் இடம்பெற்ற திடீர் கலவரங்களில் பல தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்டுமுள்ளனர்.

இந்நிலையில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை விடுவிக்கக் கோரி கடந்த 5 ஆண்டுகளில் வடக்கில் பல போராட்டங்கள் பல தமிழ்க்கட்சிகளின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டுமுள்ளது. இருப்பினும் இவற்றுக்கு அரசாங்கம் செவி கொடுக்கவில்லை.

புனர்வாழ்வு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தமது இளமைக்காலத்தை தொலைத்துக் கொண்டு இருக்கும் தமிழர்களை விடுவிக்க சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இன்றுவரை அம் முயற்சிகளுக்கு எவ்விதமான பலனும் கிடைக்கவில்லை.

இவ்வாறான இக்கட்டான நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை தொடர்ந்து பழிவாங்கி வரும் அரசாங்கம் கைதிகளைக் கொண்டே கைதிகளை பழிதீர்த்தும் வருகின்றது.

இந்நிலையில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொய் வழக்குகளைத் தாக்கல் செய்து நீண்டகாலமாக சிறையில் தடுத்தும் வைத்திருக்கின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள தமிழ் அரசியல் கைதிகளும் அவ்வாறான நிலையிலுள்ளவர்களே என அவர்களின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

சிங்களக் கைதிகளுடன் தமிழ் கைதிகளை இணைத்து பழிவாங்கும் உணர்வுக்கு தீனி போட்டுள்ள சிறைச்சாலை நிர்வாகம் தமிழ் கைதிகள் மீது தாக்குதல் நடத்த தூண்டிவிடும் சந்தர்ப்பமுள்ளதாகவும் சிறையிலுள்ள தமிழ்கைதிகளின் பெற்றோர் கவலையும் அச்சமும் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக தடுத்து வைத்திருப்பதும் பின்னர் சடலமாக வீட்டுக்கு தமது பிள்ளைகள் திரும்பி வருவதும் வாடிக்கையாகவுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது பிள்ளைகளுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ள அதேவேளை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களிடமும் இவ்விடை குறித்து தெரியப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி தமது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பிள்ளைகளைப் போன்று தாமும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் எச்சரித்துள்ளனர். (6)

## அமைச்சர் பவித்ரா வைத்தியசாலையில்



மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சுகயீனம் காரணமாக பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6)

## கேலி செய்யும் போலி ரணில்

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது பெயரில் டுவிட்டர் கணக்கு ஒன்றை ஆரம்பித்த ஓரிரு தினங்களுக்குள் அவரது பெயரில் இனந்தெரியாத நபர்கள் போலியான டுவிட்டர் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட டுவிட்டர் முகவரி மூலமாக எதிர்க்கட்சி தலைவரை கேலி செய்யும் நடவடிக்கைகள இடம்பெற்றுள்ளன.



இன்று நான் உறுதியுடன் கண் முழித்துள்ளேன், நாட்டிற்கு பிரயோசனமாக ஏதாவது செய்யப் போகிறேன், எனது வீட்டை சுத்தம் செய்யப்போகிறேன் என ரணில் தெரிவிப்பது போன்ற உரையா டல்கள் இடம்பெற்றுள்ளன. (6)

# தேசத்திற்கு மகுடம் கண்காட்சி 2016 இல் வடக்கு மாகாணத்தில்

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியினை 2016ஆம் ஆண்டு வடமாகாணத்தில் நடத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, இதற்கான ஒப்புதலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடமாகாணத்தில் இருதய சத்திர சிகிச்சைக்கான துறையொன்றை ஸ்தாபிப்பதற்கு நிதி திரட்டும் பொருட்டு, யாழ். கைலாசப் பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து சைக்கிள் பவனியொன்று நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது.

இந்தப் பவனியை ஆரம்பித்து வைத்த பின்னர், ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டின் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி, 2015ஆம் ஆண்டு அம்பாந்தோட்டையில் நடைபெறவிருக்கின்றது. இந் நிலையில், 2016ஆம் ஆண்டு இக்கண்காட்சியை வட மாகாணத்தில் நடத்தவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிராத உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்திகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்கள் உள்ளிட்ட அனைத்தையும் பல கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்திருந்தார்.

வடமாகாணத்திற்கு விரைவில் ஜனாதிபதி விஜயம் செய்யவிருப்பதாகவும் அந்நேரத்தில் தேசத்தின் மகுடம் கண்காட்சி வடக்கில் நடத்தவிருப்பதை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாகவும் எனக்கு தெரிவித்தார்.

நான் இங்கே வரும் போது ஜனாதிபதி தொலைபேசியின் ஊடாக என்னுடன் தொடர்புகொண்டு சைக்கிள் பவனியில் கலந்துகொள்பவர்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்குமாறு கூறினார்.

அத்துடன், இந்தத் திட்டத்திற்கு அரசாங்கத்தால் முடிந்த உதவிகள் செய்வதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான உறவுப்பாலம் ஊடாகவே எமது சகலவிதமான பிரச்சினைகளையும் தீர்த்துக்கொள்ளலாம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (6)

## இன்று நல்லை ஆதீனத்தில் பீடாரோஹணப் பெருவிழா



ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தம்மையே அர்ப்பணித்து வாழ்ந்த நல்லை ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளை நாம் இன்று நினைவுகூர வேண்டும். இலங்கையில் ஓர் ஆதீனம் அமைத்து சைவம் வளர வேண்டும் என்று முற்று முழுதாக பாடுபட்ட அவர் 1966 இல் மதுரை ஆதீனத்தில் காஷாயம் பெற்று துறவியாகிய நாள் இன்றாகும்.

அந்த நல்லை ஆதீனத்தில் இன்று பீடாரோஹணப்பெருவிழா நடைபெறுகின்றது ஆதீனம் தொடங்கி இன்றுடன் 47 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அதையொட்டி இன்று காலையில் ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள், பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

தமது தொண்டையினாலேயே தொண்டு செய்துகதாப்பிரசங்கம் மூலம் சைவம் வளர்த்தவர் சுவாமிகள். அவருடைய தோற்றமே நாவலரைப் போன்றது. அவர் விட்டுச் சென்ற பணியை இப்போது ஆதீன முதல்வராக இருக்கும் இரண்டாவது குருமஹாசந்நிதானம் தொடர்ந்து செய்து வருகிறார்.

எங்கெல்லாம் சைவ விழாக்கள், கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் அருளாசியுரை வழங்கி வரும் சுவாமிகள் நல்லை ஆதீனத்தைச் செவ்வனே நடத்தி வருகிறார். இன்று ஆதீனத்தில் கொலுப்பூசையைத் தொடர்ந்து பட்டணப்பிரவேசம் நடைபெறும். நல்லூர் வீதி வழியாக சுவாமிகள் ஊர்வலமாக அழைத்து வரப்படுவார்.

பூரண நிறை கும்பம் விளக்கு வைத்து அவரை வரவேற்றுப்பாதபூசை இடம் பெறும். பின்னர் ஆரத்தி எடுத்து பூமாலை அணிவித்து ஆசி பெறப்படும். இன்று விழாவுக்கு வரும் அடியார்கள் அனைவருக்கும் மதியம் மகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானமும் நடைபெறும்.

ஆகவே இன்றைய நல்லை ஆதீனப் பீடாரோஹணப் பெரு விழாவில் அடியார் களைக் கல ந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். நமது நாட்டிலுள்ள ஒரே யொரு ஆதீனம் இது என்பதால் விழாவைச் சிறப்பிக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

"தெய்வத் தமிழ்ச்சுடர்"
இராசையா ஸ்ரீதரன்




இலங்கை வங்கி 75 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவானது இலங்கை வங்கியின் கோப்பாய்க் கிளையில் அண்மையில் கொண்டாடப்பட்டதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## வெளிநாடு

முகவரி தெரியாத நகரிலே
புரியாத பாஷையிலே
அறிமுகம் இல்லாத
பொய்முகங்கள் உயிரையே ஒருமுறை
உறைய வைக்கும் பனித்துளிகள்
வசதியாகத்தான் இருக்கிறது
நீங்கள் தேடித்தந்த வாழ்க்கை
பொறுப்பாய் என்னை
அனுப்பிவிட்டு நிம்மதியாக நீங்கள்,
இருக்கிறீர்கள்
எமது கடமை முடிந்து விட்டதென்ன
சொந்தமில்லை பந்தமில்லை
கரம் பற்றியவனோ
வேலை வேலை என
ஓடிய படி....
தேடித்தந்த வாழ்க்கையில்
நிம்மதியில்லை- ஆனால்
எனக்குள் மௌன மொழி
பேசி மௌனிக்கின்றேன்
மனநோயாளி போல
நான் படும் வேதனை
யார் அறிவார்...?

**பா.அக்ஷி**
**உடுப்பிட்டி**

## கைபேசிக் கதைகள்

செல்லடிச் சத்தம் கேட்டுச்
சிந்தை கலங்கிப்
பங்கருக்குள் ஓடிச்சென்று
பதுங்கிய காலம் போச்சு
செல்லடி கேட்ட காதில்
செல்போனை மாட்டிக்கொண்டு
பாடலைக் கேட்டபடி
பறக்கின்றார் பல்சரிலே
தம்பி தனியார்
ரியூட்டறிக்குப் போகையிலே
தப்பாது செல்போனைக்
காதில் மாட்டி
தனுசின் வை திஸ்
பாடலைக் கேட்டபடி
பவ்வியமாய்ப் பறக்கின்றார்
பாரீர் நாட்டை
அருமையாய்ப் பிறந்த
அக்கா அதுவாவும்
அருகிலிருக்கும் ஆலயம் போகையிலே
தப்பாது செல்போனைக் கொண்டு சென்று
கச்சிதமாய்க் காதல் மொழி பேசுகிறார்

**வ.செல்வராஜா**

## இறந்தகாலம்

வாழ்வின் அபிலாசைகள் எதையும்
பூர்த்தி செய்யாமலேயே
விரைந்து கொண்டிருக்கின்றன
இந்த வாழ்நாட்கள்
எட்டமுடியாத இலக்குகள் அல்ல
சாதாரண வாழ்வின் எல்லைகளையே
தொட்டுவிட முடியாமல்
தவித்துப்போகிறது காலம்
நட்பெல்லாம் வஞ்சனைக்குள்
நலிந்து போய்க்கிடக்கிறது
முயற்சியில் முன்னேறும் போது
கவிழ்த்துப்போட ஒருவன்
நண்பனாய் வருவான்
சமத்துவம் சகோதரத்துவம் யாவும்
வெறித்தனமாய் சுயநலத்தில்
அமிழ்ந்து போய்க் கிடப்பதால்
நிராசைகளாய்
இடறப்பட்டது இறந்தகாலம்

**ஆ.பூவானந்தன்**
**வயாவிளான்**

## இமயம் தொட...

எரியும் பொருள் எதுவோ
அது மாறிவிடும்- ஆனால்
தீ மாறிடாது
தன் நிலை மாற்றிடாது
தீயாய் இரு
கொடுமை கண்டு
கொதித்தெழு
உரிமை என்பதே- உன்
முதல்மொழி
மொழி அதை முன்மொழி


மாவை.நா.கஜேந்திரன்

## மாற்றம்

நீண்ட நாட்களின் பின்
ஊர் திரும்பிய போது
மாமரங்களில்
முன்பை விட
அதிகமாய் குருவிச்சைகள்
படர்ந்திருந்தன...
கொக்கைத் தடிகளின்
பாவனை அற்றுப் போனதாலோ...

**ஆ.முல்லைதிவ்யன்**

# மௌனத்தின் தேடல் – 217



## நீதி நெறி தர்மம் எங்கே?

ஓநாயிடம் சரணடைந்தது ஆட்டுக்குட்டி
ஆட்டுக்குட்டிக்கு ஒரு நம்பிக்கை
காலடியில் வீழ்ந்தால்
கருணை கிடைக்குமென்று
இதயமில்லா ஓநாய் விழுங்கி விட்டது
தாய் ஆடு சிங்கராஜாவிடம் முறையிட்டது
ஆட்டுக்குட்டிக்கு என்ன நடந்ததென்று ஆராய
நண்பர்கள் நால்வரை நியமித்தது சிங்கராஜா
தாய் ஆடு கண்ணீர் விட்டு கதறி என்குட்டி
சரணடைந்தது என் கண்முன்னால் என்றது
விசாரணை தொடர்ந்தது முடிவுமில்லை
ஆட்டுக்குட்டியும் இல்லை

ம.திருவரசுராசா
வவுனியா

## எதைக்கேட்டு நின்றாய்?

நீதி கேட்டு வந்தாயா– சிறு
நிலம் கேட்டு நின்றாயா?
உரிமை கேட்டு வந்தாயா?
இரைதேடி திரிந்தாயா– உன்
இனம் தேட வந்தாயா?
மனுக்கொடுக்க எண்ணினாயா?
கண்ணீர் மட்டுமே உன் பதிலா?

பி.வேதிகா
கனகராயன் குளம் ம.வி.

## நே(வ)சம்

அரவணைப்பை நம்பி
அனைத்தையும் இழந்த இனம்
வேசம் கலைந்தபோது திகைத்துப்
போய் திண்டாடுகிறது உலகம்

சி.தாசன்

## கண்ணீரும் செந்நீரும்

நாங்கள் ஆடுகளாம்!
அவர்கள் ஓநாய்களாம்!!
நாங்கள் நனைகின்றோமாம்!
அவர்கள் என்னவோ
அழுகின்றனராம்!
ஆனால்...
அவர்களின் கண்ணில் வழிவது
அவர்களின் கண்ணீரல்ல– அது
எங்களின் கண்ணீர் கூடவே
எங்களின் செந்நீரும்தான்...

அப்துல்லா
கிளிநொச்சி ம.வி.

## சாதனை நட்பு

உன்னினமே
அழிந்து போனதுவே
சின்னவளே நீ மட்டுமே
மிஞ்சியுள்ளாய்
என்னிடம் வந்த
உனைக் கொல்லமாட்டேன்
துன்பத்தை மறந்துவிடு
நட்பாய் இருப்போம்
இன்று உனைக் கொன்றால்
சிறுபசியே போகும்
நன்றியுடன் பார்க்கையிலே
விட்டுவிட்டேன்
என்றுமே இனி நீ
எனக்கே சொந்தம்

பொ.புனிதன்
வரியப்புலம்

## தன்னலம்

ஆடழ அழும்
ஓநாயின் கண்ணீர்
நிலம் தொடுமுன் அதன்
எண்ணம்
நிறைவேறிடலாம்
அதுபோல்...
நெஞ்சத்தில்
ஒன்றெண்ணி
வஞ்சத்தில் பழகும்
மாந்தரின்
எண்ணங்கள்
பலநேரம்
புரிவதேயில்லை
சந்தர்ப்பம் உண்டானால்
வேசம் கலையும்

பு.பிரசாந்
அல்லைப்பிட்டி

## போலிக்கண்ணீர்

சத்தியமாய் நானுனக்கு
எத்துன்பமும் செய்யமாட்டேன்
குட்டி ஆட்டின் தலையில்
தொட்டு உறுதி கூறிப்
போலிக்கண்ணீர் வடிக்கிறது
கள்ள மனங்கொண்ட
குள்ளநரி இவ்வாறே
அதிகார ஆட்பலமுள்ள
சதிகாரமும் எம்மை
ஏமாற்றப்பார்க்கிறார்கள்

துரை, தென்மட்டுவில்

## ஐ.நா.

ஓநாயின் பிடியில் இருப்பது
ஆடல்ல! அது எங்களின் நாடு!
ஆட்டைத் தின்னமுடியாது
அழுகிறது ஓநாய்
அழுமட்டும் அழட்டும்
ஐ.நா. வழியில்...
ஆண்டவன் உள்ளவரை
ஓநாய் அழுது கொண்டே!!!


அ.அவிஷ்
கிளிநொச்சி

## புரிந்துணர்வற்ற ஆட்சி

ஐந்தறிவுள்ள ஜீவன்கள்
கொண்டுள்ள புரிந்துணர்வில்
துளிகூட எம் ஆட்சியாளரிடம்
இல்லை...! இருந்திருந்தால்...?
ஈழத்தமிழர் நாம்
இன்றுபோல் அல்லறப்பட்டு
பரிதவிக்கும் நிலை
ஒருபோதும் வந்திருக்காது
எல்லாம் ஒரு பழிவாங்கல்தான்!!!

த.மோகனரூபன்
யா.விக்ரோறியா கல்லூரி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –218



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 20.08.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் மோடி சிறந்த நிர்வாகி

## அமெரிக்கா புகழாரம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, சிறந்த நிர்வாகி. அமெரிக்காவுடனான உறவை புதிய விதத்தில் புதுப்பித்துக் கொள்ள விரும்புபவர என, அமெரிக்க நாடாளுமன்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் தலைவர்கள் மற்றும் நாடுகளைப் பற்றி, அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதற்காக, பாராளுமன்ற ஆராய்ச்சி சேவை - சி.ஆர். ஸ். என்ற அமைப்பு, அமெரிக்காவில் உள்ளது.

அதில், தெற்காசிய விவகாரங்களில் வல்லுநரான, கே.ஆலன் குரோன்ஸ்டாட் தயாரித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, இந்தியாவின் சமீபத்திய அரசியல் வரலாற்றில், பிரதமர் மோடி புதுமையானவர். 30 ஆண்டுகளுக்குப் பிறகு, தனிப்பெரும்பான்மையுடன், மத்தியில் ஆட்சி அமைத்துள்ளார். அவர் சிறந்த நிர்வாகி மட்டுமல்ல சிறந்த வர்த்தக விரும்பியும் கூட.இந்தியாவின், 5 சதவீத மக்கள் உள்ள குஜராத் மாநிலத்தில், 15 ஆண்டுகளாக முதல்வர் பதவி வகித்த இவர், குஜராத் மாநிலத்தை, பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற வைத்து, அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், அம் மாநிலத்தின் பங்கு, 20 சதவீதமாக இருக்குமாறு மாற்றிக் காட்டியுள்ளார்.

### உறுதிமொழி

அவர், இந்தியாவின் வழக்கமான தலைவர்கள் போல இல்லாமல், வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டவர். அவரின் இந்துத்துவா கொள்கையால் ஈர்க்கப்பட்டு, மக்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. மாறாக, "நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வேன்" என விடுத்த அறைகூவலால் கவரப்பட்ட மக்கள், பெருவாரியாக வாக்களித்து, அவர் சார்ந்த கட்சியை ஆட்சியில் அமரச் செய்துள்ளனர். எனினும், அவர் மக்களிடம் அளித்துள்ள உறுதிமொழிகளும், மக்கள் அவரிடம் எதிர்பார்க்கும் அம்சங்களும், கண்டிப்பாக நிறைவேற்றப்பட முடியாதது.

அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். வழக்கமான இந்திய தலைவர்கள் போல, மோடி அணிசேரா கொள்கை கொண்டவர் இல்லை. அமெரிக்காவுடன் அனைத்து துறைகளிலும் நெருங்கிய நட்புறவை விரும்புகிறவர்.அவருடன் நாம் நட்புறவு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா., பொதுச்சபையின் வருடாந்திர கூட்டத்தில் பங்கேற்க, பிரதமர் மோடி, அடுத்த மாதம் நியூயோர்க் செல்லும் போது, அமெரிக்க் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்ற வேண்டும் என, அமெரிக்க எம்.பி.,க்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

### பிரமாண்ட வரவேற்பு


அமெரிக்கா செல்லும் பிரதமர் மோடியை சிறப்பாக வரவேற்க, 300க்கும் மேற்பட்ட இந்தியா - அமெரிக்கா அமைப்புகள் முன்வந்துள்ளன. நியூயோர்க் நகரின், வரலாற்றுச் சிறப்புமிக்க, மேடிசன் ஸ்கோர் கார்டனில், மோடியை வரவேற்று, பிரமாண்ட கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில, அமெரிக்க எம்.பி.க்கள், அமெரிக்க இந்தியர்கள், தொழிலதிபர்கள் பங்கேற்பர் என, வரவேற்பு குழு தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்சசிகளில், 20 ஆயிரம் பேர் வரை பங்கேற்பர் எனவும், இது தான் சமீப காலத்தில், அமெரிக்காவில், வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு அளிக்கப்படும் பிரமாண்ட வரவேற்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (6)




# ஐ.என்.எஸ்.கோல்கட்டா போர்க்கப்பல்



(சென்னை)

இந்தியாவின் பாதுகாப்பு விடயத்தில் நாம் விழிப்புடன் இருக்கிறோம்என்பதை போக்கப்பல உற்பத்தி வெளிப்படுத்தியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்

இந்தியாவில் உருவாக்கப்பட்ட நாட்டின் மிகப் பெரிய போர்க்கப்பலான ஐ.என்.எஸ்., கோல்கட்டா நேற்று கடற்படையில் சேர்க்கப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி இதன் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்து நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

மும்பை கடற்படை தளத்தில் நடந்த விழாவில் பிரதமர் மோடி மகாராஷ்டிரா முதல்வர் பிரிதிவிராஜ் சவான், கடற்படை தளபதி தோவன் மற்றும் வீரர்கள் பங்கேற்றனர்.

இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் உள்நாட்டில் போர்த்தளபாடங்கள் தயாரிக்கும் பணிகள் தொடங்கி பல ஆண்டுகள் பின்னர் இந்த போர்க்கப்பல் இறுதி வடிவம் பெற்றது.

ஐ.என்.எஸ்., சென்னை, ஐ.என்.எஸ். கொச்சி என்ற போர்க்கப்பலும் உருவாகும் பணியில் இருந்து வருகிறது.

இந்நிகழ்வில் பிரதமர் மோடி தெரிவிக்கையில், ஐ.என்.எஸ். கோல்கட்டா மிகப் பெரிய போர்க்கப்பல் ஆகும். நமது இராணுவம் நமது நாட்டின் சுதந்திரத்தை காக்கும், ஐ.என்.எஸ்.கோல்கட்டா தயாரிப்பு நமது நாட்டின் தொழில்நுப்ப சக்திக்கு ஒரு முன்மாதிரியாகும். இந்த போர்க்கப்பல் தயாரிப்பில் ஈடுபட்ட வல்லுநர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன். நாம் போரிடுவதற்காக உருவாக்கினோமா? என்பதை விட நாம் விழிப்பாக இருக்கிறோம் என்ப தற்கு இது ஒரு மாதிரி. கடலோர பாதுகாப்பு பேணி காப்பதன் மூலம் வர்த்தகம் முன்னேற்றம் பெறுகிறது.

எனது தலைமையிலான அரசு பாதுகாப்பு துறை செலவீனத்திற்கு முக்கியத்தும் அளிக்கிறது. பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நவீனம் ஆகும் போது நமது படையினர் அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கின்றனர். பாதுகாப்பு உபகரணங்களை இறக்குமதி செய்யும் நிலைக்கு முடிவு கட்டி, அவற்றை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (6)

# குற்ற வழக்கில் தொடர்பிருந்தால் தேர்தலில் போட்டியிட முடியாது

(சென்னை)

குற்ற வழக்கில் தொடர்புடையதாக குற்றப்பத்திரிகையில் பெயர் சேர்க்கப்படும் நபர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்க ஆளும் பா.ஜ. அரசு முடிவு செய்துள்ளது. நீதிபதிகள் நியமனம் தொடர்பான மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியதை அடுத்து தேர்தல் நடைமுறைகளிலும் மாற்றம் கொணடு வரும் முயற்சியில் மோடி அரசு இறங்கியுள்ளது.

நாட்டின் முக்கியதுறைகளில்களை எடுக்கும் பணியை தொடங்கியுள்ள மத்திய அரசு, முதற் கட்டமாக நீதிபதிகள் நியமனத்தில் நடைபெறும் குளறுபடிகளை நீக்கு வதற்காக நீதிபதிகள் நியமன முறையில் மாற்றம் கொண்டு வருவதற்கான சட்டவரைவு மசோதாவை கடந்த வாரம் நாடாளுமன்றில் தாக்கல் செயதது.

இரு அவைகளிலும் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதால், முதல் நடவடிக்கையில் பெற்ற வெற்றியின் உற்சாகத்தால் அடுத்த கட்டமாக தேர்தல் நடைமுறையில் மாற்றம் கொண்டு வர தீர்மானித்துள்ளது. சட்ட கமிஷனின் ஒப்புதலுக்காக காத்திருக்கும் மத்திய அரசு, ஒப்புதல் கிடைத்த உடன் நடவடிக்கையில் இறங்க உள்ளது. (6)

# பூலான் தேவியின் கொடூர கொலையுடன் தொடர்புடையவருக்கு ஆயுள் தண்டனை

(சென்னை)

உத்தர பிரதேச மாநிலத்தில் கொள்ளைக்காரியாக இருந்து பின்னர் அரசியலில் ஈடுபட்டு வந்த பூலான்தேவி கடந்த 2001ஆம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

டில்லி நீதிமன்றத்தில் 13 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இவ்வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் குற்றம் சாட்டப்பட்ட 12 பேரில் ஷேர் சிங் ராணா மீதான குற்றம் உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து அவரை குற்றவாளி என்று தீர்ப்பளித்த நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்ட ஏனைய 10 பேரையும் விடுதலை செய்தது.

பின்னர் ராணாவுக்கு வழங்கப்படும் தண்டனை குறித்து டில்லி கூடுதல் செசன்ஸ் நீதிபதி பாரத் பரஷார் முன்னிலையில் விவாதம் நடந்தது.

அப்போது, சமூகத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் திட்டமிட்டு கொடூரமாக கொலை செய்துள்ள ராணாவுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்று அரசு வழக்கறிஞர் வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்க மறுத்த ராணாவின் வழக்கறிஞர், கொலையின் பின்னணியில் உள்ள நோக்கத்தை நிரூபிக்க பொலிஸார் தவறிவிட்டனர் என்று கூறியதுடன், ராணா வின் வயது கருதி அவருக்கு குறைந்தபட்ச தண்டனையே வழங்க வேண்டும் என்றும் கேட்டுக கொண்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி பாரத் பரஷார், தண்டனை விபரங்களை ஒத்தி வைத்திருந்தார். அதன்படி நேற்று தண்டனை விபரத்தை வாசித்தார். அப்போது, ராணாவுக்கு ஆயுள் தண்டனை விதிப்பதாக அறிவித்த நீதிபதி, ரூபா ஒரு இலட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். (6)

# பாலியல் வல்லுறவில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு அபராதம்-பஞ்சாயத்து

இந்தியாவில் சத்தீஸ்கர் மாநிலத்தில் "பாலியல் வல்லுறவு" புரிந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஆண ஒருவரால் பாதிக்கப்பட்ட பெணணுக்கு அபராதம் விதித்து உள்ளூர் பஞ்சாயத்து தீர்ப்பளித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தின் ராஜானந்தகவுன் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து, 24 வயதான காதுகேளாத-வாய் பேசாத பெண் ஒருவரை 26 வயதான ஆண் ஒருவர் பாலியல் உறவில் ஈடுபடுத்தியுள்ளார்.

சம்பவம் நடந்து, பெண் கர்ப்பமாகி 5 மாதங்களின் பின்னரே அந்தப் பெண்ணின் குடும்பத்தாருக்கு இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதையடுத்து இந்த விவகாரத்தை பெண்ணின் குடும்பத்தினர் உள்ளூர் பஞ்சாயத்திடம் எடுத்து சென்றுள்ளனர்.

பாலியல் உறவு சம்பவம் நடப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னரேயே வேறு ஒரு பெண்ணை தான் திருமணம் செய்து கொண்டதாக தெரிவித்துள்ள குறித்த ஆண், இந்தக் கர்ப்பிணி பெண்ணை திருமணம் செய்ய மறுத்துவிட்டார்.

சம்பவத்தை விசாரித்து தீர்ப்பளித்த பஞ்சாயத்துத் தலைவர்கள், திருமணத்திற்கு முன்பு அந்தப் பெண் உறவு வைத்துக் கொண்டமை தவறு என்று தெரிவித்து அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு 7ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளனர்.

அத்துடன், அந்தப் பெண்ணின் குடும்பத்திற்கு மாதாந்தம் 300 ரூபாவும் 35 கிலோ அரிசியும் வழங்க வேண்டும் என்று அந்த ஆணுக்கும் பஞ்சாயத்துத் தலைவர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

உள்ளூர் பஞ்சாயத்தின் இந்தத் தீர்ப்பினை எதிர்த்து பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் பொலிஸாரை அணுகியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்துள்ள மாவட்ட பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் பிபிசியிடம் பேசிய மாவட்ட பொலிஸ அதிகாரி அஜய் சங்கர் திருப்பதி, 'இந்த விவகாரத்தில் அந்த பஞ்சாயத்துத் தலைவர்களின் நடவடிக்கை தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகிறோம். அவர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்' என்று தெரிவித்தார்.(6)

# மூளையழற்சி நோய்க்கு 221 பேர் பலியாகினர்

(சென்னை)

மூளையழற்சி மற்றும் 'ஜப்பான் மூளையழற்சி' எனப்படும் புதிய வகை நோய்க்கு மேற்கு வங்காளம் மாநிலத்தில் பலியானோர் எண்ணிக்கை 221 ஆக உயர்ந்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் மூளையழற்சி என்ற ஜப்பான் மூளைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. இந்த காய்ச்சலுக்கு நேற்று முன்தினம் ஒருவர் பலியானார்.

பக்றீரியா கிருமிகளின் தொற்றால் ஏற்படும் ஜப்பான் மூளையழற்சி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப கட்டத்தில் தலைவலி, காய்ச்சல், சோர்வு, களைப்பு போன்ற அறிகுறிகள் தோன்றும். இந்த நோய் பரவுவதற்கு சுகாதார மற்ற பன்றி பண்ணைகளும் ஒரு காரணம் என்று கருதப்படுகிறது.


மூளையழற்சி நோய் தீவிர நிலையை எட்டும்போது தசை வலிப்பு, இழுப்பு, உடல் நடுக்கம், நினைவாற்றல் இழப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படும். மேற்கு வங்காளத்தின் வடக்கு மாவட்டங்களை சேர்ந்த பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவ்வப்போது ஓரிருவர் பலியாகியும் வருகின்றனர்.

இந்நிலையில், மேற்கு வங்காள மாநில தலைநகர் கொல்கத்தாவில் உள்ள மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் பசிர்ஹட் பகுதியை சேர்ந்த ஒருவர் மூளைக் காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததையடுத்து, கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து மேற்கு வங்காள மாநிலத்தில் மட்டும் மூளையழற்சி நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 221 ஆக உயர்ந்துள்ளது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை களமிறக்குவோம்-பொதுபலசேனா



(கொழும்பு)

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் பொதுபல சேனா அமைப்பின் சார்பாக ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை தாம் களமிறக்க உள்ளதாக அவ்வமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த மதத்தை அடிப்படையாக கொண்ட இந்த யோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் அறிவிக்க உள்ளதாகவும் அவ்வாறு இந்த யோசனைக்கு அவர்கள் மறுப்பு தெரிவிப்பார்களாயின் தாம் தனியாக வேட்பாளரை களமிறக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# நிலாவெளியிலுள்ள வீடுகளுக்குள் மர்ம நபர்கள் புகுந்ததால் அச்சம்

நிலாவெளி, 8ஆம் கட்டை முகைதீன் பள்ளிவாசல் வீதியில் உள்ள வீடுகள் சிலவற்றுக்குள் நேற்று சனிக்கிழமை அதிகாலை மர்ம நபர்கள் நுழைந்ததையடுத்து பிரதேச மக்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் உள்ள 5 வீடுகளுக்குள் இவ்வாறு இனந் தெரியாத நபர்கள் நுழைந்துள்ளனர்.

தாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த போது, வீட்டின் யன்னல்களை கழற்றிவிட்டு, மர்ம நபர்கள் வீடுகளுக்குள் புகுந்ததாகவும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர்கள் எழுந்தபோது, மர்ம நபர்கள் தப்பியோடிவிட்டதாகவும் வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐந்து வீடுகளிலும் ஒரே நேரத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றதுடன் தப்பியோடியவர்களை கண்ட போதும் இருட்டாக இருந்தமையினால் ஓடியவர்களை தம்மால் அடையாளம் காணமுடியவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை, நிலாவெளி கற்சுணைக்கல் பிரதேசத்தில் உள்ள ஒன்பது வீடுகளுக்குள் நள்ளிரவு வேளையில் யன்னல்களை கழற்றிவிட்டு சில மர்ம நபர்கள் உள்ளே புகுந்துள்ளனர்.

தற்போது இவ்விரு சம்பவங்களால் பிரதேச மக்கள் மத்தியில் அச்சம் கலந்த பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாக குச்சவெளி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும், இப்பிரதேச குடியிருப்பாளருமான எம்.ஏ.சபீக் தெரிவித்தார்.

கற்சுணைக்கல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் நிலாவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டதை அடுத்து அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், நேற்று அதிகாலை அதே போன்று மற்றுமொரு சம்பவம் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளமையானது பொது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்றுள்ள சம்பவங்கள் தொடர்பில் நேற்று சனிக்கிழமை 8ஆம் கட்டை முகைதீன் பள்ளிவாசல் பரிபாலன சபைத்தலைவர் யே.எம்.ஆசீக் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் பள்ளி வாசல் பரிபாலன சபையினரும் கிராமத் தலைவர்களும் பங்குபற்றியதுடன் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் நிலாவெளி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் சிவில் பாதுகாப்புக் குழுவினருடனும் கலந்துரையாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் தலைவர் கூறினார். (6)

# விடுதலையான தமிழக மீனவர்கள் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

இலங்கையில் விடுதலை செய்யப்பட்ட 94 இந்திய மீனவர்களும் அந் நாட்டு அதிகாரிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை மற்றும் தலைமன்னார் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை நேற்று மாலை இந்திய கடலோர காவற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் லால் டி சில்வா தெரிவித்தார்.

இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அனைத்து இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்..

இந்த பணிப்புரைக்கு அமைய கடந்த இரண்டு நாட்களாக, இந்திய மீனவர்கள் கட்டம் கட்டமாக நீதிமன்றங்களினால் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, இந்தியாவில் விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 16 பேரும் அடுத்த வாரம் நாட்டிற்கு வரவழைக்கப்படவுள்ளனர்.

இதனை தவிர இந்தியாவில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 23 பேரையும் விடுதலை செய்வதற்கான பேச்சுவார்த்தையில் கடற்றொழில் திணைக்களம் ஈடுபட்டுள்ள தாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இராஜதந்திர சேவையில் நிலவி வரும் முறைகேடுகள் அம்பலப்படுத்தப்படும்

## ஜே.வி.பி எச்சரிக்கை

நாட்டின் இராஜதந்திர சேவையில் நிலவி வரும் முறைகேடுகள் தொடர்பில் அம்பலப்படுத்தப்படவுள்ளதாக ஜே.வி.பி கட்சி அறிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட முக்கிய இராஜதந்திர பதவிகளை வகித்து வரும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் அரசியல் சார் சிபாரிசுகளின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் என அண் மையில் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கை வெளிவிவகாரச் சேவையின் பெரும்பான்மையான நியமனங்கள் தகுதிகளைக் கருத்திற்கொள்ளாது வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியிருந்தார்.



இந்த நிலையில், இராஜதந்திர சேவையில் கடமையாற்றி வருவோரின் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தொடர்பில் விரைவில் அம்பலப்படுத்தவுள்ளதாக அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்

ஆளும் கட்சியின் அரசியல்வாதிகளது உறவினர்கள் நண்பர்களே அதிகளவில் முக்கிய இராஜதந்திர பதவிகளை வகித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், இவர்களுக்கு போதியளவு கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பிலான தகவல்களை விரைவில் அம்பலப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விவகாரத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர முடியுமா என ஆராய்ந்து வருகிறேன் எனத் தெரிவித்துள்ள அனுரகுமார திஸாநாயக்கா, இவர்கள் வெளிவிவகார சேவையின் பரீட்சைக்கு தோற்றாமலே நியமனம் பெற்றுள்ளனர். ஜனாதிபதியின் நியமனங்கள் மாத்திரமே தகுதியை அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார். (6)

# வெளிநாட்டு பிரஜைகளுக்கு காணி விற்பனை செய்ய தடை

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு காணி விற்பனை செய்வதனை தடை செய்யும் சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வெளிநாட்டு பிரஜைகள் இலங்கையில் காணிகளை கொள்வனவு செய்வதனை தடை செய்யும் வகையில் இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இந்த சட்டம் குறித்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அல்லது தனியார் காணிகளை விற்பனை செய்வதற்கு தடை விதிக்கும் வகையிலேயே இந்த சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சட்ட நிபுணர்களினால் உருவாக்கப்பட்ட இந்த சட்டத்திற்கு சட்ட மா அதிபர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான காணி தேவைப்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இராஜதந்திர அலுவலகங்களுக்கு இந்த தடை பொருந்தாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்ட மூலம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## பிரிவுத்துயர் பகிர்வு



### சபாரத்தினம் துரைசாமி

பருத்தித்துறை புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் துரைசாமி கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சிவசாமி நாகராஜா



கொட்டடியைப் பிறப்பிடமாகவும் மாட்டின் வீதியை வசிப்பி டமாகவும் கொண்ட சிவசாமி நாகராஜா(ஓய்வு பெற்ற சாரதி-இ.போ.ச) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வில்லூ ண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி கனகரட்ணம் தவமணி

வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகவும் பஹ்ரைன், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் தவமணி கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு Borella General Cemetery,Gothamipura,Colombo,Sri Lanka என்னும் முகவ்ரியில் தகனம் செய்யப்படும்.

### சண்முகலிங்கம் ஸ்ரீகாந்தன்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் ஸ்ரீகாந்தன் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குInstitut medico-Legal Quai de la Rapee 75012 Paris, France,Metro:quai de la rapee( Ligne 5) என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பத்மநாதன் மங்களேஸ்வரி

திருநெல்வேலி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி கேணியடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் மங்களேஸ்வரி கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல்நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைஜீரியாவில் தொடரும் பதற்றம்

# 50 பேரை போகோ ஹராம் கடத்தியிருப்பதாக சந்தேகம்



நைஜீரியாவில் சத் ஏரியின் கரையில் அமைந்திருக்கும் தோரன் பகா என்ற கிராமத்தின் மீது போகோ ஹறாம் தீவிரவாதிகள் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் தாக்குதலுக்குப் பின் 50 பேரைக் காணவில்லையென அந்த கிராமத்தினர் தெரிவித்துள்ளனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அந்தச் சம்பவத்தை பார்த்த ஒருவர் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

அந்த பகுதியில் தொலைத்தொடர்பு வசதிகள் மிக மோசமாக இருப்பதால், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட செய்தியே பல நாட்கள் கழித்துத்தான் வெளியுலகிற்கு தெரியவந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே நைஜீரியாவில் போகோ ஹறாம் இஸ்லாமியத் தீவிரவாதிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். குறிப்பாக அந்நாட்டின் வடகிழக்குப் பகுதி இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்போது நடந்திருக்கும் இந்தத் தாக்குதலில் எத்தனை பேர் பிடித்துச் செல்லப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

**வீடுகளுக்குத் தீ வைப்பு**

சிலர், தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிட்டாலும் அவர்களால் தாக்குதலைத் தடுக்க முடியவில்லை என அந்த கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சில வீடுகளுக்குத் தீ வைத்த தீவிரவாதிகள், சுமார் 50 பேரை சுற்றிவளைத்தனர் என்றும் அவர் தெரிவித்தார். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் என்றாலும் சில குழந்தைகளும் இருந்தனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சில இளைஞர்களும் பிடித்துச் செல்லப்பட்டதாக வேறு சிலர் தெரிவிக்கின்றனர். போகோ ஹறாமில் சேர்க்கப்படுவதற்காக அவர்கள் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

மாநிலத் தலைநகரான மைதுகுரிக்கு வந்து சேர்ந்த சிலர் இந்தச் செய்திகளைச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் குறித்து நைஜீரிய இராணுவம் கருத்து எதையும் வெளியிடவில்லை. (6)

# அழிவின் விளிம்பில் சீனப் பெருஞ்சுவர்

## தொல்பொருள் ஆர்வலர்கள் கவலை



உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ள சீனப் பெருஞ்சுவர் கி.பி. மூன்றாம் ஆண்டில் இருந்து 17 ஆம் ஆண்டு வரை சுமார் ஆயிரத்து 400 ஆண்டு காலம் அந்நாட்டை எதிரிகளின் படையெடுப்பில் இருந்து காக்கும் தடுப்பு அரணாக கட்டப்பட்டது.

20 ஆயிரம் கிலோ மீற்றர் நீளத்தை தாண்டி நீண்டு செல்லும் இந்த சுவரை உலகின் தொன்மை வாய்ந்த கலாசார சின்னமாக 'யுனெஸ்கோ' 1987 ஆம் ஆண்டில் அறிவித்தது. இத்தனை சிறப்புகள் வாய்ந்த சீனப் பெருஞ்சுவரை ஆண்டுதோறும் சுமார் 40 இலட்சம வெளிநாட்டு பயணிகள் கண்டு களிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மிங் வம்சத்தினரின் ஆட்சிக்காலத்தில் (1368-1644) கட்டப்பட்ட இந்த சுவற்றின் ஒரு பகுதியில் சுமார் 90 சதவீதம் சிதிலமடைந்து வருவதாக தெரியவந்துள்ளது.

புயல், மழை, வெள்ளம், பூகம்பம் ஆகிய இயற்கை சீற்றங்களை தாக்குப் பிடித்து கம்பீரமாக நின்ற இப்பகுதியில் உள்ள சுவற்றின் கற்களை பலர் பெயர்த்தெடுத்து சென்று விட்டதாகவும், சுவற்றை யொட்டியுள்ள பகுதிகளில் பலர் மரம், செடி, கொடிகளை வளர்த்து வருவதாகவும் அங்குள்ள சுற்றுச் சூழல் மற்றும் தொல்பொருள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் அமைப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சீனப் பெருஞ்சுவரை பார்க்க வரும் ஒவ்வொரு வெளிநாட்டு சுற்றுலா பயணியிடமும் 17 அமெரிக்க டொலர்களை கட்டணமாக வாங்கும் அரசாங்கம் இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த கலைப் பொக்கிஷத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும் எனவும் அந்த இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (6)

# அமெரிக்க நகரின் மேயர் தேர்தலில் நாய் வெற்றி

அமெரிக்க மின்னேஸோரா மாநிலத்திலுள்ள சிறிய நகரொன்றின் மேயராக 7 வயதான டியூக் என்ற நாய் இந்த வாரம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கொர்மொரான்ட் நகரைச் சேர்ந்த 12 பேர் தமது வாக்குகளை செலுத்துவதற்கு தலா ஒரு டொலரை கட்டணமாக செலுத்தியுள்ளனர்.

மேயர் பதவிக்காக டியூக்குடன் போட்டியிட்ட மனித வேட்பாளரான ரிச்சர்ட் ஷெர்புறாக் இந்தத் தேர்தலில் படுதோல்வியை தழுவியுள்ளார்.

இந்நிலையில் இந்த நாய் கொர்மொரான்ட் நகர மேயராக உத்தியோகபூர்வமாக பதவி ஏற்கவுள்ளது.

மேற்படி நாய்க்கு மேயர் பதவிக்கான ஊதியமாக உள்ளூர் மிருக உணவு விற்பனை நிலையமொன்று ஒரு வருடத்துக்கான நாய்களுக்கான உணவை வழங்கியுள்ளது.

மேயராக செல்லப்பிராணியொன்று பதவி வகிப்பது இது முதல் தடவையல்ல. கடந்த 17 வருட காலமாக அமெரிக்க அலாஸ்கா மாநிலத்தில் டோக்கீட்னா நகரின் கௌரவ மேயராக ஸ்டப்ஸ் என்ற பூனை பதவி வகித்து வருகிறது.

மேற்படி பூனை பிறந்து சொற்ப காலத்துக்குள் அந்தப் பதவியை ஏற்றிருந்தது.

அந்த பூனை கடந்த வருடம் உளளூர் நாயொன்றால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தாக்குதலில் உயிர் தப்பியமை குறிப்பிடத்தக்கது. (6)




சீனா சுரங்க விபத்தில்

# 140 மணித்தியாலங்களுக்கு பின்னர் உயிருடன் மீண்ட தொழிலாளர்கள்

தென்கிழக்கு சீனாவின் குயிழோ மாகாணத்தில் உள்ள ஷிகியான் பகுதியில் நெடுஞ்சாலை சுரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது.

வழக்கம்போல், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பணிகள் நடைபெற்று வந்த போது, திடீரென்று அந்த சுரங்கம் இடிந்து விழுந்ததால் அங்கு வேலை செய்து கொண்டிருந்த 13 பணியாளர்கள் சுரங்கத்தினுள் சிக்கிக் கொண்டனர்.

இடிந்த சுரங்கத்தின் பக்கவாட்டில் சுமார் அரை கிலோ மீற்றர் நீளமுள்ள மாற்றுச் சுரங்கம் தோண்டப்பட்டு, அதன் வழியாக உள்ளே சிக்கிக் கொண்டவர்களுக்கு குழாய் மூலம் பிராண வாயு மற்றும் உணவு, குடிநீர் ஆகியவற்றை அளித்த அதிகாரிகள் அவர்களை மீட்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர்.

சுமார் 140 மணி நேர போராட்டத்துக்கு பின்னர் அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும், மீட்கப்பட்டவர்கள் அனைவருமே நல்ல உடல்நிலையுடன் ஆரோக்கியமாக இருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

முன்னதாக, டாக்டர்கள் ஆலோசனையின்படி, இவர்களுக்கு உணவாக முட்டை, கஞ்சி, பால், வாழைப்பழம் உள்ளிட்ட சத்தான உணவு வகைகள் வழங்கப்பட்டன என்று அதிகாரிகள் கூறுகின்றனர். (6)

# மதம் மாற மறுத்ததால் 80 பேர் சுட்டுக்கொலை

## ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அட்டூழியம்



ஈராக்கில் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் பல நகரங்களை சன்னி பிரிவு 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் பிடித்துள்ளனர். தற்போது குர்தீஷ் தானிலும் பல இடங்களை கைப்பற்றியுள்ளனர்.

அங்கு மைனாரிட்டியாக வாழும 'யாஷிடி' என்ற பூர்வீக குடிமக்களையும், கிறிஸ்தவர்களையும் இஸ்லாம் மதத்துக்கு மாறுங்கள், இல்லாவிட்டால் கொன்று விடுவோம் என மிரட்டி வருகின்றனர்.

இதனால் அஞ்சும் அவர்கள் சுமார் 50 ஆயிரம் பேர் சிஞ்சார் மலையில் பதுங்கி உள்ளனர். அவர்களுக்கு அமெரிக்க இராணுவம் தண்ணீர் மற்றும் உணவு வழங்கி வருகிறது. இன்னும் பலர் ஊர்களில் தங்கியுள்ளனர்.

சிஞ்சார் அருகே 'கோசோ' என்ற இடத்தில் 'யாஷிடி' இன பூர்வீக குடிமக்கள் உள்ளனர். அங்கு புகுந்த தீவிரவாதிகள் அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டினர்.

அவர்களை ஒரு இடத்தில் அடைத்து வைத்தனர். இஸ்லாம் மதத்துக்கு மாறும் படி 5 நாட்களாக சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் பிறகும் அவர்கள் மதம் மாற மறுத்து விட்டனர்.

அதன் பின்னர் கோசோ கிராமத்தில் ஒரு பள்ளிக்கு அவர்களை அழைத்து சென்று ஆண்கள் 80 பேரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

மேலும், 'யாஷிடி' இன பெண்கள் மற்றும் குழந்தைகளை தல் அபிள் நகருக்கு கடத்தி சென்று விட்டனர். அவர்களின் கதி என்ன என்று தெரியவில்லை. (6)

# சரக்கு கொள்கலனில் லண்டன் வந்த 31 பேர்

## ஒருவர் மரணம்

சரக்கு கொள்கலன் (shipping container) ஒன்றில் மறைந்து கொண்டு வந்திருந்த நிலையில், லண்டன் துறைமுக அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. பெண்கள், சிறார்கள் அடங்கலாக 31 பேர் குறித்த சரக்கு கொள்கலனில் மறைந்திருந்து லண்டனுக்கு வந்துள்ளனர்.

எசெக்ஸில் உள்ள டில்பரி இறங்குதுறையில் வைத்தே அதிகாரிகள் இந்த கொள்கலனை கைப்பற்றியிருந்தனர்.

நெதர்லாந்திலிருந்து வந்த கப்பலொன்று பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தபோது இந்த கொள்கலன் அகப்பட்டுள்ளது.

குறித்த இடத்திற்கு பொலிஸாரும அம்புலன்ஸ் வண்டி பணியாளர்களும் வரவழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை ஊடே அகிம்சையின் நியதியைக் கண்டு பிடித்த ரிஷிகள் நியூட்டனை விட மாபெரும் மேதைகள் - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துறவுக்காகத் துறவு பூண்டவர் கராத்தே பழகுகிறார் காண்!

சமயத் தலைவர்கள் ஒரு போதும் அரசியலில் ஈடுபடலாகாது என்பது நம் தாழ்மையான கருத்து. சமயம் என்பது மனிதர்களைப் பண்படுத்துவது. அதிலும் குருவின் ஊடாக சமய ஞானத்தைப் பெறுவதான ஏற்பாடுகளையே சமயம் செய்துள்ளது.

சமயத் தலைவர்கள் அல்லது சமய குருமார்கள் மனிதர்களை நல்வழிப்படுத்துகின்ற பெரும் பணியைச் செய்யும் நோக்கில் தங்களை அர்ப்பணிப்பவர்கள்.

இந்த உலகியல் வாழ்வின் பற்றுதல்களைக் களைந்து துறவு பூண்டு மக்கள் தொண்டே இறைவன் தொண்டு என்ற நோக்கோடு வாழ்பவர்கள் சமயத் தலைவர்கள்.

எனவே இவர்களிடம் இருப்பது எல்லாம் அன்பென்னும் இன்ப ஊற்றுமட்டுமே.

தங்களை இந்த உலகிற்கு அர்ப்பணித்த துறவிகளின் வாழ்வு காரணமாக நல்ல மனித சமூகம் இந்த வையகத்தில் வாழ்வதற்கு வழி ஏற்படுகின்றது.

எனினும் இன்றைய சூழ்நிலையில் மேற்கூறப்பட்டவை பொருத்தமுடையவையா? என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழுவது நியாயமானதே.

இப்போதெல்லாம் சமயப்பரப்புகை என்ற நோய் உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்க, சமயத் துறவிகள் தங்கள் சமயங்களுக்காகப் போராடும் தீவிரவாதிகளாக மாறி வருகின்றனர்.

பொதுவில் ஒரு சில சமயங்கள் தவிர்ந்த ஏனைய சமயங்கள் இத்தகைய நோக்கில் செயற்படுவது வேதனைக்குரியது.

பிற சமயங்களைத் தூற்றும் வகையில் செய்யப்படும் பிரசாரங்கள், சமயம் மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் இலஞ்ச ஊழல்கள் என்பன சமயங்களிடையே ஒற்றுமையீனத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த ஒற்றுமையீனம் மக்களிடையே மோதல்களை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளன என்பதையும் இவ்விடத்தில் நாம் கூறித்தானாக வேண்டும்.

எங்களின் நாட்டைப் பொறுத்தவரை பௌத்தம் என்ற பெயரில் பௌத்த துறவிகளுக்கு ஆட்சியாளர்கள் கொடுக்கின்ற அளவு கடந்த மதிப்பும் மரியாதையும் பௌத்த துறவிகளை அரசியலின் பக்கமாக நகர வைத்து, மதவாதம் என்ற விதைப்பு அதிவேகமாக நடந்து வருகிறது.

பிற சமயங்களைப் பொருட்டாக மதிக்காத தன்மைகள் ஏற்படுத்தப்படுகின்றன. பௌத்த துறவிகள் சிலர் பயங்கரக் கோபம் கொண்டு இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே வன்முறைகளை ஏற்படுத்தும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வரிசையில் பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் கராத்தே பயிற்சி பெறுவதாகச் செய்திகள் வெளிவந்திருப்பது இலங்கையில் மதவாதம் மேன்மேலும் வலிமை பெறுகின்றது என்பதற்குத் தக்க சான்றாகும்.

கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றும் பொருட்டு துறவு பூண்டு காவி தரித்த தேரர் ஒருவர் கராத்தே பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றால் அதன் நோக்கம் என்ன?

கராத்தே என்பது தற்காப்புப் பயிற்சி. அப்படியானால் கராத்தே பயிற்சியில் ஈடுபடும் ஞான சார தேரர் தன்னையாரிடம் இருந்து பாதுகாப்பதற்காக கராத்தே பயில்கிறார் என்று எண்ணத் தோன்றும்.

நிச்சயமாக பௌத்தர்கள் தேரரை ஒரு போதும் தாக்கமாட்டார்கள். அப்படியானால் ஞானசார தேரர் எடுக்கும் கராத்தே பயிற்சி நெறி பௌத்த மக்களை கருதியது அல்ல. மாறாக ஏனைய மதத்தவர்களை இலக்கு வைத்தது என்றே கூறவேண்டும்.

ஒரு பௌத்த துறவி கராத்தே பயிற்சி எடுக்கும் அளவில் நிலைமை மாறி உள்ளது எனில் இந்த நாடு எந்த வகையிலும் சாந்தி, சமாதானத்தை நோக்கிப் பயணிக்க முடியாது என்பது திண்ணம். இதையே தேரரின் கராத்தே ஞானம் எடுத்துக் காட்டுகிறது.

## நிர்ணயிக்கப்பட்டதை விட அரிசியின் விலை அதிகரிப்பு

### நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நிர்ணய விலையைவிட வர்த்தகர்கள் அதிக விலையில் அரிசி விற்பனையில் ஈடுபடுவதாக நுகர்வோர் குற்றஞ் சாட்டியுள்ளனர். சில பிரதேசங்களில் வர்த்தகர்கள் தங்களின் சுயவிருப்பின் பிரகாரம் அதிக விலையில் அரிசியை விற்பனை செய்வதாக நுகர்வோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் காரணமாக பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேரிட்டுள்ளதாகவும் நுகர்வோர் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி நள்ளிரவு முதல் அரிசி வகைகளுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் மேற்கொண்டிருந்தது.

இதற்கமைய கல், மண் நீக்கப்பட்ட ஒருகிலோகிராம் சம்பா அரிசியின் சில்லறை விலை 77 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

ஒரு கிலோகிராம் நாட்டுப் பச்சையரிசி 68 ரூபாயாகவும், சிவப்பு நாட்டரிசி மற்றும் வெள்ளைப் பச்சையரிசி என்பன 66 ரூபாயாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டது. சிவப்பு பச்சையரிசி ஒரு கிலோகிராமின் விலை 60 ரூபாயாக விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இந்த நிர்ணய விலைகளைவிட அதிக விலையில் வர்த்தகர்கள் அரிசி விற்பனையில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என நுகர்வோர் மற்றும் விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டாளர் அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-6)

## உலகை நோக்கி வரும் 1950 டிஏ என்னும் விண்கல்

1950 டிஏ என்னும் விண்கல் உலகத்தை 2880 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி தாக்கும் என கணக்கிட்டுள்ளனர் விஞ்ஞானிகள். ஆனால் அதற்குள அந்த விண்கல் உலகை தாக்காமல் இருக்கும் வழிமுறைகளை கண்டு பிடித்து விடலாம் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர் .

இந்த 1950 டிஏ விண்கல் 2880 ஆம் ஆண்டு உலகை தாக்க 0.3 சதவீத வாய்ப்புகள்தான் இருக்கிறது.

இந்த விண்கல் 1 கி.மீ அளவு விட்டம் கொண்டது. ஒரு நொடிக்கு 9 மைல் வேகத்தில் சுற்றிக் கொண்டு இருக்கிறது. இந்த வேகத்தில் இந்த விண்கல் துகள் துகள்களாக பிரிந்து விட வேண்டும். ஆனால் அதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை.


இந்த விண்கல் ஒரு வேளை பூமியை தாக்கினால் 44 ஆயிரத்து 580 மெகா தொன் அளவு குண்டு வெடித்தால் என்ன தாக்கம் இருக்குமோ அதே அளவு தாக்கத்தை ஏற்படுத்தும்

மேலும் சுனாமியை ஏற்படுத்தும். உயிர்களுக்கு கடுமையான பாதிப்பை உண்டாக்கும்.

ஆனால் அதற்குள் இந்த விண்கல்லின் பாதிப்பை தடுத்துவிடலாம் என ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர.(எ-6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



இருவழியை அடையென்றோ னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவரும் றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
திருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**17.08.2014 இற்கான வினா**

**ஓம் எனும் பிரணவ மந்திரத்தை அடிக்கடி உச்சரிப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

**16.08.2014 இற்குரிய கேள்வியும் விடையும்**

**ஓம் நமசிவாய எனும் ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்புக்கள் எவை?**

வேதம் நான்கினும் மெய்ப்பொருளாய் இருப்பது (திருஞானசம்பந்தர்)
நற்றுணையாவது (திருநாவுக்கரசர்)
சிவ சின்னங்களில் ஒன்று
ஞானத்தையும் கல்வியையும் வழங்கி நன்னெறியில் நிற்க வைப்பது
வேதமந்திரங்களை வரிசைப்படுத்தும் போது ஸ்ரீருத்ரம் நடுவில் வருகிறது.
இந்த ஸ்ரீருத்ரத்தின் மையத்தில் நமசிவாய வருகிறது.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## "பிரிவுகள், பிளவுகள், வேற்றுமைகள் இல்லாத புதிய சமுதாயத்தை, சமயத்தை உருவாக்க உழைப்போம்"

இன்றைய பைபிள் பகுதியில் தாய் மையின் மேன்மை வெளிக் கொணரப்படுகின்றது எனலாம். ஒரு தாயின் விடாப்பிடியான வேண்டுதலையும், அதன் இறுதி வெற்றியையும் இன்றைய பைபிள பகுதி எடுத்துக் காட்டுகின்றது. கனானியப் பெண்ணின் நம்பிக்கையை இயேசு நன்றாகவே சோதித்துப் பார்த்து விட்டார் என்றும் கூறலாம். பிள்ளைகளுக்குரிய உணவை நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல என்ற கடுமையான மறுமொழி கூட அந்தத் தாயின் நம்பிக்கையை, எதைச் செய்தாவது தன் மகளைக் குணப்படுத்திவிட வேண்டும் என்ற அன்பின் பிடிவாதத்தை, அன்பின் தளராத் தன்மையைத் தோற்கடிக்க முடியவில்லை. உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்

### பரமபிதா காட்டிய பாதை

குட்டிகள் தின்னுமே என்று கூர்மதியுடனும், பணிவன்புடனும் பதில் சொல்லி இயேசுவன் வியப்புடன் கூடிய பாராட்டையும், மகளுககு நலத்தையும் பெற்றுக் கொண்டார்.

"பிள்ளைகளின் உணவை நாய்களுக்குப் போடுவது முறையல்ல. முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும்" என்கிறார் இயேசு. ஆனால் அதற்கு அந்தப் பெண் அளித்த மறு மொழியோ இயேசுவையே ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. ஆம், ஐயா ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே என்றாள் அப்பெண். அவளது அசையாத நம்பிக்கையையும் பணிவன்பையும் கண்ட அவர் மனதுருகினார். அப் பெண்ணின் மகளை அவள் விரும்பியது போல் உடனடியாகவே குணப்படுத்தினாா.

இயேசுவை அணுகிவந்த கனானியப் பெண்ணுக்கும் இயேசுவுக்கும் இடையே நிகழ்கின்ற உரையாடலில் பல சிறப்பு அம்சங்கள் உண்டு. அப்பெண் இயேசுவிடம் முழு நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் இயேசுவை மூன்று முறை "ஐயா" என்றும், "தாவீதின் மகனே" என்றும் அழைக்கிறார். இந்த இரு வார்த்தைகளும் இயேசுவை மெசியா என அப்பெண் கருதியதையே காட்டுகிறது.

எந்த நிலையிலும்கடவுளின்வல்லமை யில் நம்பிக்கை கொண்டு அவரை அணுகுவோர் ஏமாற்றமடையார் என்பதற்கு இப் பெண்ணின் ஆழ்ந்த நம்பிக்கை எமக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

பைபிளில் நற்செய்தியில் நமக்குக் காடடப்படும் இயேசு சில நேரங்களில் புரியாத புதிராக விளங்குகிறார். அவரைப் புரிந்து கொள்ள சிரமமாக உள்ள ஒரு நற்செய்திப் பகுதி இன்று நமக்குத் தரப்பட்டுள்ளது.

இயேசுவன் கடினமான சொற்களையும வேறொரு கண்ணோட்டத்துடன் புரிந்து கொண்டு அப்பெண் தன் விண்ணப்பத்தை மீண்டும் இயேசுவிடம் வைக்கிறார். தளராத, உறுதியான விசுவாசத்தின் ஓர் எடுத்துக்காட்டாக அந்தக் கானானியப் பெண் நமக்கு முன் உயர்த்தப்படுகிறார் "அம்மா, உமது நம்பிக்கை பெரிது. நீர் விரும்பியவாறே உமக்கு நிகழட்டும்" என்று இயேசு அவரை அனுப்பி வைக்கிறார்.



இஸ்ரயேல்மக்களுக்கும பிறருக்கும் உள்ள பிரிவுகளை, உயர்வு, தாழ்வுகளை இயேசுவேண்டுமென்றே குத்திக் காட்டும் விதத்தில் கூறும் போதும் அப்பிளவுகளை எல்லாம் தாண்டி, இறைவனின் கருணையும் உண்டு என்பதை ஆணித்தரமாக உணர்த்திய கானானியப் பெண்ணிடம் நாம் கற்றுக் கொள்ளக்கூடியப் பாடங்கள் பல உள்ளன. அந்தப் பெண் கொண்டிருந்த விசுவாசத்தின் ஆழத்தைக் கண்ட இயேசு, அவர பிற இனத்தைச் சாரந்த ஒரு பெண் என்பதையெல்லாம் புறம் தள்ளி, அவரது விசுவாசத்தை கூட்டத்திற்கு முன் புகழ்ந்துள்ளாரே. அங்கும் நமக்குப் பாடங்கள் உள்ளன.

பிளவுகள், பிரிவுகள், ஏற்றத் தாழ்வுகள் ஆகியவற்றால் நிறைந்து வெறுப்பை உமிழ்ந்து வரும் இன்றைய உலகில் வேறுபாடுகளை களைந்து மனிதம் போற்ற மனிதம் வளர்க்க பாடுபடுதல் வேண்டும். அப்போதுதான் பிரிவுகள், பிளவுகள், வேற்றுமைகள் இல்லாத புதிய சமுதாயத்தை காணமுடியும் அப்போதுதான அனைத்து மக்களினங்களும் அனைத்து சமயங்களும் இணைந்து மண்ணில் மனிதத்தை மலரச் செய்ய முடியும்.

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டம்

முல்லைத்தீவு உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் வாரம் முல்லைத்தீவு பிரதேச செயலக விளையாட்டு மைதா னத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டியில் 22 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

# கப்டன் பதவியில் டோனி சாதனை




இங்கிலாந்துக்கு எதிராக அதிக டெஸ்டில் கப்டனாக பணிபுரிந்த இந்திய கப்டன் என்ற சாதனையை டோனி பெற்றார்.

அவரது தலைமையில் 15 ஆவது டெஸ்டில் விளையாடிய வருகிறது. இதற்கு முன்பு கவாஸ்கர் 14 டெஸ்டுக்கு தலைமை வகித்ததே அதிகபட்சமாக இருந்தது.

வெளிநாட்டு மண்ணில் அதிக டெஸ்டில் கப்டன் பதவி வகித்தவர் என்ற சாதனையில் கங்குலியுடன் டோனி இணைந்தார்.

இருவரும் தலா 28 டெஸ்டுக்கு வெளிநாட்டில் கப்டனாக இருந்துள்ளனர். அசாருதீன் அதற்கு அடுத்த நிலையில் (27 டெஸ்ட்) உள்ளார். (க)

# பலாலி விண்மீன் வி.கழகத்தின் மாவட்ட ரீதியான உதைபந்தாட்டம்

## நவஜீவன்ஸ், திக்கம் இளைஞர் வெற்றி



தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

அண்மையில் வல்வை றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகமும் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

ஆட்டம் ஆரம்பமாகி நான்காவது நிமிடத்திலேயே நவஜீவன்ஸ் அணி சார்பாக கலைஞானரதன் கோல் ஒன்றை அடித்தார்.

பதிலுக்கு ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் யங்கென்றிஸ் அணியின் சார்பாக ஞானம் கோல் ஒன்றினை அடித்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். இடைவேளைக்கு 3 நிமிடங்கள் இருந்த போது நவஜீவன்ஸ் அணியின் உசாணன் ஒரு கோலைப் போட இடைவேளையின் போது நவஜீவன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் உசாணனும் ஞானமும் மீண்டும் தங்கள் அணிக்கு கோலைப் பெற்றுக் கொடுக்க நவஜீவன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணியும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் மோதின.

திக்கம் விளையாட்டுக் கழக அணி சார்பாக சிறப்பாக விளையாடிய அன்ரூ அடுத்தடுத்து 3 கோல்களையும் தீபன் ஒரு கோலையும் போட திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி முன்னிலை வகித்தது.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக பிரகாஷ் ஒரு கோலை அடித்து ஆறுதல் அளித்தார்.

ஆட்டமுடிவில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)

# தாச்சி போட்டி முடிபுகள்

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி சங்கம், தாச்சி போட்டிகளை நடத்தி வருகின்றது.

இப் போட்டிகள் மின்னொளியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இப் போட்டிகளில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகமும் ஆனைக்கோட்டை நடன விநாயக விளையாட்டுக் கழகமும் மோதிய போட்டியில் போட்டியின் ஆரம்பம் முதலே கட்டுப்பாட்டில் வைத்திருந்த தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் முதற் பாதியில் 8 பழங்களைப் பெற பதிலுக்கு ஆனைக்கோட்டை நடன விநாயக விளையாட்டுக் கழகம் 3 பழங்களைப் பெற்றது.

இரண்டாவது பாதியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் மேலும் 8 பழங்களைப் பெற பதிலுக்கு ஆனைக் கோட்டை நடன விநாயக விளையாட்டுக் கழகம் ஒரு பழத்தையே பெற்றது.

இதனால் இப் போட்டியில் 16:4 என்னும் பழங்கள் அடிப்படையில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றிற்கு முன்னேறியது.

இடம்பெற்ற மற்றைய போட்டியில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதியது.

ஆரம்பத்திலிருந்தே விரைவாக ஆடிய சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் அடுத்தடுத்து பழங்களை பெற்று முதல் பாதி நிறைவுறுகையில் 4 பழங்களைப் பெற்றிருக்க பதிலுக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 3 பழங்களை பெற்றது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் மேலும் 8 பழங்களைப் பெற பதிலுக்கு உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் 2 பழத்தையே பெற்றது.

இதனால் போட்டியில் 12:5 என்னும் பழங்கள் அடிப்படையில் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றிற்கு முன்னேறியது. (க-23)

# கடி மன்னனின் தண்டனை தளர்வு




பிரேசிலில் நடந்த உலக கோப்பை காற்பந்து போட்டியில் தொடக்க சுற்றில் இத்தாலி அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது உருகுவே அணியின் முன்கள வீரர் சுவாரஸ், எதிரணியின் பின்கள வீரர் ஜியார்ஜியோ ஷிலினியின் தோள்பட்டையில் கடித்து விட்டார்.

பெரும் சர்ச்சையை கிளப்பிய இந்த கடி விவகாரம் குறித்து விசாரணை நடத்திய சர்வதேச காற்பந்து சங்க (பிபா) ஒழுங்கு நடவடிக்கை குழு உடனடியாக சுவாரஸ்சை சஸ்பெண்டு செய்ததுடன், 4 மாத காலம் கால்பந்து தொடர்பான எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளவும் கடந்த ஜூலை 26 ஆம் திகதி தடை விதித்தது.

பின்னர் சில நாட்களில் செய்த தவறுக்காக சுவாரஸ் வருத்தம் தெரிவித்தார்.

இதற்கிடையில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்க வேண்டும் என்று சுவாரஸ் தரப்பில் சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை விசாரித்த விளையாட்டு தீர்ப்பாயம் சுவாரஸ்சுக்கு அளித்த தண்டனை காலத்தை குறைக்காவிட்டாலும், தண்டனையில் சில தளர்வுகளை அவருக்கு நேற்று முன்தினம் அளித்தது. காற்பந்து தொடர்பான எந்தவித நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையையும், அணியினருடன் இணைந்து செயற்பட விதிக்கப்பட்ட தடையையும் விளையாட்டு தீர்ப்பாயம் தளர்த்தியது.

இதைத்தொடர்ந்து, லிவர்பூல் கிளப்பில் (இங்கிலாந்து) இருந்து பார்சிலோனா (ஸ்பெயின்) கிளப்புக்கு சமீபத்தில் மாறியும் அணியினருடன் இணைந்து செயற்பட முடியாமல் தவித்த சுவாரஸ் நேற்று பார்சிலோனா கிளப் பயிற்சி முகாமில் இணைந்தார்.

காட்சி போட்டிகளில் சுவாரஸ் விளையாட முடியும். ஆனால் அங்கீகாரம் பெற்ற போட்டிகளில் ஒக்டோபர் 25 ஆம் திகதி வரை சுவாரஸ் விளையாட முடியாது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டி

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சி சங்கம் தாச்சி போட்டிகளை நடத்தி வருகின்றது.

இப் போட்டிகள் மின்னொளியில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இப் போட்டிகளில் காலிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை இடம பெறவுள்ள போட்டியில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

தொடர்ந்து அரையிறுதிப் போட்டிகள் எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் அறிவித்துள்ளது. (க-23)

# உதைபந்தாட்டம்

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்குபற்றும், விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்து ள்ளனர். (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை சூறையாடினார் ரங்கன ஹேரத்



ரங்கன ஹேரத் கைப்பற்றிய சாதனை மிக்க 9 விக்கெட்டுக்களின் உதவியுடன் இலங்கை அணி நேற்றைய 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் முன்னிலையில் உள்ளது.

பாகிஸ்தான் - இலங்கை அணிகளுக்கு இடை யிலான 2-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடந்து வருகிறது. போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத தாடிய இலங்கை அணி தமது முதல் இன்னி ங்சுக்காக அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 320 ஓட்டங்கள் குவித்தது.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி நேற்று முன் தினம் 2-ம் நாள் ஆட்டநேர முடிவில் 6 விக் கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

இந்நிலையில் நேற்றைய 3-ம் நாள் ஆட்ட த்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் அணி, சப்ராஷ் அகமட்டின் (103) சிறப்பான சதத்தின் உதவியுடன் தமது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்து 332 ஓட்டங்களை எடுத்து இல ங்கை அணி முதல் இன்னிங்ஸில் எடுத்த ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 12 ஓட்டங் களால் முன்னிலை வகித்தது. இலங்கை தரப் பில் மிரட்டியெடுத்த ரங்கன ஹேரத் 9 விக் கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார். 12 ஓட்ட ங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி நேற்றைய 3-ம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களை எடுத்துள்ளது. இதன்மூலம் 8 விக்கெட்டுக்கள் கைவச முள்ள நிலையில் 165 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. களத்தில் சங்க க்கார, ஜெயவர்த்தன ஆகியோர் முறையே 54, 49 ஓட்டங்களுடன் உள்ளனர். போட்டி யின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பஸ் மீது தாக்குதல் நடத்துநர் கைது

(பருத்தித்துறை)

மது போதையில் பேருந்துக்கு கல் எறிந்த நடத்துநர் ஒருவரை பருத்தித்துறைப் பொலி ஸார் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று மாலை 5.45 மணி யளவில் பருத்தித்துறை முனை முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இதில் பேருந்தின் பின்பக்கக் கண்ணாடி சேதம் அடைந்தது. இந்தச் சம்பவம் தொடர் பாக மேலும் தெரியவருவதாவது,

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தின் பின் பக்கக் கண்ணாடியை இல க்கு வைத்து அந்தச் பேருந்தின் நடத்துனராக பணி புரிந்து வந்தவர் கல் வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இத்தாக்குதல் மேற்கொண்ட வேளை அவர் மது போதையில் இருந்ததாக பருத்தித் துறைப் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை குறித்த நடத்துநரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வும் தெரிவித்தனர். (எ-6,10)

# முதலமைச்சர் அலுவலக பாதுகாப்பு சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

கோரிக்கைகளையும் மீறி வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்கான பாது காப்பு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள் நேற்று சனிக்கிழமையுடன் நிறுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து கடந்த 11ஆம் திகதி வடக்கு மாகாண பிரதம செயலாளர் முதலமைச்சர் அலுவலகத்துக்கு தொலைநகல் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

எனினும் கால அவகாசம் போதாது என்றும் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை தொடர்ந்தும் குறித்த சேவைகளை வழங்கியு தவுமாறும் பிரதம செயலாளருக்கு முதல மைச்சர் கடிதம் எழுதியிருந்தார்.

பிரதம செயலாளரின் அறிவிப்பின்படி, நேற்று முன்தினம் 15ஆம் திகதியுடன் இச் சேவைகள் தொடர்பான உடன்பாடு முடிவ டைந்துள்ளது.

முதலமைச்சரது கோரிக்கை கருத்தில் கொள்ளப்படாது சேவைகள் நிறுத்தப்பட்டு விட்டன. மாற்று நடவடிக்கையை எவற்றை யும் எடுக்காது, பிரதம செயலாளர் திருகோ ணமலை சென்று விட்டார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (எ-6)

## புற்றுநோயின்...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த யூலை மாதம் 28 ஆம் திகதி பி.ப 3 மணியளவில் திருமதி பிரசாத் அஜந்தா (வயது 23) பலாலி வைத்தியசாலையிலிரு ந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேல திக சிகிச்சைக்காக மாற்றப்பட்டிருந்தார்.

ஆரம்பத்தில் குறித்த பெண்ணிற்கு வயி ற்று நோவும் தலைவலியும் இருந்து வந்துள் ளதோடு அதற்கான சிகிச்சையும் பெற்று வந் துள்ளார். இவற்றோடு குறித்த பெண்ணிற்கு புற்றுநோய் இருந்துள்ளதோடு அதற்கான சிகிச்சையும் பெற்று வந்துள்ளார்.

புற்று நோய்க்கு சத்திர சிகிச்சைப் பிரிவான 166 விடுதியிலும் புற்றுநோய் பெண்கள் விடு திப் பிரிவிலும் சிகிச்சை பெற்று வந்துள்ளார். புற்று நோய்க்கான இரண்டாம் நிலையில் குடலடைப்பு ஏற்பட்டு அதனால் வாந்தி மற்றும் வயிற்று வலியென்பனவும் ஏற்பட்டுள்ளது.

இந் நோய்களிற்கான சிகிச்சையளிக்கப் பட்டு வந்த போதிலும் சிகிச்சை பலனளிக்கா மையினால் கடந்த 14 ஆம் திகதி உயிரிழந்து ள்ளார்.

பிரஸ்தாப பெண்ணிற்கு புற்றுநோய் மற் றும் இவ்வாறான நோய் அறிகுறிகள் காணப் படுகின்ற நிலையில் இராணுவ பயிற்சி போன்ற கடினமான பயிற்சிகள் வழங்க முடி யுமா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போது,

சாதாரணமாக இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுவதற்கு முன்னால் மருந்துவ பரி சோதனைக்கு உட்படுத்தப்படல் அவசியமான தாகும்.

இவ்வாறான நோயுள்ள ஒருவருக்கு கடி னமான பயிற்சிகள் வழங்குவது தவறாகும் எனவும் பதிலளித்தார் பணிப்பாளர்.

குறித்த பெண் உயிரிழந்தமைக்கான கார ணம் வெளிப்படையாக தெரிந்துள்ளமை யினால் பிரேத பரிசோதனைக்கு சடலம் உட் படுத்தப்படவில்லை என்பதனையும் கூறினார்.

மேலும் உயிரிழந்த பிரஸ்தாப பெண் புற்று நோய்க்கு கடந்த இருவருட காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் மேலும் தெரிவித்தார். (எ-4)

# யாழ்.போதனா வைத்தியசாலை புதிய அபிவிருத்திக்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடை பெற்றுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரசன்னத்துடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. இதில் தலைவராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவு செய்யப் பட்டார்.

செயலாளராக இரா.செல்வவடிவேல் நிய மனம் செய்யப்பட்டார். கூட்ட நிறைவின் போது அபிவிருத்திக்குழு உறுப்பினர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது (எ)

## பளையில்...

மோட்டார் செல்லை மீட்டதாகப் பொலி ஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை யர்ழ், பளை வேம்படிக் கேணி பகுதியிலுள்ள தனியார் காணியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து எம் 75 கைக் குண்டொன்றும். ஆர்.வி.ஜி செல்லொன்றும் நேற்று மாலை 4.30 மணிக்கு மீட்கப்பட்ட தாக பளை பொலிஸார் தெரிவித்தனர்.

கிணற்றில் நீர் வற்றியுள்ள நிலையில் உரி மையாளர், கிணற்றை பார்த்த போது கிணற்று க்குள் செல்லிருப்பதனைக் கண்டு பளை பொலிஸ நிலையத்திற்கு அறிவித்துள்ளார்.

அதனையடுத்து, இராணுவத்தினருடன் பொலிஸார் சென்று மேற்படி கைக்குண்டை யும் ஆர்.வி.ஜி செல்லையும் மீட்டதாகப் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-60,6)

## இலங்கைக்கும்...

நாட்டில் பௌத்த பலத்தை மேலோங்கச் செய்வதே தமது நோக்கம் என பொது பல சேனா சுட்டிக் காட்டியுள்ளது. சிங்கள பௌத்த மத உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். பௌத்த மதக கோட்பாடுகளையே தாம் பின் பற்றி வருவ்தாகவும், வன்முறைகள், மனிதா பிமானமற்ற நடவடிக்கைகளில் உடன்பாடி ல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறியளவிலான முஸ்லிம் கள் வாழ்ந்து வந்த போதிலும் சர்வதேச வலையமைப்பு வலுவாகக் காணப்படுகின் றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெரும் பான்மையான முஸ்லிம்கள் அப்பாவிகள் என்ற போதிலும், கடும்போக்குவாதிகள் அப் பாவி முஸ்லிம்களை மனம் மாற்றி விடுவா ர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் கடும்போக்குவாத கொள்கைகளை எப்போதும் பின்பற்றியதில்லை என அவர் சுட் டிக்காட்டியுள்ளார். மதத்தைப் பாதுகாப்பதே பிரதான இலக்கு என அவர் குறிப்பிட்டுள் ளார். பௌத்தர்கள் மிகவும் அமைதியானவர் கள் எனவும் முஸ்லிம்களே பிரச்சினைகளை தூண்டி விடுவதாகவும் அவர் தெரிவித்து ள்ளார். (எ-6)

## மழை வேண்டி...

வடக்கு மாகாணத்தில் சீரான மழை பெய் யாத காரணத்தால் கடும் வரட்சி ஏற்பட்டு ள்ளது. இதனால் பொதுமக்களும் கால்நடை களும் குடிதண்ணீருக்கு அலையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மழை வேண்டி சிவத்தமிழ் அர்ச்சகர்கள் செந்தமிழ் திருமறை யில் இந்த யாகத்தை நடத்தவுள்ளனர். (எ-6)

## தமிழக...

காக ஒரு சில மீனவர்களை அவர் களின் படகுகளுடன் கைது செய்து விட்டு, பின்னர் அவர்களை விடுதலை செய்வதென்பது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றும் இதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் வட மாகாண கடற்றொழி லாளர் இணையம் கூறியுள்ளது.

இரு தரப்பினரும் ஒன்றிணைந்து பேச்சு க்களை நடத்தி, இந்தப் பிரச்சினைக்கு நிரந்த ரத் தீர்வொன்றைக் காண்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் கோரி யிருக்கின்றது.

அதேவேளை, காலம் காலமாக நடைபெற்று வந்தது போன்று நாட்டின் தென்பகுதியில் உள்ள பெரும்பான்மை இன மீனவர்கள் பருவ காலத்தில் வடபகுதிக்கு வந்து தொழில் செய்துவிட்டு உடனடியாகத் திரும்பிச் செல்ல வேண்டும் என்றும் அவர்களை நிரந்தர மாக வடபகுதியில் குடியிருத்தி முழுமையா கத் தொழில் செய்வதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் அந்த அமைப்பின் பொதுக்கூட்ட த்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் இன்னும் மீள குடியேற்றம் செய்யப் படாதுள்ள, இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடி யேற்றுவதற்கு நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானம் நிறை வேற்றியுள்ள கடற் றொழிலாளர் இணை யம், குறிப்பாக வலிகாமம் வடக்கு பிரதேசத் தைச் சேர்ந்த மக்கள் பல வருடங்களாக இடம்பெயர்ந்தவர்களாக இன்னும் இருக்கின் றார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

வடபகுதி மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்திற்குப் பதிலாக அரசாங்கம் வலை களை வழங்கியுள்ளது. விலையேற்றப்பட் டுள்ள எரிபொருளைப் பெறுவதற்கு மீனவர்க ளிடம் வசதியற்ற காரணத்தினாலேயே அவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்க ப்பட்டது. ஆனால் அந்த மானியத்தை வழங் காமல், அவர்களுக்கு வலைகளை வழங்கு வதால் எந்தப் பயனும் கிடையாது என்றும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தின் பின்னர் நடை பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மீனவர் ஒத் துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாள ரும், சர்வதேச கடற்றொழிலாளர் சம்மேள னத்தின் இலங்கைக்கான பிரதிநிதியுமான ஹேர்மன் குமார, தேசிய மீனவர் ஒத்துழை ப்பு இயக்கத்தின் வடக்கு கிழக்கு மாகாண ங்களுக்கான இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பிரதித் தலைவர் எம்.எம். ஆலம் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மீனவர் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (எ-6)

## சீனாவுக்கு...

இது தொடர்பாக கிழக்கு மாகாண முதல மைச்சரின் பதிலை எதிர்பார்த்து அவர் முன் னறிவித்தல் கொடுத்துள்ள தனி நபர் பிரேர ணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை துறைமுகம் அமைந் துள்ள பகுதியில் சுமார் 1200 ஏக்கர் நிலம் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துக்காக சீன நாட்டிற்கு நீண்ட கால குத்தகையில் வழ ங்கப்படவிருப்பதை கிழக்கு மாகாண முதல மைச்சர் அறிவாரா?

இது தொடர்பாக கிழக்கு முதலமைச்ச ருடன் அல்லது கிழக்கு மாகாண அமைச்சர் கள் வாரியத்துடன் ஆலோசிக்கப்பட்டதா? போன்ற வினாக்களை உள்ளடக்கிய அவ ரது பிரேரணையில், குறித்த காணி குத்த கைக்கு வழங்கப்படும் நிலை ஏற்படும் போது 450 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் குடு ம்பங்கள் பாதிக்கப்படுவதோடு, இந்து,இஸ் லாமிய மத வழிபாட்டு தலங்களும் பாதிக்க ப்படும் ஆபத்து உள்ளதென்றும் அவரால் முன் வைக்கப்பட்டுள்ள அந்தப் பிரேரணை யில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-6)

## பௌத்தத்தை...

ளதாக அரசியல்வாதிகள் அறிவித்துள்ளனர்.

சில கடும்போக்குவாத அமைப்புக்களின நடவடிக்கைகளினால் பௌத்த மதத்தின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன குற்றம் சுமத் தியுள்ளார்.

பொது பல சேனா இயக்கத்திற்கு சவால் விடுக்கும் வகையில் இந்த புதிய அமைப்பு இயங்கும் என உத்தியோகப்பற்றற்ற தகவ ல்கள் தெரிவிக்கின்றன. (எ-6)


## வேலைவாய்ப்பு

யாழ்.குடாநாட்டில் முதன்மை நிறுவனமான Optimo International சர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 15 பதவிவெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பமாகின்றது. விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுக்கான நேரத்தினை உறுதிப்படுத்துங்கள்.

- தகைமை O/L மட்டும் போதுமானது
- முன் அனுபவம் அவசியமில்லை

(7431)

தொடர்புகளுக்கு: 0771882507


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாக்.விமான...

தரப்பினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடை யில் இடம்பெற்ற மோதல்களில் 10 தீவிரவாதி களும் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் படையதிகாரி ஒருவர் கூறுகையில், பாகிஸ்தான் படைத் தரப பினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மீறி நேற்றுமுன்தினம் காலை விமானப் படைத் தளத்துக்குள் நுழைய முயன்ற இரு தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதன்போது பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பாகிஸ்தான் படைத்தரப்பினர் நிலைகுலைந்தனர். இதனை சாதகமாக்கிக் கொண்ட தீவிரவாதிகள் உள்ளே நுழைய முயன்ற போது அனைவரும் படைத்தரப்பினரின் பதில் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலுக்கு தெஹ்ரிக் இ தால் பான் இயக்கத்தின் கலிப் மசூத் அமைப்பு பொறுப பேற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன், வடக்கு மற்றும் தெற்கு வசிரிஸதான் பகுதியில் படைத்தரப்பினரால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பலி தீர்க்கும் விதமாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் இவ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ-6)

## மின்...

றுள்ளது.

சுமார் ஏழு மாதங்களின் பின்னர் வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த அடைமழையை அடுத்து ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் போதே இவ் விருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

## சீன...

மேற்கொண்டு சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் செப்டெம்பர் மாதம் 16ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

சீன ஜனாதிபதியொருவர் முப்பது வருடங்களுக்கு பிறகு இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரசியல் பிரமுகரகளை அவர சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதுடன் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது கட்டத்தையும் ஆரம்பித்து வைப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-6)


### காணி விற்பனைக்கு

கந்தர்மடம் பலாலி வீதிக்கு அருகாமையில் 1 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:-0758496213

(7404)

### Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC

### உடனடி வேலைவாய்ப்பு

✔ தமிழ், சிங்களம், ஆங்கிலம், டொச், பெரென்ஸ், மொழிகளில் தேர்ச்சி பெற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

✔ சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் நல்லூர் கோவில் உற்சவ கால பகுதி நேரப் பணிக்காக.

தொடர்பு:-க.அருந்தவராஜா

128, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

0710920920

(சி-8216)

### நிரந்தர வேலைவாய்ப்பு

உங்கள் வயதிற்கேற்றவாறு நிரந்தர தொழில் மற்றும் தொழிலுக்கேற்ற சம்பளம் 18000/-, 32000/- +, 18-50 வயது ஆண்/ பெண் "கொழும்பை" அண்மித்த பிரதேசங்களில் பால்மா/ டொபி/கோடியல்/ Oil/Tipi Tip/ கிளவுஸ்/Paint/ Pvc... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி உதவியாளர்/ லேபல்/ பொதியிடல்/Loading/ Unloading போன்ற பிரிவுகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.(நண்பர்கள், குழுக்கள், தம்பதியர் ஒரே தொழிற்சாலைகளில்) உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் (வருகை அன்றே வேலைக்குச் செல்லலாம்.)

தகவல்களுக்கு-சசி: 0771116770

(C-8212)

### Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும் ஆரம்ப

✱ French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.

✱ வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.

✱ Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.

✱ Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy — அனைத்து புதிய வகுப்புகளும் திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-8202)

### மாபெரும் ஆடித் தள்ளுபடி

யாழ். நகரில் முதன் முறையாக ஒரே கூரையின் கீழ் அனைத்து கம்பனிகளினதும் பொருட்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள ஒரே இடம்....



இலவசப் பொருட்கள்

அனைத்து விதமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளுக்குத்தேவையான மர, இரும்பு, அலுமினிய, பிளாஸ்ரிக் தளபாடங்களை எங்குமில்லாதவாறு வியக்கத்தக்க விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்

அழையுங்கள் 077 358 3879 077 831 4201

PABCO Nilkamal ARPICO Piyestra DAMRO

இல: 15, சிவப்பிரகாசம் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-8210)

### Inter Lock Paving Stone

நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

உறுதியான பல வடிவங்களில் கறுப்பு, சிவப்பு, வெள்ளை நிற நிலப்பதிபுக்கற்களை (Inter lock) எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு

077 3818799

உங்கள் இருப்பிடத்திற்கு இறக்கித்தரப்படும்.

Special Discounts for Engineers

(C-8211)

பிரணவன் என்ரபிறைசஸ்

635, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

### ரமி இசைத்தட்டின் மாபெரும் மலிவு விற்பனை

உலகத் தமிழர்களின் உச்ச நிறுவனம்

ராஜா நகரில் வீற்றிருக்கும் நல்லூர் கந்தசாமி கந்தனின் மஹா உற்சவ திருநாளை முன்னிட்டு சுவிசில் இருந்து மூன்று இடங்களில் முகாமிட்டு நடத்தி வருகிறோம்.

இலங்கையில் உள்ள அத்தனை தமிழ் மக்களும் எதிர்பார்க்காத விலையில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம். அனைத்தும் ஒரிஜினல் சிடிக்கள். கம்யூட்டர் பதிவுகள் அல்ல என்பதை மக்கள் அறிய வேண்டும்.

Contact: KANTHAN 0779704753




கொடியேற்றத்திலிருந்து 01.08.2014 மலிவு விற்பனை ஆரம்பம் இதனை தொடர்ந்து துர்க்கை அம்மன் (சப்பறம், தேர், தீர்த்தம்), சன்னதி முருகன் (6ம் நாளிலிருந்து தீர்த்தம் வரை), வல்லிபுரம் ஆழ்வார் (சப்பறம், தேர், தீர்த்தம்) உற்சவ நாட்களிலும் எமது மலிவு விற்பனை.

30 ரூபாயிலிருந்து விலை ஆரம்பம்

விற்பனை நடைபெறும் இடம் : கோவில் வீதி, 231 நல்லூர் யாழ்அருவி (சுவிஸ் மினரல் வாட்டர் கம்பெனி)

விற்பனை நடைபெறும் இடம் : லிங்கம், ரியோ கூல்பார் (நடுவே அமைந்துள்ளது)

(7220)

### SYLO ஐஸ் கிறீம் SWEET YOUR LIFE ORBIT

உங்கள் அபிமான SYLO ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் இம்முறை நல்லூரில் இல.251C பருத்தித்துறை வீதியில் (கோயில் முன்புற வீதி) தமது விற்பனை நிலையத்தை அமைத்துள்ளதுடன் பிரதி வெள்ளிக்கிழமை சந்நிதி முருகன் கோவிலிலும் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர கோவிலிலும் தமது விசேட விற்பனை வாகனத்தை நிறுத்தியுள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.

இவ்விளம்பரத்தை எடுத்து வந்து இலவசமாக உங்களுக்கான 25/- பெறுமதியான ஐஸ் கிறீமை சுவைத்து மகிழுங்கள்

தரம், சுவை, சுகாதாரம் விரும்புபவர்கள் ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

021 492 6003

SYLO FOOD & BAVAREGES (Pvt) Ltd இல.76, அம்மன் கோவில் வீதி கொக்குவில், கிழக்கு

(7207)

### திருமுருகன் கொம்நெற் (பிறைவெட்). லிமிட்டெட்

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள்சேவை

விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

THIRUMURUGEN COM NET (PVT) LTD.

- 11kg விற்கு மேற்பட்ட பொதிகளுக்கு மிகக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
- தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள்
- CD, DVD என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
- 220 நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.
- 3-5 வேலைநாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.

இல. 271A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 7835

TCN Express 2b Nelsan Place, Colombo - 6.

Packing & Courier

வாரத்தில் ஏழு நாட்களிலும் எமது சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.

20 வருடங்களுக்கு மேல் முதன்முதலில் எமது நிறுவனம் பொதிகள் சேவையில் முன்னிலையில் திகழ்ந்து நேரடி முகவராக தனி இடம் பிடித்துள்ளது.

இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி — இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

இல.18, பிரதான வீதி, நெல்லியடி. — பிரதான வீதி, சங்கானை. (வைத்திலிங்க கட்டிடம் மேல்மாடி, ஆசை பிள்ளை நகைக்கடை முன்பாக)

குறிப்பு: எமது நிறுவனம் இங்கே குறிப்பிடப்பட்ட இடங்களில் மட்டும் [illegible] அறியத்தருகின்றோம்.

(C-7170)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org